இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 84 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 06,சனிக்கிழமை 18.02.2017

முல்லைத்தீவு மக்களின் அறவழிப்போருக்கு ஆதரவாக

## வடக்கு முழுவதும் பாடசாலைகளில் திங்களன்று கவனயீர்ப்பு

முல்லைத்தீவு, பெப். 18
அறவழியில் நிலமீட்புப் போரைத் தொடுத்துள்ள முல்லைத்தீவு மக்களுக்கு ஆதரவாக வடக்கு மாகாணம்தழுவியதொடர்போராட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. வடக்கிலுள்ள சகல பாடசாலைகளின் மாணவர்களும் >> 24

# தீர்மானத்தில் மாற்றம் செய்ய இடமளிக்க வேண்டாம்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திடம் கூட்டமைப்பு நேற்று நேரில் வலியுறுத்து

ஜெனிவா, பெப்ரவரி 18
ஐ.நா. தீர்மானத்தில் எந்தவொரு மாற்றமும் மேற்கொள்ள இடமளிக்க வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமும், உறுப்பு நாடுகளிடமும் நேரில் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளது.
ஜெனிவாவுக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை முதலாவது சந்திப்பும் அதன் பின்னர், அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐ.நா.வுக்கான பிரதிநிதிகளுடன் இரண்டாவது சந்திப்பும் இடம்பெற்றன.
இந்தச் சந்திப்புக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், >> 04

## விக்கியின் முடிவையும் ஏற்க முடியாது

இப்படிச் சொல்கிறார் சுரேஸ்

யாழ்ப்பாணம், பெப். 18
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு, கடுமையான மேற்பார்வையின் கீழ் குறுகிய கால அவகாசம் வழங்கலாம் என்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் முடிவையும் ஏற்க முடியாது.
இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் >> 23

## எல்லை நிர்ணய அறிக்கை அரச அச்சகத்தில்

கொழும்பு, பெப். 18
எல்லைநிர்ணயஆணைக்குழுவின் அறிக்கை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காகக் கிடைத்துள்ளது என்று அரச அச்சகர் நேற்றுத் தெரிவித்தார்.
இந்த அறிக்கை வர்த்தமானியில் நேற்றுப் பிரசுரிக்கப்படும் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். (வ-5)




இணைத்தால் உவையளுக் குத்தானே பிரச்சினை...

## காய்ச்சலால் மாணவி சாவு

டெங்குத் தொற்று எனச் சந்தேகம்

கிளிநொச்சி, பெப்.18
கை, கால்கள், குத்தி உளைவதாகத் தெரிவித்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவி சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். மாணவி டெங்கு அல்லது எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. எனினும் அது உறுதிப்படுத்தப்படவில்லை என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. >> 24

## காரைதீவு அம்மன் ஆலயம் உடைப்பு



கொழும்பு, பெப். 18
மட்டக்களப்பு, காரைதீவு பத்திர காளி அம்மன் ஆலயம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளதாக, சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (வ-5)

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாதாந்தம் ரூபா 10, 000 கொடுப்பனவு

அதிகாரிகளுக்கு மைத்திரி பணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயக் குடும்பங்களுக்கும் மாதம் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவை அடுத்த மாதத்திலிருந்து சிறுபோகம் ஆரம்பமாகும் வரை வழங்குமாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
வறட்சியால் விவசாயத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக உரிய துறைத் தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் பிற்பகல் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் >> 24

## காணிப் பிரச்சினை மக்களின் பிரச்சினை

பிலக்குடியிருப்புப் போராட்டத்தில் பங்கெடுத்த தேரர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, பெப். 18
பிலக்குடியிருப்பு மக்களின் காணிப் பிரச்சினை அரசியல் பிரச்சினையோ, சமூகப் பிரச்சினையோ இல்லை. இது மக்கள் பிரச்சினை. மக்களின் நியாயமான கோரிக்கையை தென்னிலங்கை >> 24

விக்கி ஆர்ப்பாட்டம் நடத்தினாலும்

## வடக்கையும் கிழக்கையும் இணைப்பது சாத்தியமாகாது

இப்படிக் கூறுகிறார் ஹக்கீம்



கொழும்பு, பெப். 18
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எந்த விதமாக ஆர்ப்பாட்டம் செய்தாலும் வடக்கையும் - கிழக்கையும் ஒன்றிணைப்பது சாத்தியமாகாது. >> 24

காணிகளுக்குள் நுழைந்தால் சூடு

## வான் படை முகாமுக்கு அருகில் எச்சரிக்கை அறிவிப்புப் பலகை

முல்லை, பெப். 18
பிலக்குடியிருப்பு மக் களின் காணிகளை ஆக்கிரமித்து வைத் துள்ள வான்படை முகாமுக்கு அருகில் அறிவித்தல் பலகை காணப்படுவதை மக்கள் நேற்று அவதானித்தனர். 'இது வான் படைக்குச் >> 24



## முதல்வராக நீடிப்பாரா பழனிச்சாமி?

இன்று வாக்கெடுப்பு

சென்னை,பெப்.18
தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையி லான புதிய அமைச்சரவையில் சட்டமன்ற உறுப் >> 24

## புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் புதிய தடங்கல்

கொழும்பு, பெப். 18
புதிய அரசமைப்பை உரு வாக்கும் முயற்சிக்கு மகிந்த ஆதரவு அணியால் தடங்கல் உருவாகியுள்ளது.
அரசமைப்பை உருவாக்கும் உப குழுக்களிலிருந்து விலகப் போவதாக, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். உபகுழுக்களின் >> 24

### முல்லைத்தீவில் கஞ்சா பதுக்கியவரை யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சி.ஐ.டியினர் நேற்றிரவு பிடித்தனர்

முல்லை., பெப்.1 8
முல்லைத்தீவில் விற்பனைக்காக பதுக்கிவைக் கப்பட்டிருந்த 14 கிலோ 100 கிராம் எடையுடைய கேரளகஞ்சாப் பொதி >> 04

## உணவு ஒறுப்புப் போராட்டத்தின் மூன்றாம் கட்டம் இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு, பெப். 18
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள பொதுமக் களின் காணிகளை விட்டு இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி இன்று மூன்றாவது கட்ட சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் மக்கள் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 24



## போராடும் மக்களுக்கு தீர்வு வழங்காத அரசின் போக்குக்கு யாழ்ப்பாண ஆயர் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 18
முல்லைத்தீவு, கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு அறவழிப் போராட்டம் 18ஆவது நாளாக எந்த முடிவுமின்றித் தொடர்வது மன வருத்தமளிக்கிறது. மக்கள் அறவழிப் போராட்டம் நடத்தி 17 நாள்களாகியும் >> 24



# சொத்து விவரங்களை வழங்கிய அரச தலைவர் நான் மட்டுமே

## மைத்திரி பெருமிதம்

யாழ்ப்பாணம், பெப். 18

அரச தலைவராகப் பொறுப்பேற்று சொத்து விவரங்களைச் சமர்பித்த ஒரே ஒரு அரச தலைவர் நான் மட்டுமே.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமையை உத்தியோகபூர்வமாக மக்களுக்கு வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி அரச சார்பற்ற அமைப்பொன்று எனது சொத்து விவரங்களைக் கோரியுள்ளது. சொத்து விவரங்களை மறைக்க வேண்டிய எந்தவொரு தேவையும் எனக்கு இல்லை. அரச தலைவரின் சொத்து விவரங்களை கோருவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லாத போதும், அரச தலைவராகப் பொறுப்பேற்று 2 வருடத்துக்கான சொத்து விவரங்களைச் சமர்ப்பித்த நாட்டின் ஒரே அரச தலைவர் நான்தான். எனது சொத்து விவரங்கள் தேவையாயின் தேர்தல் ஆணையாளரை அணுகிப் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது நாட்டில் ஜனநாயக உரிமையை துச்சமாக மதித்து ஆர்ப்பாட்டங்களும் உணவு ஒறுப்புப் போராட்டங்களும் நடந்து கொண்டுள்ளன. கொழும்பில் ஒவ்வொரு நாளும் ஆர்ப்பாட்டங்கள் நடந்த வண்ணமே உள்ளன. நாம் வழங்கிய சுதந்திரத்தை பிரயோசமான முறையில் பயன்படுத்த வேண்டும். இப்படியொரு சுதந்திரம் ஏன் வழங்கப்பட்டது என்பதனை தெரிந்து செயற்பட வேண்டும்.

நாட்டின் கடந்த கால ஆட்சிகளை பார்க்கிலும் நேர்மையுடன் கூடிய மாற்று ஆட்சியை கொண்டு செல்வதற்கே மக்கள் எனக்கு வாக்களித்தனர். முன்னைய ஆட்சியில் நடந்த குற்றங்கள் இந்த ஆட்சியில் நடைபெறா வண்ணம் பாதுகாக்க வேண்டும் - என்றார். (வ-5)

# மொகான் பீரிஸை நீக்கவே நிறைவேற்று அதிகாரத்தை முதன் முறை கையிலெடுத்தேன்

## மனம் திறந்தார் மைத்திரி

கொழும்பு, பெப். 18

நிறைவேற்று அதிகாரத்தை நான் முதலில் பயன்படுத்தியது முன்னாள் தலைமை நீதியரசரை நீக்குவதற்காகவே. எனது கட்டளைக்கு அமைவாகத் தான் நடந்து கொள்வேன் என்று தெரிவித்தமையாலேயே அவரை நீதித் துறையிலிருந்து நீக்கினேன். அதன் மூலம் நீதித் துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வரகாப்பொல வைத்தியசாலையில் நவீன உபகரணங்களுடன் சகல வசதிகளுடனுமான 6 மாடிக் கட்டடத்தை நேற்றுமுன்தினம் அரச தலைவர் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நான் அமைச்சராக இருந்து, 42 நாள்களுக்குள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு, 24 மணித்தியாலங்கள் கடந்து சென்றிருந்த போது, 2015 ஜனவரி 10ஆம் திகதி இரவு, நீதித்துறையில் உயர் பதவியில் இருக்கும் அந்த நபர் என்னிடம் வந்தார். தன்னை நீக்கப் போவதாக கேள்வியுற்றது பற்றி கேட்டறிவதற்காகவே இங்கு வந்தேன் என்று கூறினார்.

அப்போது அவர் சேர், நான் சேர் கூறுவது போன்று நடந்து கொள்கின்றேன் என்று என்னிடம் கூறினார். அந்தச் சந்தர்ப்பம் வரை நீக்குவது பற்றி எந்தத் தீர்மானமும் எடுத்திருக்கவில்லை என்று நீதித் துறையில் உயர் பதவியில் இருக்கும் அந்த நபரிடம் கூறி அனுப்பினேன். இதற்கு முன்னர் வழக்குகளின் தீர்ப்பு எவ்வாறு அமைந்திருக்கும் என்றுதான் அப்போது சிந்தித்துப் பார்த்தேன். பின்னர் அடுத்த நாளும் முன் அறிவித்தலின்றி என்னை வந்து சந்தித்து, தேவையான விதமாக நடந்து கொள்வதற்குத் தான் தயார் என்றும், தன்னைப் பதவியில் இருந்து நீக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் நீதித்துறையில் உயர் பதவியில் அவர் இருப்பதால் நாட்டுக்கும், நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மைக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று நான் அந்த சந்தர்ப்பத்தில் விளங்கிக் கொண்டேன். அவரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தேன். அரசு என்ன செய்தது என்று கேள்வி எழுப்புவோர், நாடு இருந்த நிலைமையையும் தற்போது இருக்கின்ற நிலைமையையும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் -என்றார். (வ-5)

# சிறுமியை துர்நடத்தைக்குட்படுத்த முயற்சித்த மூவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, பெப்.18

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற 15 வயது பாடசாலை மாணவியைக் கடத்திச் சென்று துர்நடைத்தைக் குட்படுத்த முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றது.

தனது நண்பியுடன் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற பாடசாலை மாணவியை, இடைமறித்த மூவர் அவரை பலவந்தமாக வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மாணவியின் நண்பி பெற்றோருக்குத் தகவலை வழங்கினார். மாணவியின் பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். நண்பியின் வாக்கு மூலத்தைப் பெற்று தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில்மாணவி மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்தில் வைத்தே கடத்திச் சென்ற இளைஞனும், அவருக்கு உதவிய இருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் மார்ச் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த இளைஞர் தன்னை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்று பாலியல் துர்நடத்தைக்கு முயற்சித்தார் என்று பாதிக்கப்பட்ட மாணவி விசாரணையில் தெரிவித்தார். இதனை அடுத்து அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21,9)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்குவைக்கிறது மகிந்த அணி

## அடுத்த வாரம் பரப்புரைகள் ஆரம்பம்

கொழும்பு, பெப். 18

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்கு வைத்து அடுத்த வாரம் முதல் நாடு முழுவதும் தீவிர பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு மகிந்த அணி தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக மார்ச் 24ஆம் திகதி காலியில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டு புதிய கூட்டணி குறித்த அறிவிப்பு விடுக்கப்படும் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா நேற்றுத் தெரிவித்தார்.

2017இல் ஆட்சியைக் கவிழ்க்கப் போவதாக சூளுரைத்துள்ள மகிந்த அணி, முதலாவது அரச எதிர்ப்புக் கூட்டத்தை நுகேகொடையில் நடத்தியிருந்தது. தற்போது கிராம மட்டத்திலான கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே அடுத்த வாரம் முதல் முதன்மைக் கூட்டங்கள் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் மகிந்த அணியால் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக பரப்புரைக் குழுவொன்றை மகிந்த அணி நியமிக்கவுள்ளது என்றும், சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அறியமுடிகின்றது.

மாற்றம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு தற்போது மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை வழங்கி வருகின்றது. எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது அரசு மீதான விரக்தியை மக்கள் வெளிப்படுத்துவார்கள். அந்தவகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது வெற்றி உறுதியாகியுள்ளது. அதன் பின்னர் ஆட்சி எப்படி கவிழ்க்கப்படும் என அறிவிக்கப்படும் என்று ரஞ்சித் டி சொய்சா தெரிவித்தார். (வ)



# இளைஞர்களின் மனிதாபிமான செயலுக்கு படையினர் பாராட்டு

தென்மராட்சி, பெப். 18

இனம், மதம், மொழி வேறுபாடு கடந்து விபத்து இடம்பெற்றவேளையில் உடனடியாகச் செயற்பட்டு காயமடைந்த படைச் சிப்பாய்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற இளைஞர்களின் மனிதாபிமானச் செயற்பாட்டினை படையினர் ஆகிய நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இவ்வாறு அல்லாரை தம்பு தோட்ட முகாம் இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

அரியாலை நெடுக்குளம் பகுதியில் இடம்பெற்ற தொடருந்து - படையினரின் வாகன விபத்தில் காயமடைந்த படைச் சிப்பாய்களை உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பித்த எட்டு இளைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று அல்லாரை தம்பு தோட்ட முகாமில் இடம்பெற்றது.

எட்டு இளைஞர்களுக்கும் அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் மற்றும் பரிசுப் பொருள்களும் வழங்கிப் படையினர் கௌரவித்தனர்.

இதன்போது படைமுகாமின் அதிகாரி தெரிவித்ததாவது:

இனம், மதம், மொழி வேறுபாடு இருந்தாலும் மனிதாபிமானம் என்பது அனைவருக்கும் இருக்க வேண்டும். விபத்து இடம்பெற்ற வேளையில் உடனடியாகச் செயற்பட்டு காயமடைந்த படைச் சிப்பாய்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற இளைஞர்களின் மனிதாபிமானச் செயற்பாட்டினை படையினர் ஆகிய நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம்.

காயமடைந்தவர்கள் பின்னர் சாவடைந்தாலும், அந்த வேளையில் உதவியவர்களை மறக்க முடியாது. மனித வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் மாற்றுக் கருத்துக் கொண்டிருந்தாலும் மனிதாபிமானம் அனைவருக்கும் இருக்க வேண்டுமென்பதை இந்த இளைஞர்களின் அர்ப்பணிப்பான முயற்சி எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

நல்லிணக்கம் பற்றிப் பேசப்படும் இந்த வேளையில் இவ்வாறான செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்துப் படையினரின் மனங்களையும் கவர்ந்துள்ளது. இந்த இளைஞர்களுக்கு மட்டுமல்ல மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியும் 523 படையணியின் கட்டளைத் தளபதியும் இதே கருத்தினைக் கொண்டுள்ளனர். (வ -9)

# கேப்பாபிலவு அறவழிப் போருக்கு தென்னிலங்கைக் கட்சிகள் ஆதரவு

கொழும்பு, பெப். 18

முல்லைத்தீவு, கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு மக்களின் காணி மீட்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக முன்னிலை சோஸலிசக் கட்சி, ஐக்கிய சோஸலிசக் கட்சி மற்றும் நவ சமசமாஜக் கட்சி ஆகிய தென்னிலங்கைக் கட்சிகள் அறிவித்துள்ளன.

இதுதொடர்பில் முன்னிலை சோஸலிசக் கட்சியின் மைய செயற்குழு உறுப்பினர் புபுது ஜயக்கொடி தெரிவித்ததாவது:

போர்க்காலத்தில் சுவீகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் மீள அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். ஆனால், போர் முடிவடைந்து பல வருடங்களாகியும் காணி விடுவிப்பானது மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றது. இது தவறான அணுகுமுறையாகும்.

மக்களுக்குரிய காணிகள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். கேப்பாபிலவு மக்கள் விடயத்தில் கொழும்பு அரசு செயற்படும் விதத்தைப் பார்க்கும்போது, மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதாகத் தெரிகின்றது.

எது எப்படியோ கேப்பாபிலவு மக்களுக்கு உடன் நீதி கிடைக்க வேண்டும். அவர்களின் போராட்டத்துக்கு எமது கட்சி முழு ஆதரவையும் தெரிவிக்கின்றது - என்றார்.

இதேவேளை, ஐக்கிய சோஸலிசக் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகிய கட்சிகளும் கேப்பாபிலவு மக்களின் மண் மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவை வெளியிட்டுள்ளன. (வ)

# 559 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற 559 பட்டதாரிகளுக்கான நியமனங்களை எதிர்வரும் முதலாம் திகதி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. வடக்கு மாகாணப் பாடசாலைகளில் உள்ள பாட ரீதியிலான வெற்றிடங்களின் அடிப்படையில் 846 பேரைத் தெரிவு செய்வதற்கு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.
2ஆயிரத்து 455 விண்ணப்பங்கள் கிடைத்தன. பரீட்சையில் இரு பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட அடிப்படையில் 789 பேர் இனம் காணப்பட்டனர். அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர்.
நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவர்களில் 559 பேர் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான நியமனங்களுக்கான அனுமதி கோரி வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு வடக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
நியமனக் கடிதங்கள் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் முதலாம் திகதி நியமனங்கள் வழங்கப்படக் கூடும் - என்றார் செயலர். (ற-5,10)



தென்னியங்குளம், கூராய் கிராமங்களின்

## நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுக்கு மீன் சந்தைகள் அமைப்பதற்கு நிதி

யாழ்ப்பாணம், பெப். 18
முல்லைத்தீவு, தென்னியங்குளம் மற்றும் மன்னார், கூராய் நன்னீர் மீன்பிடிச் சங்கத்தினருக்கான மீன் சந்தைகளை அமைப்பதற்கு 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அமைச்சு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கூராய் கிராமத்தின் நன்னீர் மீன்பிடிச் சங்கத்துக்கும், முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தென்னியங்குளம் நன்னீர் மீன்பிடிச் சங்கத்துக்கும் சந்தைகள் அமைப்பதற்கு தலா 3 மில்லியன் ரூபா வீதம் 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
கூராய் கிராமத்துக்கு அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்றுமுன்தினம் சென்றார். அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சந்தை அமையவுள்ள இடத்தையும் ஆய்வு செய்தார். கூராய் குளத்தையும் பார்வையிட்டார்.
தமது பிரதேச வீதிகள் சீரமைப்புச் செய்யப்படாதுள்ளன என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டினர். ஐ ரோட் திட்டத்தின் ஊடாக அவற்றைச் சீரமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.
கூராய்க் குளத்தில் கடந்த ஆண்டு 75 ஆயிரம் மீன்குஞ்சுகளும், 55 ஆயிரம் இறால் குஞ்சுகளும் விடப்பட்டன. 6 குல்லாக்கள் 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டன. தென்னியங் குளத்துக்கு கடந்த ஆண்டு 75 ஆயிரம் மீன் குஞ்சுகளும், 2 குல்லாக்களும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## யாழ்ப்பாணத்தில் இந்தமுறை 130 ஹெக்ரேயரில் உ.கிழங்கு

*யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தகவல்*

அச்சுவேலி, பெப்.18
யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கை 130 ஹெக்ரேயரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதை உருளைக் கிழங்கு கொள்வனவுக்கு 50 வீத மானியம் வழங்கப்பட்டது.
இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சமுர்த்திப் பயனாளிகளுக்கும் வாழ்வாதார மேம்பாட்டு உதவியாக உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட குடும்பங்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.
உருளைக்கிழங்கு அறுவடை நடைபெற்றுவருகின்றது. பயிர்களில் நோய்த்தாக்கம் இல்லாத சீரான வளர்ச்சி நிலை காணப்பட்டதால் சராசரிக்குக் குறையாத விளைச்சல் கிடைத்துள்ளது.
யாழ்.மாவட்டத்தில் இந்த முறை ஆகக் கூடுதலான அளவு உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
விதை உருளைக்கிழங்கு கோரி பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்குத் தலா 200கிலோ விதை உருளைக்கிழங்கு 50 வீத மானிய உதவியுடன் வழங்கப்பட்டது. அத்துடன் கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுகளில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது.
யாழ்.மாவட்டத்தில் ஹெட்லைட் கோடா அனோவா சசி ரக விதை உருளைக் கிழங்கு ரகங்கள் வழங்கப்பட்டன.
உருளைக்கிழங்குச் செய்கை கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலக பிரிவுகளில் பெருமளவில் செய்கை பண்ணப்பட்ட போதிலும், வடமராட்சி, தென்மராட்சி தீவகம் உள்ளிட்ட ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் செய்கை பண்ணப்பட்டன. சில புதிய இடங்களில் பரீட்சார்த்த அடிப்படையிலும் செய்கை பண்ணப்பட்டன - என்றார். (ற-11)



## சமூகத்துக்கு சேவையாற்றும் சங்கங்களுக்கே உதவிகள்

*கிளி. மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.18
பல சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் சங்கங்கள் அந்தந்தப் பிரதேசத்துக்கும், சமூகத்துக்கும் எவ்வாறு சேவையாற்றுகின்றன என்பதை வைத்து அவற்றுக்கு உதவிகள் வழங்குவதே எனது வழமை.
இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
கிளிநொச்சி பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் நலத் திட்ட உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நான் பதவி ஏற்று வந்த போது அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்குப் பலசங்கங்கள் என்னிடம் வந்தன. நான் வழங்கவில்லை. வடக்கு மாகாணத்தை தவிர ஏனைய மாகாணங்களில் அனுமதிப்பத்திர நடைமுறை இல்லை. கேள்வி கோரல் மூலமே வழங்கப்படுகின்றது. அனுமதி பெற வந்தவர்களிடம் கதைத்த போது அவர்கள் சில கோவைகளைக் காட்டினார்கள்.
அவற்றைப் பார்த்த பின்னர் ஒரு முடிவுக்கு வந்தேன். அனுமதி வழங்குவதானால், உங்கள் சங்கம் எவ்வாறான வசதிகளை மக்களுக்கு, அங்கதவர்களுக்கு வழங்குகின்றது என்பது தொடர்பான பட்டியலைத் தர வேண்டும் என்று கோரினேன்.
அவர்கள் ஒரு பெரிய பட்டியலை எனக்குத் தந்தார்கள். அவர்கள் தமது அங்கத்தவர்களுக்கும், சமூகத்துக்கும் சிறந்த முறையிலான சலுகைகளை வழங்கி வருகின்றனர். மகிழ்ச்சியாக இருந்தது.
கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை இங்கு பணியாற்றும் அரச அதிகாரிகளில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் மிகமிகக் குறைவு. இந்தநிலை மாற்றப்பட வேண்டும். எமது பிள்ளைகளை கல்வி ரீதியில் ஊக்குவிக்க வேண்டும்.
அண்மையில் கிளிநொச்சியைச் சேர்ந்த இரு மாணவிகள் தேசிய ரீதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று பன்னாட்டுப் போட்டிக்குச் செல்லும் தேசிய அணியில் இடம் பிடித்தனர். இந்த இரு மாணவிகளும் இறுதி நேரத்தில் தமக் கான பயணச்சீட்டை பெற்றுக்கொள்வதில் மிகவும் சிரமப்பட்டார்கள். பெற்றோருடன் என்னை வந்து சந்தித்தார்கள். உடனடியாக நாம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து அனுப்பி வைத்தோம்.
மாணவர்களின் திறமைகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் திறமைகள் பிரகாசிப்பதுடன் ஏனைய மாணவர்களும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்- என்றார். (ற-6)

## இறந்துவிட்டார் என்று எண்ணிய முதியவரை கண்டதால் மகிழ்ச்சி

*மன்னார், சின்னமடுவில் சம்பவம்*

யாழ்ப்பாணம்,பெப்.18
கடந்த பல வருடங்களுக்கு முன்பாகவே இறந்து விட்டார் என்று எண்ணியிருந்த முதியவர் ஒருவரைக் கண்டதும் அந்தப் பகுதி மக்கள் ஆரத் தழுவி அரவணைத்து மகிழ்ந்தனர். அந்தச் சம்பவம் சின்னமடுவில் நடந்துள்ளது. அந்த முதியவர் நீண்ட காலமாக கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருந்து வருகிறார்.
கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியவர்கள் ஆன்மிக சுற்றுலாவாக சின்னமடு தேவாலயத்துக்கு கடந்த 10 ஆம் திகதி சென்றனர். சுமார் முப்பது வரையிலான வயோதிபர்கள் அங்கு சென்றனர். மன்னார், சின்னமடு பிரதேசத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர், கடந்த பல வருடங்களாக கைதடி முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வருகிறார். அவரும் அங்கு சென்றிருந்தார்.
சின்னமடு ஆலயத்தைத் தரிசிக்கச்சென்ற சமயம் அவருக்கு இது தான் தனது சொந்த ஊர் என்று தெரியவில்லை. முதியவர்களை வரவேற்க ஆலயத்தில் கூடியிருந்த அந்தப் பிரதேச முதியவர்கள் இவரைக் கண்டதும் ஓடிச் சென்று கட்டி அரவணைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.
ஆன்மிக சுற்றுலா மற்றும் ஏனைய முதியோர் சங்கங்களின் வயோதிபர்கள் இணைந்து மேற்கொள்ளும் சுற்றுலாக்களில் கருத்துப் பகிர்வு ஊடாக வயோதிபர்களுக்கான உள ரீதியான தாக்கங்கள் குறையும் என்று முதியோர் இல்லத்தினர் தெரிவித்தனர். (ற-17)

## முன்பள்ளி கட்டட திறப்பு விழா

உடுவில் மல்வம் ஞானபிரகாசர் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழாவும், தாய்சேய் நல நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# கலாசார திணைக்களப் பேச்சுப் போட்டிக்கு மாணவர்களிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 17

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பன்னிரு மாத விளக்கு நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டது.

இந்தப் போட்டியில் பங்கு பங்குபற்றுவதற்காக பாடசாலை மாணவர்கள், சிறுவர் கழகங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.போட்டியின் தலைப்பாக 'சுதந்திர மனிதனின் சுதந்திரதினம்' ஆகும்.

போட்டியில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் விவரங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண பிரதேச செயலாளர், இல. 116, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி வி.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (வ-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 17.07.1944 — மறைவு 19.01.2017

கடந்த 19.01.2017 அன்று
இறைபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

**அமரர்**
**வைத்திலிங்கம் தம்பிநாதன்**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (18.02.2017) சனிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் பின்னர் அவரது இல்லத்திலும் நடைபெறும். நாளை (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும், மதிய போசனமும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் பிரபாகரன் (பிரபா)

(அளவெட்டி மலைவேம்படி, அபிஷா கட்டடப்பொருள் உரிமையாளர்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பிரபாகரன் நேற்று (17.02.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலைவேம்படி தெற்கு,
மலைவேம்படி அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
077 684 6293, 077 624 7543

## சூசைபிரகாசம் மாட்டின்



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைபிரகாசம் மாட்டீன் நேற்று (17.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைபிரகாசம்-அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சீமாம்பிள்ளை-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்ராசா மாஸ்ரர் மற்றும் சிந்தாத்துரை(கனடா), சிறில்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொளின் (கனடா) காலஞ்சென்ற றொபின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பேணடேற், றெசின், யூலியற், பிறேமா, டங்கன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் மகேந்திரன்(டோகா), இராசநாயகம், ஜெயந்தி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஜெனி (கனடா), நிறஞ்சினி,, நந்தினி, விஜி(கனடா), றஜி(கனடா), சுஜி (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் தீபிகா, றினோயா, கஸ்ரோ, சஞ்சியா, ஆன்நிடா, பற்றிஸ்ரா (கனடா) ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2017) சனிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இல. 36, புதியபூங்கா வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக புனிதமரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 36, புதிய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தீர்மானத்தில்...

பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு, 2015ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியக்கிடைத்தது. போர்க் குற்ற விசாரணைப் பொறிமுறைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவை என்ற பரிந் துரையை நீக்குதல் உள்ளிட்ட சில மாற்றங்களைச் செய்ய கொழும்பு முயற்சிக்கின்றது. இதனை அறிந்து இது தொடர்பில் எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவே அவசரமாக ஜெனிவா வந்தோம்.

பிரிட்டன் இந்த முறை தீர்மானத்தைக் கொண்டு வரும்போது, 2015ஆம் ஆண்டு ஐ.நா. தீர்மா னத்தில் சொல்லப்பட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியே தீர்மானத்தைக் கொண்டுவருமாறு கோரினோம். அதற்கு ஆதரவு வழங்குவதாக பிரிட்டன் உறுதியளித்தது. அத்துடன் ஏற்கனவே வழங்கப்பட்ட 18 மாத காலப் பகுதியில் இலங்கை அரசு தான் இணங்கிய விடயங்களைச் செயற்படுத்தவில்லை. எனவே மேற்பார்வைப் பொறிமுறை மிக இறுக்கமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில், ஆணையாளர் கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்போகும் அறிக்கையில், இலங்கை அரசு 2015ஆம் ஆண்டு இணங்கிய விடயங்கள் எதனையும் நிறைவேற்றவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்று கோரினோம். காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்படவில்லை, காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை, அரசியல் கைதிகள் விடுவிப்பு நடைபெறவில்லை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை.

இதனை விட முற்றுமுழுதாக உள்நாட்டுப் பொறிமுறையூடான விசாரணைக்கு இலங்கை அரசு முயற்சிக்கின்றது. இதற்கு ஆணையாளர் எதிர்ப்பு வெளியிட வேண்டும். வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டதான பொறிமுறையே அமைக்கப்பட வேண்டும். அதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட வேண்டும். பொறுப்புக் கூறல், அரசியல் தீர்வு விடயங்களிலும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. அதனை விரைந்து நிவர்த்திப்பதற்கு, கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஆணையாளரின் அறிக்கை அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் இந்தப் பயணத்தில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஐ.அஸ்மினும் சென்றுள்ளார். (வ-5)

### முல்லைத்தீவில்...

கள் நேற்று இரவு மீட்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சிறப்பு பொலிஸ் புலனாய்வுத் துறையினரே அவற்றை மீட்டனர். கஞ்சாவை பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மொத்த விற்பனைக்காக முல்லைத்தீவு கைவேலி பகுதியில் கேரள கஞ்சா 'பதுக்கிவைக்கப்பட்டுள்ளது என்று இரகசியத் தகவல் கிடைத்தது. யாழ்ப்பாணத்திலிருந்து விரைந்த சிறப்பு பொலிஸ் புலனாய்வுத் துறையினர் இரவு 8.30 மணியளவில் புதுக் குடியிருப்பு கைவேலிப்பகுதியில் ஆள்கள் இல்லாத வீட்டில் இருந்து குறித்த கஞ்சாப் பொதிகளை மீட்டனர்.

7 பொதிகளில் பொதியிடப்பட்டவாறு இரண்டு பயண பைகளில் கஞ்சா மறைத்து வைக்கப் பட்டிருந்தது. மீட்கப்பட்ட கஞ்சா சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியானவை என்று தெரியவந்துள்ளது.

கஞ்சாவைப் பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைவேலியைச் சேர்ந்த தர்மலிங்கம் மதனதாசன் என்பவர் கைது செய்யப் பட்டார். புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் அவர் ஒப்படைக்கப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரலேகா(சந்திரா) சந்தனராசா(ராசுபத்தர்)



நாச்சிமார் கோயிலடி, வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் பூந்தோட்டம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரலேகா(சந்திரா) சந்தனராசா(ராசுபத்தர்) 17.02.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தனராசாவின் (முன்னாள் வைரமாளிகை ஊழியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான K.V. இராசரெத்தினம்-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகளும் சுரேந்திரரெத்தினம், விஜேந்திர ரெத்தினம், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ரவீந்திர ரெத்தினம் மற்றும் புஸ்பராணி, காலஞ்சென்ற புஸ்பரஞ்சினி மற்றும் பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபூரணம், புஸ்பமாலா, பரமசிங்கம், சத்தியபாமா, காலஞ்சென்ற பவளகாந்தன் மற்றும் கமலராணி காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, தையல்பாகர் மற்றும் தனலெட்சுமி காலஞ்சென்ற இராசதுரை மற்றும் குவேந்திரன்-காந்திமலர், புலேந்திரன்-அமுதா, ரோஜாமலர்-சண்முகநாதன், காலஞ்சென்ற ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற தயானந்தபோஸ்(மைக்கல்) மற்றும் சந்திரபோஸ்(ஜீவா), பிரபாகரன் (றமேஸ்), மேனகா, சுஜாதா ஆகியோரின் அன்புத் தாயாரும் வத்ஷலா, கீதா, சிவநேசன்(சிவா), செந்தில்வாசன் ஆகியோரின் அன்பு மாமியும் சஜிகாந், வேனோஜன், அஸ்மிகா, சுலக்ஷன், றம்ஜித்தா, அபிராமி, சிறீக்குமரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
680, K.K.S. வீதி,
நாச்சிமார் கோயிலடி.

மேனகா சிவநேசன் (மகள்)
077 315 3399, 077 852 0401

# சாரதிகளுக்கான தண்டப்பணத்தை ரூ.50 ஆயிரமாக அதிகரிக்கவும்

## ஆராய்வுக் குழு பரிந்துரை

கொழும்பு,பெப்.18
சில வாகன சாரதிகளால் மேற்கொள்ளப்படும் தவறுகளுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறிவிடுவதற்கு 2017 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது 30 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம் ரூபா வரை தண்டப் பணத்தை அதிகரிக்க வேண்டும் என்று அதனை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை செய்துள்ளது.

2017ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட சாரதிகளுக்கான தண்டப் பணத்துக்குத் பேருந்துச் சங்கம் மற்றும் முச்சக்கர வண்டிச் சங்கம் என்பவை கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டன. அத்துடன் கடந்த டிசெம்பர் மாதம் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் நாடு ஸ்தம்பிதம் அடைந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சாரதி அனுமதி பத்திரமின்றி வாகனம் ஓட்டுதல், சாரதி அனுமதி பத்திரம் இல்லாமல் வேலைவாய்ப்பு வழங்குதல், மதுபானம் அல்லது போதை பொருள் பயன்படுத்திய நிலையில் வாகனம் ஓட்டுதல், பாதுகாப்பற்ற ரயில் பாதைகளில் சட்டத்தை மீறுதல், அதிக வேகத்தில் வாகனம் ஓட்டுதல், காப்புறுதி இல்லாமல் வாகனம் ஓட்டுதல் ஆகிய குற்றச் செயல்கள் தொடர்பில் 25 ஆயிரம் ரூபாவில் இருந்து 50 ஆயிரம் ரூபா வரை தண்டப் பணம் அறிவிட வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் தண்டப் பணத்துக்கு மேலதிகமாக 3 மாதத்தில் இருந்து 10 ஆண்டுகள் சிறை வைத்தல், சாரதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் போன்ற விடயங்களையும் மேற்கொள்ள வேண்டும் என அந்தக் குழு யோசனை முன்வைத்துள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரை தொடர்பில் பேருந்துச் சங்கத்தினர் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் போக் குவரத்து அமைச்சரிடம் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இந்தக் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் முதல் வாரத்தில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஐ)

வசாவிளான் கிழக்கு பகுதியில் 28 பரப்பு கற்காணி விற்பனைக்குண்டு.
மின்சார வசதியுண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
0774 728 172, 0773 362 383

STUDY IN CANADA
"Study in Canada... Step up in Life"
PROGRAMS OFFERED
• INFORMATION TECHNOLOGY
• BUSINESS ADMINISTRATION
• HOTEL MANAGEMENT
Work permit upon graduation
Scholarship available
Pathway programs
PR options Available
ST.CLAIR
St.Clair College, Windsor, Ontario
Pathway programs: JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!
First semester in INDIA March'17, Rest in CANADA September'17
Also available direct study programs
Admission Interview on 17th 18th & 19th of Feburrary'17
ICGE
TIES, 273, Main street, Northern Province, Jaffna, Srilanka
srilanka@icge.education | www.ICGE.education | (+94) 021 45 48464

ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு
சிறந்தரக கிறிராஷ் ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
077 755 6244/ 077 349 7277

விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள மரம் அரியும் பாட்டு வாள் பட்டடை, டீசல் இயந்திரங்களும், மோட்டர்களும் விற்பனைக்கு உண்டு.
077 431 4227

இறைச்சிக்கோழி விற்பனைக்கு
புறொய்லர் கல்பேட் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
U.S.A பாம்
குழப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.
077 868 9500

உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு
01.கட்டார்
எயார்ப் போட் கார்கோ (லேபர்ஸ்) - (50 ஆண்கள்)
1100 RL SR 44000+OT உணவு, தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள் உண்டு. (வயது 20-35)
02.சவுதி
(சுப்பர் மார்க்கட், பல்கலைக் கழகம், வங்கி, அலுவலகம்)
RL 1200 SR 48000+OT தங்குமிட மருத்துவ வசதிகள் உண்டு. (வயது 21-45) 30 ஆண்கள்
03.மலேசிய
சுப்பர் மார்க்கட்
RM 1300 SR 43000+OT தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள் உண்டு. (வயது 20-45) 20 ஆண்கள்
New Gulf Lankan Man Power
136, Dam Sl.Co:12
Phone No: 077 346 8011/ 072 811 0986
E - mail: asianlanka27@gmail.com

SB TRAVELS & TOURS (Pvt)Ltd.
சகல நாடுகளுக்குமான பயணச்சீட்டுக்களையும் விசாக்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
இங்கு Air Ticketing வகுப்புக்களும் 2மாத பயிற்சிகளும் நடைபெறுகின்றன.
No 216, Kasthuriyar road, Jaffna.
021 222 9555/ 021 222 8555/
076 691 1083, 82, 80

உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு
டுபாய்
DHL கொரியர் சேவிஸ் (கெல்ப்பர்) 30 ஆண்கள்
Dhs 1600 +OT+ SR 64'000 (வயது 18-30) தங்குமிட வசதி, மருத்துவ வசதி உண்டு.
சவுதி
பால் கொம்பனி (அல்மேறாய்)
RL 1100 SR 44'000 + OT உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. 50 ஆண்கள். (வயது 18 - 35)
கட்டார்
லைட் வெயிக்கிள் சாரதி 20 ஆண்கள் (வயது 20 - 40) RL 1800 SR 72'000 + OT உணவு, தங்குமிட வதிகள் உண்டு.
Phone No:- 077 044 7386, 077 889 8752
Email - asianlanka27@gmail.com
NEW GULF LANKAN MANPOWER
136,DAM SI. CO:12

அறை வாடகைக்குண்டு
குறைந்த விலையில் நாள் வாடகைக்கு Room ரூபா 700 - ரூபா 4000 வரை A/C, T.V Attach Bathroom வசதிகளுடன் உண்டு.
Hotel Villa City 422/1, Galle Road Wellawatte இராமகிஷ்ண Shed க்கு அருகில் 072 255 2222

வீடு வாடகைக்குண்டு
நீர்வேலிச் சந்தி, பருத்தித்துறை வீதியில் 10 பரப்பு சுற்றுமதில் காணியுடன் வீடு வாடகைக்கு விடப்படும்.
077 633 1914

வீடு வாடகைக்கு தேவை
கணவன் மனைவி அடங்கிய சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ் நகரில் இருந்து 5Km சுற்றளவிற்குள் வாடகைக்கு வீடு தேவை.
077 276 9414/ 075 653 3924

துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷனி அம்பாள்

வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 18.02.2017 இல் இருந்து 20.02.2017 வரை ஞானவைரவர் ஆலயம், கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.
★ 19.02.2017 ஞாயிறுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.
பூசை நேரம்: முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226

பெயர்மாற்றம்
இலந்தைக்காடு, சமரபாகு, வல்வெட்டித்துறை என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட மகாலிங்கம் மாலவன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை மகாலிங்கம் மாதவன் எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
மகாலிங்கம் - மாதவன்

புற்றுநோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கத்தின் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துதல்
கடந்த 40வருடங்களுக்கு மேல் எமது சங்கம் இயங்கி வருகின்றது. எதிர் வரும் 23.04.2017 ஆம் திகதி பொதுச்சபைக்கூட்டமும், புதிய நிர்வாக சபைக் கூட்டமும் நடைபெறவுள்ளது.
எமது அங்கத்தவர்கள் சிலர்நீண்ட காலமாக எந்தவிதமான தொடர்பும் ஏற்படுத்த முடியாது உள்ளது. தயவு செய்து இவ் அறிவித்தல் பார்வையிடும் அங்கத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தங்களது அடையாள அட்டையையும் பெற்றுக் கொள்ளவும்.
இச்சங்கத்தில் புதிதாக இணையவரும் சேவையாளர்களை இச் சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினராக இணைத்துக் கொள்வதற்கு ரூபா 1000/= மட்டும். ஆர்வமுள்ள சேவையாளர்களை வரவேற்று நிற்கின்றோம்.
தலைவர் - லயன் DR க.மு.பத்மநாதன் PMJF, MAF
021 320 7040/ 077 732 3702

ஆள்கள் தேவை
சர்வதேச ரீதியில் பிரசித்திபெற்ற முன்னணி கல்வி நிறுவனம் ஒன்றிற்கு யாழ்ப்பாண கிளை அலுவலகத்துக்கு வேலையாள்கள் தேவை.
விருப்பம் உள்ளவர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளவும்.
நேர்முக தேர்வு: 17,18, 19. பெப்ரவரி 2017
காலை.9.00 - பி.ப.4.00 மணிவரை
பதவி: மாணவ ஆலோசகர் / அலுவலகமேலாளர், நிறுவன இணைப்பாளர்.
தகுதி: சரளமாக ஆங்கிலம் பேச, எழுதக்கூடியவர் மற்றும் கணினி அறிவு
வயதெல்லை: 20 - 30
பெண் விண்ணப்பதாரர்கள் வரவேற்கப்படுவர்.
இல.273, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 454 8464

பகுதிநேர வேலை வாய்ப்பு
வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு,காப்புறுதி ஆலோசகராக, யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.
* 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:
யாழ்ப்பாணம்,நெல்லியடி ,சங்கானை
அடிப்படைத் தகைமைகள்
* G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
* 18-55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 28.02.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
விளம்பர இல : 5523
C/O உதயன்,
361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், பெப்.18
உரும்பிராயைச் சேர்ந்த வி.ஜெக நாதனால் எழுதப்பட்ட சாதி வலயங்களுள் வாக்கு வங்கிகள்" எனும் நூல் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.முத ன்மைச் சாலையில் அமைந்து ள்ள திரும றைக் கலாமன்ற கலைத் தூது மணி மண்டபத்தில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக நெய் தலம் இயக்குநர் கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகளார் கலந்து கொள்வார். நூலின் ஆய் வுரையை வடக்கு, கிழக்கு மாகா ணசபை முன்னாள் முதல்வர் அ.வரதராஜப்பெருமாள், சொல் லின் செல்வர் இரா.செல்வவடி வேல் ஆகியோர் நிகழ்த்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-51)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் கந்தையா நாகமணி
(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர், விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி, யாழ்.பல்கலைக்கழகம்)
மலர்வு:- 13.06.1932
உதிர்வு:- 21.01.2017

21.01.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தையா நாகமணி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 20.02.2017 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அன்னார் இறந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், தொலைபேசி அழைப்புக்கள் என்பவற்றில் ஆறுதல் தெரித்தவர்களுக்கும் பல வழிகளில் உதவிய அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

'ஈஸ்வரி வாசம்',
ஆலங்குழாய், சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
குடும்பத்தினர்.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
23 . 02 . 1967



விண்ணில்
18 . 02 . 2016

அமரர் யோசப் அன்ரன் ஜெயக்குமார்
(ஓய்வு நிலை கிராமசேவையாளர் நாரந்தனை J/57)
ஆண்டு ஒன்று ஆனதையா ஆறவில்லை நாங்கள்
நீண்ட உந்தன் நினைவுகளில் நெஞ்சுருகி போனோம்
வேண்டுகிறோம் உனக்காக வேதனுடன் நீடுறைவாய்.
இவரின் ஆன்ம சாந்திக்காக இன்று (18.02.2017) காலை 6.00 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
இல. 793 (425), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(AJA 469) (13)
குடும்பத்தினர்.



# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

அமரர் திருமதி
கௌரியாம்பிகை
சாம்பசதாசிவக்
குருக்கள்



துர்முகி வருடம் மாசிமாதம் 7 ஆம் நாள் நாளை (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் ஆத்ம சாந்தி வழிபாடும் மகேஸ்வர பூசையும் (மதியபோசனம்) நீர்வேலி அரச கேசரிப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
அரச கேசரிப்பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி.
குடும்பத்தினர்.
(AJA C) (9475)


### இலங்கை வரலாற்றில்

# குடும்பமாக மோசடிகளை செய்தவர் மகிந்த மட்டுமே

### இப்படிச் சொல்கிறார் அசாத்சாலி

கொழும்பு,பெப்.18
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜ பக்ச இலங்கை வரலாற்றில் எந்த வொரு அரச தலைவர்களும் செய்யாத மோசடிகளைக் குடும்ப மாகச் செய் துள்ளார்.
இவ்வாறு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலி தெரிவித் தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்திய உயர் நீதிமன்றம் வரலாற் றுச் சிறப்பு மிக்க தீர்ப்பொன்றைச் சொத்துக் குவிப்பு வழக்கில் சசிக லாவுக்கு வழங்கியுள்ளது.
இது இலங்கையில் ஊழல் மோசடி களில் ஈடுபடும் அரசியல்வாதி களுக்கும் ஒருபாடமாகும். ஆட்சியில் இருந்த முன் னாள் அரசியல்வாதி கள் பலர் ஊழல் மோசடிகளை மேற்கொண்டு தற்போது கூட்டு அர சின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.
இவர்களுக்கான தீர்வுகள் வெகு விரைவில் வரும். சசிகலாவுக்கு வழங்கிய தீர்ப்பு எமது அரசியல் வாதிகளுக்கும் ஒரு பாடமே.
எமது நாட்டின் முன்னாள் அரச தலை வர் மகிந்த, கடந்த ஆட்சியில் குடும்பமாக, வரலாற்றில் எந்த வொரு அரச தலைவர்களும் செய் யாத பல மோசடிகளில் ஈடுபட்டார்.
அந்தக் குடும்பத்தின் உறுப்பினர் களுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால், அவர்களில் எவரும் சிறைக்குச் செல்லவில்லை. வைத்தியசாலைக் குச் செல்வதையே நாம் அவதா னித்து வருகின்றோம் -என்றார். (ஐ)

## யாழ். நகரில் நடமாடிய முதியவர் அரச இல்லத்தில் சேர்ப்பு

எவரது துணையும் இன்றி யாழ். நகர் பகுதியில் நட மாடிய கண்பார்வை குறைந்த வயோதிபர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.
வைத்திலிங்கம் தியாகராஜா (வயது 65) என்ற இந்த முதி யவர் மணிக்கூட்டு வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு முன்பாகவே வாழ்ந்து வந்துள்ளார். இவருக்கு வர்த்தகர்கள் மூன்று நேர உணவுகளை வழங்கியுள் ளனர்.
சிறிது நாள்கள் நோய்வாய்ப்பட்டு கண்பார்வை குறைந்த இவர் பெரியகடை கிராம அலுவலர் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தரின் உதவியுடன் கைதடி முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார்.
சம்பந்தப்பட்ட முதியவரின் முழுமையான தகவல்க ளைப் பெறுவதற்கு உறவினர்கள் யாரும் இருந்தால் உடனடியாக கைதடி முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் கேட்டுள்ளார். (வ-17)

## வடமராட்சி கிழக்கில் கடந்த ஆண்டுக்குரிய வீட்டுத் திட்டம் நிறைவு

யாழ்ப்பாணம்,பெப்.18
வடமராட்சி கிழக்கில் 2016ஆம் ஆண்டில் கொழும்பு அரசினால் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் திட்டங் கள் யாவும் நிறைவுபெற்று உரிய பய னாளிகளிடம் கையளிக் கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்
முதலில் 312 வீடுகள் இந்தத் திட்டத்தி ன்கீழ் நிர்மாணிக்கப்பட்டன. பின்னர் இரண்டாம் கட்டமாக 32 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.
இந்த வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் நூறு வீதம் நிறை வடைந்து உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. ஒவ்வொரு வீடும் 8 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. பயனாளிகளுக்குக் கட்டம் கட்டமாக கொடுப் பனவுகள் வழங்கப்பட்டன. (வ-17)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உயர்தர
வர்த்தகப்பிரிவு ஆசிரியர்
இளையதம்பி பிரபாகரன்
அவர்களின் தந்தையார்
கந்தையா இளையதம்பி
அவர்கள் 16.02.2017 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
ஆசிரியர் வட்டம்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
(AJA CS 4171) (22.17)


# மனித மேம்பாட்டு கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.18
மனித உன்னதத்தை நோக் கிய சத்தியசாயி மனித மேம் பாட்டுக் கல்வி முறைக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் செவ்வாய்க் கிழமை வரை வடமராட்சி மத்திய கல் லூரியில் காலை 9 மணி தொடக் கம் மாலை 4 மணி வரை நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
முதல்நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சத்தியசாயி கல்வி நிறுவனத்தின் பணிப்பாளரும் மாலைதீவு, இலங்கை சத்திய சாயி பன்னாட்டு நிறுவன பிரதி மத்திய இணைப்பா ளருமான வி.ஜெக நாதன் கலந்து கொள்வார்.
இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தின ராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் அமைச் சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் கலந்து கொள் வார்.
மூன்றாம் நாள் நிகழ்வில் யாழ்ப் பாண வலயக் கல் விப் பணிப்பாளர் என்.தெய்வேந் திரராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப் பட்டது. (வ)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

சுன்னாகம் கிழக்கு அமரர் திருமதி
அன்னப்பிள்ளை (தெய்வானை) சுப்பையா
தோற்றம் 23.04.1921
மறைவு 20.01.2017



கடந்த 20.01.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (18.02. 2017) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (19.02.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அத்துடன் அன்னாரின் மறைவுக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வழங்கியவர்களுக்கும் இறுதி நிகழ்விலும் கலந்து கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"முருகவாசா", 52/8, கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு,சுன்னாகம்.
021 224 2293, 021 224 1827

பிள்ளைகள், மருமக்கள்,பேரன்,
பேர்த்திகள், பூட்டன்,பூட்டிகள் சார்பில்
செ. சிவநடராசா (SNR - ஓய்வுபெற்ற அதிபர்)

### சிவ வாரத்தை முன்னிட்டு

# யாழ்ப்பாண மாநகரில் இன்று மாபெரும் சிரமதானப் பயணம்

யாழ்ப்பாணம், பெப். 18
சிவ வாரத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் தூய்மையான யாழ்ப்பாணம் என்ற திட்டத்தில் யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரணையில் மாபெரும் சிரமதானப் பயணம் யாழ்ப்பாண நகரில் இன்று காலை முன்னெடுக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டது.

4முதன்மைச் சாலைகளிலிருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பமா கும் பயணம் நண்பகல் 12.30 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலை முன்றிலில் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாச்சிமார் கோவில் முன்றிலிலிருந்து கே.கே.எஸ் சாலையூடாகவும், கோம்பயன் மயான சந்தியில் இருந்து மானிப்பாய் சாலையூடாகவும், நல்லூர் ஆலய முன்றிலிலிருந்து பருத்தித்துறை சாலையூடாகவும், யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து பலாலி சாலையூடாகவும் சிரமதானப் பயணம் ஆரம்பமாகி யாழ். போதனா வைத்திய சாலை முன்றிலை வந்தடையும்.

இந்த மாபெரும் சிரமதானப் பயணத்தின் போது சாலையின் இரு மருங்கிலும் உள்ள பொலித்தீன்கள் பிளாஸ்டிக் கழிவுப் பொருள்கள் என்பன அகற்றப்பட்டு அந்தப் பகுதிகள் தூய்மையாக்கப்படவுள்ளதுடன் அப்பகுதிகளில் உள்ள கடைகள் வீடுகள், நிறுவனங்கள் என்பவற்றில் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனை தொடர்பான விழிப்புணர்வு துண்டறிக்கையும் வழங்கப்படவுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை முன்றிலில் நடைபெறவுள்ள ஒன்று கூடலுக்கு யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கே.நந்தகுமார், யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன், யாழ் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் மருத்துவர் எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-101)

### ஒரு மாதம் மின்மானி பதிவு நடக்காததால்

# 3 மடங்குகளாகியது மின்சாரக் கட்டணம்

தென்மராட்சி, பெப். 18
ஒரு மாதம் மின்மானி வாசிப்புப் பதியப்படாததால் மின் பாவனைக் கட்டணம் மூன்று மடங்காக மாறியது. இதனால் மின் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டனர். எனினும் சிலரின் மின் கட்டணப் பட்டியல் சீர் செய்யப்பட்டு உரிய தொகை அறவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தின் மட்டுவில் தெற்கு, நுணாவில் கிழக்கு ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு மாதமும் 12ஆம் அல்லது 13ஆம் திகதிகளில் மின்மானி வாசிக்கப்பட்டு, சிட்டைகள் வழங்கப்பட்டு வந்தன.

கடந்த ஜனவரி மாதம் மின்மானி வாசிப்பவர் வந்து கணக்கெடுக்கவில்லை. பெப்ரவரி மாதத்தில் வந்து பார்வையிட்டு அதில் காணப்பட்ட மின் அலகுகளின் அளவுக்கான கட்டண விவரங்கள் குறித்து மின்பட்டியலை வழங்கினார். ஒரு மாதம் மின்மானி வாசிக்காததால் மின் அலகுகள் அதிகரித்து அதற்கேற்ற கட்டணம் பதிவு செய்யப்பட்டு பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டது. சிட்டையில் வழமையான பாவனைக் கட்டணத்தைவிட மூன்று மடங்கு கட்டணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. திடீர் கட்டண அதிகரிப்பு பற்றி மின்சார சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது, அவர்களின் பணிப்பின் பேரில் சாவகச்சேரி அலுவலகத்தினால் இரு மாதங்களுக்கும் பாவித்த மின் அளவுகளைச் சமமாகப் பாவனை வீதத்தைக் குறைத்து முன்னர் செலுத்திய தொகையின் இரு மடங்காக மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. பாவனையாளர்கள் இந்தத்தொகையை செலுத்தியுள்ளனர். சிலர் மின்சிட்டைப் பிரகாரம் செலுத்தியுள்ளனர் எனத் தெரிவித்ததால், அடுத்த மாதம் குறைத்து அறவிடப்படுமென அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

"மின்மானி வாசிப்புக்கு 17 பேர் தேவையாக உள்ள போதிலும் 7 பேரே தற்போது கடமையாற்றுகின்றனர். இதனால் சில வேளைகளில் சில இடங்கள் தவறியிருக்கலாம். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் மின்சார சபையின் பிரதேச அலுவலகத்துக்கு வந்து தமது கணக்கைச் சீர்செய்து செலுத்த முடியும்" என்று மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(வ- 9)

# கிராம அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த மக்களுடனான ஆலோசனைகள் நிறைவு

தென்மராட்சி பிரதேசத்தில் இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள கிராமத்துக்கு அரை மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் தொடர்பான பொது மக்களுடனான ஆலோசனைக் கூட்டங்கள் பிரதேச செயலக அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன என்று கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சமூக மட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் வேலைத் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகள் முன்னுரிமை அடிப்படையில் இனங் காணப்பட்டன. அவை அடுத்த கட்ட நடவடிக்கைக்காக பிரதேச செயலக அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட செயலகத்தால் கொழும்பு அமைச்சுக்கு அனுப்பப்படும். அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கிராம அலுவலர்கள் தெரிவித்தனர். கடந்த 2 வருடங்களும் (2015-2016) கிராமத் துக்கு ஒரு மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் சமூகமட்ட அமைப்புகளினால் முன்மொழியப்பட்டு அந்தந்த வருடங்களில் செய்து முடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

# கணக்கியல், ஆங்கில டிப்ளோமா கற்கைகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் நடப்பாண்டுக்கான கணக்கியல் மற்றும் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தொழில்நுட்பக் கல்லூரியின் மேலதிக பணிப்பாளர் கே.சாந்தகுமார் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த.உயர் தரத்தில் வர்த்தகக் கற்கை நெறியில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல் (சான்றிதழ் தர) கற்கைநெறியைப் பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தொழில்நுட்பக் கல்லூரியில் 6 மாதம் அல்லது 1வருட ஆங்கில கற்கை நெறியைப் பயின்றவர்கள் விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களை 021 221 2403 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றுள்ளது.

(வ-8)

## பிரிவுபசார நிகழ்வு

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றும், இடமாற்றம் பெற்றும் சென்றவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வும் கடந்த ஒரு வருட காலத்தில் திருமண பந்தத்தில் இணைந்த பிரதேச செயலக அலுவலர்களை வாழ்த்தும் நிகழ்வும் இன்று மு.ப. 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற 3 அலுவலர்களும், இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் உள்ளிட்ட 18 அலுவலர்களுக்கு பிரிவுபசார நிகழ்வும் 8 புதுமணத் தம்பதிகளுக்கு வாழ்த்துகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் பிரதேச செயலக அலுவலர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறுமென சங்கச் செயலாளர் தெரிவித்தார். (வ - 9)


## மரண அறிவித்தல்

### பரமு (ஓடலி சண்முகம்) கிருபாலரட்ணம்

(விளானை, களபூமி, காரைநகர், லண்டன், பிரித்தானியா)



காரைநகர், களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும், லண்டன், பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட பரமு (ஓடலி சண்முகம்) கிருபாலரட்ணம் 13.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு (ஓடலி சண்முகம்) - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் யோகமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவமலரின் (சியா) அன்புக் கணவரும், உஷாந்தன், பிருந்தன், பிரசாந்தன், குகப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2017) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London NW7 1NB என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் அதேயிடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விளானை, களபூமி, காரைநகர். (AJA/470) (11) குடும்பத்தினர்.

077 853 1721 - இலங்கை,
0044 2089 037677 - லண்டன்/078 387 24794



## மரண அறிவித்தல்

பிறப்பு 1973 . 04 . 05



இறப்பு 2017 . 02 . 14

### செல்வி நகுலினி தம்பிஐயா

இல.9, கொண்டலடிலேன், நல்லூர், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி நகுலினி தம்பிஐயா 14.02.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - லிங்காதேவி தம்பதிகளின் புதல்வியும் குமுதினி, நகுலேஸ்ரன், தேவகி, கார்த்திகா, துளசிக்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜன், சங்கீதா, ஜோய் றிக்ஸ்மன், குலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
றிக்ஸ்மன் தேவகி

லங்காதேவி - இந்தியா - 919 884 340 284
துளசிகா - இந்தியா - 918 056 294 234
ராஜன் குமுதினி - கனடா - 514 738 9950
றிக்ஸ்மன் தேவகி - 516 336 8554
குலேந்திரன் கார்த்திகா - 416 613 3547

# மாவாப் பாக்கு வைத்திருந்த இருவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம்.பெப்.18
கஞ்சா கலந்த மாவாப் பாக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவருக்கு தலா 9 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம்.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வைத்து 60ஆயிரம் ரூபா மற்றும் 20ஆயிரம் ரூபா பெறுமதியான கஞ்சா கலந்த மாவா பாக்கை வைத்திருந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு பேர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது குற்றச்சாட்டுகளை இருவரும் ஒப்புக்கொண்டதையடுத்து பதில் நீதிவான் சறோஜினி இளங்கோவன் ஒவ்வொருவருக்கும் தலா 9ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார். (வ-ரி)

## தண்டம் அறவீடு

நவிண்டில் பகுதியில்கடந்த 4ஆம் திகதி சட்டவிரோதமாக மரப் பலகைகளைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் நீர்வேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபருக்கு பருத்தித்துறை நீதிவான் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துக் கட்டளையிட்டார். (வ-26)

*வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியில்*

# இடமாற்றிய அதிபரை மீளவும் நியமிக்கக் கோரி கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
இடமாற்றம் வழங்கப்பட்ட அதிபரை மீளவும் நியமிக்குமாறு வலியுறுத்தி வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் ஆகியோர் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். எனினும் அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையையடுத்து போராட்டம் நண்பகல் 12 மணியுடன் கைவிடப்பட் டது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கடந்த இரு வருடங்களாகக் கடமையாற்றி வந்த பதில் அதிபர் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து வேறு பாடசாலைக்கு இடமாற்றப்பட்டார். பாடசாலைக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் புதிய அதிபர் நியமிக்கப்பட்டார்.

பாடசாலையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரை ஏற்றுக் கொள்ள பாடசாலைச் சமூகம் மறுப்புத் தெரிவித்தது. இந்த நிலையில் பெற்றோர், நலன் விரும்பிகள், பழையமாணவர் ஆகியோர் இணைந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த பழைய அதிபரை மீண்டும் பாடசாலையில் நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுக்காலை 8 மணியிலிருந்து பாடசாலைக்கு முன்பாக சுலோகங்களைக் கைகளில் ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் தனக்குப் பொருத்தமான பாடசாலையைத் தந்தால் தான் வேறு பாடசாலைக்குச் செல்லத்தயாராக விருப்பதாகப் பெற்றோர் மத்தியில் தெரிவித்திருந்தார். அதே நேரம் வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து பாடசாலைக்குச் சென்ற அதிகாரிகளுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து போராட்டம் நண்பகல் 12 மணியுடன் கைவிடப்பட்டது. (வ-115)

# சிவராத்திரி வழிபாடு

யாழ்ப்பாணம்,பெப்.18
புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகா சிவராத்திரி பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பு நான்கு சாம முழுக்கு, ஆராதனைகளுடன் நடைபெறும். அத்துடன் சனிக்கிழமை அம்பிகை வீதியுலா வரும் அலங்கார காட்சியும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்.பெப்.18
மதுபோதையில் வாகனம் செலுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றினால் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

பொலிஸார் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இருவரும் மன்றில் ஏற்றுக்கொண்டனர். வழக்கை விசாரித்த பதில் நீதிவான் சறோஜினி இளங்கோவன், முதலாவது நபர் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டுக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்த வேண்டும். அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்கு நிறுத்தி வைக்கப்படும். அத்துடன் அவர் 250 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

மற்றையவர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்த வேண்டும். சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்கு 4 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். அத்துடன் அவர் 250 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார். (வ-ரி)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## வெளிவாரிப் பரீட்சைகள்

01. வணிக முதற் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்)
02. வணிக முதற் தேர்வு - 2014 (பழைய பாடத்திட்டம்)
03. வணிக இரண்டாம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்)
04. வணிகமாணி - பகுதி - I - 2014 (பழைய பாடத்திட்டம்)
05. வணிக மூன்றாம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்)
06. வணிக மாணி - பகுதி - II - 2014 ( புதிய பாடத்திட்டம்)
07. வணிக நான்காம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்)
08. வணிக மாணி - பகுதி III - 2014 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 06.03.2017 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. வணிக முதற் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்) | 06.03.2017 - 14.03.2017 | 9.00 - 12.00 |
| 2. வணிக முதற் தேர்வு - 2014 (பழைய பாடத்திட்டம்) | 06.03.2017 - 14.03.2017 | 9.00 - 12.00 |
| 3. வணிக இரண்டாம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்) | 17.03.2017 - 25.03.2017 | 9.00 - 12.00 |
| 4. வணிக மாணி - பகுதி - I - 2014 (பழைய பாடத்திட்டம்) | 17.03.2017 - 25.03.2017 | 9.00 - 12.00 |
| 5. வணிக மூன்றாம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்) | 27.03.2017 - 01.04.2017 | 9.00 - 12.00 |
| 6. வணிக மாணி - பகுதி - II - 2014 (பழைய பாடத்திட்டம்) | 27.03.2017 - 01.04.2017 | 9.00 - 12.00 |
| 7. வணிக நான்காம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்) | 03.04.2017 - 08.04.2017 | 9.00 - 12.00 |
| 8. வணிக மாணி - பகுதி - III - 2014 (பழைய பாடத்திட்டம்) | 03.04.2017 - 08.04.2017 | 9.00 - 12.00 |

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 01.03.2017 (புதன்கிழமை) தொடக்கம் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர் (AJA/781)(11,17) 17.02.2017


# புதிய உறுப்புரிமைக்கு விண்ணப்பம் கோரல்

அச்சுவேலி,பெப்.18
வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவு அரச சேவை ஓய்வூதியர் சகாய நிதிச் சங்கத்தில் புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்கு கடித மூலம் உறுப்புரிமை விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரச சேவை ஓய்வூதியம் பெறும் அனைவரும் ஓய்வூதியர் சகாய நிதிச் சங்கத்தில் உறுப்புரிமைபெற வேண்டும் என்ற வகையில் ஓய்வூதியத் திணைக்களத்தால் அவர்களின் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவில் இருந்து ரூபா 50 கழிக்கப்பட்டு வருகின்றது.

வலி.கிழக்கில் ஓய்வூதியம் பெறும் 1503 பேரில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 600 க்கு மேற்பட்டவர்களுக்கு உறுப்புரிமை விண்ணப்பப்படிவம் அவர்களின் சொந்த முகவரிக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரிய விண்ணப்பத்தைப் முழுமை செய்து கையயாப்பமிட்டு வலி. கிழக்கு பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் புதன்கிழமை தோறும் செயற்படும் வலி. கிழக்கு பிரதேச சங்க அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அவர்களுக்கு அங்கத்துவ இலக்கம் மற்றும் உறுப்புரிமை அட்டை வழங்கப்படும். அதன்மூலம் உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய கொடுப்பனவுகள் சகாயங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வலி.கிழக்குப் பிரதேச ஓய்வூதியம் பெறுவோரின் சகாய நிதிச் சங்கச் செயலர் அ.அருந்தவநேசன் தெரிவித்தார். (வ-11)

# சாவகச்சேரி கால்நடை மருத்துவரின் அறிவிப்பு

தென்மராட்சி, பெப். 18
சாவகச்சேரி கால்நடை மருத்துவர் அலுவலக வெளிநோயாளர் பிரிவு ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8 மணி தொடக்கம் மு.ப.11.30 மணி வரை செயற்படும். மு.ப.11.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை வெளிக்கள சேவைகள் இடம்பெறுவதால் வெளிநோயாளர் பிரிவு செயற்படாது.

இவ்வாறு கால்நடை மருத்துவர் கே.சசிமாறன் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச கால்நடை மருத்துவர் அலுவலகத்தில் ஒரு மருத்துவரே கடமையாற்றுவதால் வெளிநோயாளர் பிரிவு மற்றும் வெளிக்கள வேலைகள் அனைத்தும் அவரே மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆடு, மாடு போன்றவைக்கு அவசர சிகிச்சை வழங்க வேண்டிய நிலை ஏற்படும் போது அவசியம் அங்கு செல்ல வேண்டியுள்ளது. மாதத்தில் ஆறு நாள்கள் கால்நடைகள் சினைப்படுத்தல் மற்றும்.தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பிரதேசத்தில் 60 கிராம அலுவலர் பிரிவிலும் பணியாற்ற வேண்டியிருப்பதால் நாய், பூனை உட்பட கால்நடைகளுக்குப் பயன்படுத்த பூச்சிமருந்து தெள்ளு போன்றவற்றை கட்டுப்படுத்தும் மருந்துகள் பெற்றுக் கொள்ள வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தருகின்ற பொதுமக்கள் காலை 8 மணி தொடக்கம் மு.ப.11.30 மணி வரை மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தினமும் 60 தொடக்கம் 70 வரையானோர் வெளிநோயாளர் பிரிவில் மருந்துகள் பெற்றும் கால்நடைகளுக்கு சிகிச்சை பெற்றும் செல்கின்றனர். அவசர நிலையில் உள்ள கால்நடைகளுக்கு நேரில் சென்று சிகிச்சை வழங்க வேண்டி காணப்படுவதால் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகின்ற பொதுமக்கள் மு.ப.11.30 மணிக்குள் அலுவலகத்துக்கு வருகை தந்து மருந்துகளைப் பெற்றுச் செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார். (வ-9)



## 12 முதிரைக் குற்றிகள் முழங்காவிலில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.18

கிளிநொச்சி, முழங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருபரன் வீதிக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்ட முதிரைக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

கடத்துவதற்குத் தயாராக இருந்த 12 முதிரைக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன- என்று முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி)

## கூராய் மக்களை அச்சுறுத்தும் காட்டு யானைகள்

மன்னார், பெப்.18

மாந்தை மேற்கில் உள்ள கூராய் கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. யானைகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கிராம மக்கள் தெரிவித்தனர்.

மன்னார், இலுப்பைக் கடவை கிராமத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கூராய் கிராமம். அது சுற்றிலும் காடு சூழ்ந்த கிராமமாகும். அங்குள்ள மக்களின் வாழ்வாதார தொழில் விவசாயமே.

தினமும் யானைகள் கிராமத்துக்குள் வருகின்றன. எமது விவசாய நிலங்களை அழிக்கின்றன. நெற்பயிர்கள், தோட்டங்கள் என்பன நாசம் செய்யப் படுகின்றன. இது தொடர்பாக மாந்தை மேற்கு பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். இரவில் தினமும் விழித்திருந்து யானைகளை விரட்ட வேண்டியுள்ளது. கூட்டமாக வரும் யானைகளை விரட்டினால் அவை காட்டுக்குள் சென்றுவிடும். தனியாக வரும் யானையை எவ்வாறு விரட்டினாலும் அது காட்டுக்குள் செல்வதில்லை. எம்மைத் தாக்க வருகின்றது.

எமது பிள்ளைகளும் அச்சம் காரணமாக இரவுகளில் விழித்திருக்கின்றனர். அவர்கள் பாடசாலை செல்லும் போதுசோர்வுடனேசெல்கின்றனர். அவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன.

எமது கிராமத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மின்சார வேலி அமைத்து எமது கிராமத்துக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் - என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-2)

# யானைகளின் அச்சுறுத்தலால் மூடப்படுகிறது வைத்தியசாலை

### நெடுங்கேணியில் மாலையானதும் அவலம்

வவுனியா, பெப்.18

காட்டு யானைகளின் தொல்லையால் நெடுங்கேணி மருத்துவமனை மாலை 4 மணியுடன் மூடப்படவுள்ளது. இது தொடர்பாக பிரதேச செயலகத்துக்கும், வன ஜீவராசிகள் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் மற்றும் பொலிஸாருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். இவ்வாறு மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் தெரிவித்தார்.

மருத்துவர் விடுதிக்குள் நேற்றுமுன்தினம் மாலை காட்டு யானை புகுந்துள்ளது. மருத்துவர் ஒருவாறு ஓடித் தப்பினார். அதன்பின்னரே இவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டது என்று அறிய முடிகின்றது.

வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட நெடுங்கேணியில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. மக்களின் வாழ்வாதாரங்கள் யானைகளால் அழிக்கப்படுகின்றன. மக்களின் குடிமனைகளும் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. இப்போது யானைகளின் பார்வை மருத்துவமனையின் பக்கமும் திரும்பியுள்ளது.

எங்கள் மருத்துவமனைக்குள் முன்னரும் பல தடவை யானைகள் வந்திருக்கின்றன. அது தொடர்பாக உரிய தரப்புகளுக்கு நாம் அறிவித்திருந்தோம். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மருத்துவமனை வளாகத்துக்குள் வரும் யானைகள் இப்போது கட்டடங்களுக்குள்ளும்நுழையத்தொடங்கியுள்ளன. இரவில் தங்கி நிற்பதற்கு அச்சமாக உள்ளது. மருத்துவமனையில் உள்ளவாகனங்கள், கட்டடங்கள்யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகுமோ என்றும் அச்சமாக உள்ளது.

நோயாளர் விடுதியில் உள்ள நோயாளர்களைக் காப்பாற்றுவதா? எம்மைக் காப்பாற்றுவதா? என்ற இக்கட்டான நிலையில் இருக்கின்றோம். காட்டு யானைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வரும்வரை மருத்துமனையை பி.ப. 4 மணிக்குப் பின்னர் இயக்க முடியாது என்று கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம்- என்று நெடுங்கேணி மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் தெரிவித்தார். (ற-5,10)



வீணாகான குருபீடம் கிளிநொச்சியில் கடந்த புதன்கிழமை ஓம் நம சிவாய நடைப் பயணம் நடத்தியது. முன்னதாக கிளிநொச்சி கந்த சுவாமி ஆலய முன்றலில் மாணவிகளின் நடனம் நடைபெற்றது. (ற-21)

## வவுனியா குடிவரவு பணியகம் மின் தடையால் முடக்கம்

### தூர இடங்களில் இருந்து வந்த மக்கள் விசனம்

வவுனியா, பெப்.18

வவுனியாவில் உள்ள குடிவரவு - குடியகல்வு பிராந்தியப் பணியகத்தில் நேற்று மின் தடை காரணமாக பணிகள் தடைப்பட்டன. தூர இடங்களில் இருந்து சேவைகளைப் பெற வந்த மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்தியக் கிளை வவுனியாவில் செயற்படுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து தினமும் பெருமளவிலான மக்கள் அங்கு சேவைகளைப் பெறுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் நேற்று மின்தடை செய்யப்பட்டது. கணினி மூலமான செயற்பாடுகள் நடைபெறும் பிராந்திய அலுவலகத்தின் பணிகள் முற்றாக முடங்கின. தூர இடங்களில் இருந்து சேவைகளைப் பெற வந்திருந்த மக்கள் அசௌகரியங்களைச் சந்தித்தனர்.

நேற்று (நேற்றுமுன்தினம்) இரவு மூதூரில் இருந்து வவுனியா வந்தோம். கடவுச்சீட்டுப் பெறுக் கொள்வதற்காக 10 பேரை அழைந்து வந்துள்ளேன். 15 ஆயிரம் ரூபா செலவில் வாகனம் வாடகைக்கு அமர்த்தியே வந்தோம். இன்று (நேற்று) காலை குடிவரவு - குடியகல்வு பணியகத்துக்குச் சென்றோம். மின் தடையால் பணிகள் நடைபெறாது என்று அங்கிருந்தவர்கள் கூறுகின்றனர் - என்று கிழக்கு மாகாணத்தின் மூதூரில் இருந்து வந்த முதியவர் ஒருவர் விசனத்துடன் கூறினார்.

பிராந்திய அலுவலகத்துக்கு இது வரை மின் பிறப்பாக்கி வழங்கப்படவில்லை. அதனால் மின் தடை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அலுவலகப் பணிகள் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)



## சைக்கிள்கள் அன்பளிப்பு

பளைக் கல்விக் கோட்டத்தில் உள்ள 8 பாடசாலைகளில் கல்வி கற்கும் பொருளாதார ரீதியில் நலிந்த 40 மாணவர் களுக்கு சைக்கிள்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பளை மத்திய கல்லூரி ஆசிரியர் ம.மதிதாஸ் புலம்பெயர் நாடுகளில் உள்ள தனது நண்பர்களின் நிதிப் பங்களிப்புடன் கொள்வனவு செய்து அவற்றை மாணவர்களுக்கு வழங்கினார்.

பளை மத்திய கல்லூரி, கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மாசார் அரச தமிழ்க் கலவன் பாடசாலை, சோரன்பற்று கணேசா வித்தியாலயம், இயக்கச்சி அரச தமிழ்க் கலவன் பாட சாலை, வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை, தர்மக்கேணி அரச தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலை களில் கற்கும் மாணவர்களுக்கே சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-9)

# நாட்டுக்காக சவால்களை எதிர்கொள்ள நான் தயார்

## அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.18

அரசால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்து விமர்சிப்பவர்கள், நாடு முன்னர் காணப்பட்ட நிலை மற்றும் தற்போதுள்ள நிலையையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நான் நாட்டுக்குத் தேவையான மாற்றங்களை, எத்தனை சவால்களை எதிர்கொள்ள நேரிட்டாலும் தொடர்ந்தும் நிறைவேற்றுவேன்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வரக்காபொல ஆதார வைத்தியசாலையின் நவீன கருவிகளுடன் கூடிய புதிய ஆறு மாடி மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று நாட்டின் சகல துறைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மிகத்தெளிவானவை. நாட்டில் சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பொன்றைத் தற்போது உருவாக்கியுள்ளோம். இலவச சுகாதார சேவையை வலுப்படுத்துவதற்கு அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுகாதாரத்துறையில் நிறைவேற்ற இயலாது காணப்பட்ட பல விடயங்கள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. பல்தேசிய நிறுவனங்களின் பின்னால் செல்வதற்கு அரசு ஒரு போதும் தயாராக இல்லை. மக்கள் நாட்டுக்காக எமக்கு வழங்கிய பொறுப்புக்களைச் சரியான முறையில் மேற்கொள்கிறோம்.- என்றார்.

மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்த அரச தலைவர், அங்கு சத்திரசிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் குறைப் பிரசவப்பிரிவு என்பவற்றையும் பார்வையிட்டார். நிகழ்வில் அமைச்சர்களான ராஜிதசேனாரத்ன, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேம தாச, நாடாளுமன்ற உறுப்பினர் துசிதா விஜேமான்ன உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(ஐ)

# நிதியமைச்சரால் அரசுக்கு நட்டம்

கொழும்பு,பெப்.18

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முன்வைத்த வரவு-செலவுத் திட்டப் பரிந்துரையால், அரசுக்கு 6 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் பயன்படுத்தப்பட்ட வாகன உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி வாகனங்களை உருவாக்கியிருந்தால், அந்த வாகனங்களை அபராதத் தொகையுடன் பதிவு செய்யச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் கணிப்பின்படி, முழுமையாகன வாகனமொன்றைப் பகுதி பகுதியாகக் இறக்குமதி செய்தால், அந்த வாகனத்துக்கு 6 இலட்சத்து 61 ஆயிரத்து 268 ரூபா மாத்திரமே செலுத்த வேண்டும். அதே நேரம், முழுமையான வாகனத்தை இறக்குமதி செய்யும் முறையின் கீழ், சிறிய ரக கார் ஒன்றுக்காக 35 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவை வரியாகச் செலுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளால், நாட்டுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது'.-என்றார். (ஐ)

# தகுதியற்றவர்களே சுயாதீன ஆணைக்குழுக்களில் நியமிப்பு

## இப்படிச் சொல்கிறார் ஜீ.எல்.பீரிஸ்.



கொழும்பு,பெப்.18

நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற கூட்டு அரசின் வேலைத்திட்டங்கள் அனைத்தும், பூஞ்சணம் பிடித்து விட்டன. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின்படி, சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவற்றுக்கு நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும், தகுதியற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பில் 19ஆவது திருத்தம், போதிய திட்டமிடல்களுடன் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது நடந்திருக்கவில்லை. அதன் விளைவாக, தகுதியற்ற பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார். நீதியை அழிப்பேன் என்று கூறிய ஒருவரே, இன்று பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த கட்டமாக நீதிச் சேவை ஆணைக்குழு மீது, இந்த அரசு கைவைத்துள்ளது.

அரசுக்கு அத்திபாரமே, நீதிதான். அந்த நீதியே, இன்று ஆட்டம் கண்டுவிட்டது. மேல்நீதிமன்ற நீதிபதியாக இராமநாதன் கண்ணன் என்ற தகுதியற்ற ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நீதிச் சேவை சங்கத் துடன் கலந்தாலோசித்ததன் பின்னரே, இராமநாதன் கண்ணன் நியமிக்கப்பட்டார் என்று அரச தலைவர் கூறியுள்ளார்.

ஆனால், இந்தக் கருத்தை நீதிச்சேவைச் சங்கம் மறுத்துள்ள அதேவேளை, மேல் நீதிமன்ற நீதிபதியாக இராமநாதன் கண்ணன் நியமிக்கப்பட்டதற்கும், தமக்கும் தொடர்பில்லை என்றும் கூறியுள்ளது.

எனது அரசியல் வாழ்க்கையில், இராமநாதன் கண்ணன் தொடர்பில் கேள்விப்பட்டிருக்கவுமில்லை. அவரைக் கண்டதுமில்லை. அவர் தொடர்பில் அறிந்ததுமில்லை. இந்த நியமனம் மூலம், நீதித்துறை மீதுள்ள நம்பகத்தன்மை வலுவிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில், நீதிச் சேவைச் சங்கத்துக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. காரணம், அரச தலைவர் ஒரு முடிவை எடுத்துவிட்டார் என்றால், அதை எவராலும் மாற்ற முடியாது. மக்கள் மனம் வைத்தால் மாத்திரமே, அரச தலைவரின் தீர்மானங்களில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்' -என்றார். (ஐ)

## புதிய அரசமைப்பு விடயத்தில்

# நாட்டைச் சீரழிக்க ஐ.தே.க. முயற்சி

## கெஹெலிய ரம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.18

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவினர், பன்னாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக, சமஷ்டி ஆட்சி முறைக்கு ஒப்பான வகையில் புதிய அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு வந்து, நாட்டைச் சீரழிக்க முற்படுகின்றனர்.

இவ்வாறு நாடாளு மன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பன்னாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாகவே, கூட்டு அரசு, அரசமைப்பில் சமஷ்டியைக் கொண்டு வர முயற்சிக்கின்றது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரசமைப்பில் திருத்தங் கள் சில கொண்டு வரப்பட்டன. தேர்தல் பரப்புரைகளின்போது, வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன, அரசமைப்பு சீர்திருத்தம் மேற் கொள்ளப்படுவது, மக்களுக்காக வேண்டியே



தவிர, பிற அரசியல் இலாபங்களுக்காக அல்ல' என்று தெரிவித்திருந்தார்.

அந்த நேரத்தில் அந்தப் பரப்புரை வரவேற்கத்தக்கதாகக் காணப்பட்டது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியகட்சிக் குழுவினர், பன்னாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக சமஷ்டி ஆட்சி முறைக்கு ஒப்பான வகையில், அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு, நாட்டைச் சீரழிக்க முற்படுகின்றனர்.

அரசமைப்பில் திருத்தவேண்டிய விடயங்கள் தொடர்பில், மக்களால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் பல உள்ளன. அவற்றையெல்லாம் விடுத்து, பன்னாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதியையும், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு வழங்கிய வாக்குறுதியையும் நிறைவேற்றும் வகையிலான திருத்தங்களையே அரசமைப்பின் ஊடாக அரசு மேற் கொண்டு வருகின்றது.

சி.வி.விக்னேஸ்வரன் கூறும் பேச்சுக்கு, மறுபேச்சை இந்த அரசு பேசுவதில்லை. அவர் கூறும் விடயங்களுக்கு எல்லாம் தலையாட்டுகிறது. நாட்டில் சில்லறைப் பிரச்சினைகள் பல உள்ளன. அதையெல்லாம் ஆட்சி மாறினாலும் தீர்வைப் பெற்றுவிடலாம். ஆனால், முறையற்ற அரசமைப்புத் திருத்தங்களை கொண்டு வந்தால் அதனால் ஏற்படும் விளைவிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாது.- என்றார். (ஐ)

# சிங்கப்பூரில் மகிந்தவுக்கு பாதுகாப்பு வழங்க மறுப்பு

கொழும்பு,பெப்.18

சிங்கப்பூர் சென்றுள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு விசேட பாதுகாப்பு வழங்க அந்த நாட்டு அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட பயணம் காரணமாக மகிந்த சிங்கப்பூர் சென்றுள்ளார். சிங்கப்பூரில் அவருக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தல்களும் இல்லை எனவும் அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அண்மையில் மலேசியா சென்றிருந்த மகிந்த மற்றும் அவரது பிரதிநிதிகளுக்கும் அந்த நாட்டில் வசிக்கும் தமிழர்கள் சிலரால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ள மகிந்த தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு அந்த நாட்டின் பாதுகாப்பு பிரிவுகளிடம் கோரிக்கை விடுக்குமாறு அவரது தனிப்பட்ட செயலாளர் உதித் லொக்கு பண்டாரவுக்கு தெரிவித்திருந்தார். உதித் லொக்கு பண்டார அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

அதற்கமைய அயலுறவுத்துறை அமைச்சர் அந்த நாட்டு இலங்கை தூதர் ஊடாக சிங்கப்பூர் பாதுகாப்புப் பிரிவுகளிடம் அதற்கான கோரிக்கையை கடிதம் மூலம் அனுப்பி வைத்தார். எனினும் மகிந்தவுக்கு சிங்கப்பூரில் எந்தவித உயிர் ஆபத்துக்கள் அல்லது அச்சுறுத்தல்கள் ஏற்படுவதற்கு இடமில்லை என்று சிங்கப்பூர் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

மகிந்தவுடன் அவரது கடைசி மகன் ரோகித ராஜபக்ச, லொஹான் ரத்வத்தை மற்றும் உதித் லொக்குபண்டார ஆகியோர் சிங்கப்பூர் சென்றுள்ளனர். (ஐ)

# மு.காவின் உயர்பீடக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும்


## கட்சி அறிவிப்பு

கொழும்பு,பெப்.18
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பதவி, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவகாரம் மற்றும் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள தவிசாளர் பஷீர் சேகுதாவுத்துக்கு எதிரான விசாரணை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில், கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும் என்று கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில், கட்சியின் பொதுச் செயலாளர் - மன்சூர் ஏ.காதர் தெரிவித்ததாவது:

27 ஆவது பேராளர் மாநாட்டுக்கான அழைப்பிதழ்கள் முறைப்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும், காங்கிரஸின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலரால், பேராளர் மாநாட்டுக்கான அழைப்பிதழ் தொடர்பில் விசமத்தனமாக பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போது நாங்கள் பேராளர் மாநாட்டை நடத்தி முடிந்திருக்கின்றோம். இதற்குப் பிற்பாடு பஷீர் சேகுதாவுத் விடயம் தொடர்பில் உயர்பீடம் முடிவெடுக்கும். பேராளர் மாநாட்டுக்கு அழைப்பிதழ்கள் கிடைக்கவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் எதுவும் எங்களுக்கு வரவில்லை. மு.கா.வினுடைய எதிரிகள் அவ்வாறு விமர்சிக்கிறார்கள். ஆனால், எங்களுடைய உறுப்பினர்கள் எந்தவிதக் குற்றச்சாட்டுகளையும் எம்மிடம் முன் வைக்கவில்லை. -என்றார். (ஐ)



# ஆலயக் களஞ்சியத்தில் கைக்குண்டுகள் மீட்பு

திருமலை, பெப்.18
திருகோணமலை - மடத்தடிச் சந்தியிலுள்ள கிருஷ்ணன் ஆலயத்தின் களஞ்சியசாலைக்குள் இருந்து நான்கு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் ஆலயத்தினர் களஞ்சியசாலையைத் துப்பரவு செய்யும் போது, பாவிக்கக் கூடிய நிலையில் அங்கு உரப்பையில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட நான்கு கைக்குண்டுகளையும் திருகோணமலை நீதிமன்ற உத்தரவின் பேரில் செயலிழக்க செய்வதற்காக விசேட அதிரடிப்படையினர் எடுத்துச் சென்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ய-40,45)

## தகவலறியும் சட்ட மூலம் தொடர்பில்

# சாதாரண மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்

## மட்டு. மாவட்ட செயலர் தெரிவிப்பு



களுவாஞ்சிக்குடி,பெப்.18
தகவலறியும் சட்ட மூலத்தை சாதாரண மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் ஊடகங்கள் அவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும்.- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டச் செயலர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
அரசின் திட்டங்கள், கொள்கைகள், மக்களுக்காக எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகள், மக்களுக்கான நலனோம்புத் திட்டங்கள், மக்கள் தங்களுடைய தேவைகளைப் பெற்றுக் கொள்ளவதற்குச் செல்ல வேண்டிய அலுவலகங்கள், பேச வேண்டிய விடயங்கள், தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் மற்றும் அவற்றுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவங்கள் போன்றவைகள் தொடர்பில் மக்களிடம் தெளிவு இல்லை. அதனால் மக்கள் பல அலுவலகங்களுக்கு அலைந்து திரிந்து இறுதியிலே அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் தடுமாறுகின்ற நிலைமை உள்ளது.

காணாமல்போன உறவினர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் சிலர் கடந்த வாரம் என்னிடம் வந்து தகவலறியும் சட்டத்தின் மூலம், எமது உறவினர்கள் காணாமல் போனமை தொடர்பில் பதில் தர வேண்டும். எமக்கு வீடுகள் கிடைக்கவில்லை. தகவலறியும்சட்டத்தின்மூலம் நீங்கள் பதில் தர வேண்டும் எனத் தெரிவித்தார்கள். காணாமல் போனவர்கள்விடயத்தை நாங்கள் கையாள்வதில்லை எனக்கூறியதுடன், வீட்டுத் தேவைகள் குறித்து கிராம சேவகர், பிரதேச செயலர் போன்றோரிடம் விண்ணப்பித்துள்ளீர்களா என நான் அவர்களிடம் கேட்டேன்.

இல்லை, நாங்கள் எவரிடமும் விண்ணப்பிக்கவில்லை. எமக்குத் தகவலறியும் சட்டத்தின் கீழ் பதில் தரவேண்டும் எனக் கேட்டார்கள்.

எனவே, தகவலறியும் சட்ட மூலத்தை சாதாரண மக்கள் விளங்கிக் கொள்வதற்கு ஊடகங்கள் துணைபுரிய வேண்டும். மக்களுக்கு கிடைக்க வேண்டியவைகள் கிடைக்காவிட்டால், நியாயங்கள் மறுக்கப்பட்டிருந்தால், அநீதி இழைக்கப்பட்டிந்தால், அவைகள் தொடர்பில் தட்டிக்கேட்கின்ற சட்டம் தான் தகவலறியும் சட்டமாகும். மாறாக நிவாரணத்தைக் கேட்கின்ற சட்டமல்ல என்பதை உணர்த்த வேண்டும்.

அரசின் சட்ட மூலங்கள், நிருவாக சுற்றறிக்கைகள் போன்ற மக்களுக்கான ஏற்பாடுகளை மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் மிக எளிய வடிவில் மக்களைச் சென்றடைவதற்கு ஊடகங்கள் உதவ வேண்டும். இது அரச நிர்வாகத்துக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஏனைய அனைவருக்கும் ஏதுவாக அமையும் - என்றார். (ஐ-ய)

# ஏறாவூரில் 2,500 குடும்பங்களுக்கு காணியில்லை

ஏறாவூர்,பெப்.18
ஏறாவூர் நகரப் பிரதேச செயலகப் பிரிவில் காணி வசதியின்றி வாழும் சுமார் 2 ஆயிரத்து 500 குடும்பங்களின் விவரங்கள் அரச தலைவரின் கவனத்துக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏறாவூர் நகரப் பிரதேச செயலகப் பிரிவில் வாழும் மக்கள் தாம் குடியிருப்பதற்கு காணி இல்லாமை காரணமாக மிகச் சிரமத்துடன் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளிலும், நிலங்களிலும் குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சுமார் 2 ஆயிரத்து 500 குடும்பங்கள் தங்களுக்குக் காணி தேவை என்று ஏறாவூர் நகரப் பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளனர். ஆயினும், அவர்களுக்குக் காணி பெறுவதில் சிரமம் காணப்படுகின்றது. இது சமூகப் பிரச்சினையாகவும் மனிதாபிமான நெருக்கடியாகவும் உருவெடுத்துள்ளது.

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவுடன் இணைந்ததாக உள்ள ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் போதியளவு காணிகள் உள்ள அதேவேளை, அருகில் வாழும் இந்த மக்கள் காணி வசதியின்றி அந்தரிக்க விடப்பட்டிருப்பது மனிதாபிமான நெருக்கடியாகவும் பார்க்கபட வேண்டியுள்ளது.-என்றார். (ஐ)

## பேரினவாதத்தை எதிர்கொள்ள

# சிறுபான்மை மக்களின் ஒற்றுமை அவசியம்

## ஏ.ஆர். எம்.ஜிப்ரி தெரிவிப்பு


அம்பாறை,பெப்.18
இன நல்லுறவுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த தமிழ் முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வு அற்ற நிலையும், இன விரிசலும் ஏற்படுவதற்கு கடந்த காலப் போர்ச்சூழல் மற்றும் குறுகிய சிந்தனையுடைய அரசியல் போக்குகள் காரணங்களாக அமைந்தன. தற்போது அந்த நிலை படிப்படியாக மாற்றமடைந்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. எனவே நாம், மீண்டும் இறுக்கமான உறவைப் பேண வேண்டும். அதனூடாகவே பேரினவாதத்தை எதிர்கொள்ள முடியும். இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும், கைத்தொழில் வர்த்தக அமைச்சரின் நாடளுமன்ற விவகார செயலாளருமான ஏ.ஆர்.எம்.ஜிப்ரி தெரிவித்தார்.

கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் கட்சியின் இளைஞர் மற்றும் மகளிர் கிளைகளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
கல்முனைத் தொகுதியிலுள்ள தமிழ், முஸ்லிம் கிராமங்கள் ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று கலந்து காணப்படுகின்றன. அதே போன்று இரு சமூகங்களும் பல்வேறு இடைத் தொடர்புகளைக் கொண்டு, புரிந்துணர்வுடன் செயற்பட்டு மீண்டும் அந்த இறுக்கமான உறவைப் பேண வேண்டும்.

கடந்த தேர்தலில் சிறுபான்மை மக்கள் சகலரும் ஒரேயணியாக நின்று வாக்களித்ததன் காரணமாகவே நல்லாட்சி என் கின்ற கூட்டு அரசை உருவாக்க முடிந்தது. அதேபோல் எதிர்காலத்தில் நாம் ஒற்றுமையுடன் செயற்பட்டு இனவாத செயற்பாடுகளை முறியடிக்க அணி திரள வேண்டும். என்றார். (ஐ)

# துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டார் சிப்பாய்




திருமலை,பெப்.18
திருகோணமலை கடற்படை முகாமில் பணியாற்றும் கடற்படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தன்னுடைய ரி- 56 ரக துப்பாக்கியால் அவர் தன்னைத் தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை, மிரஹவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய கடற்படைச் சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளைத் தாம் ஆரம்பித்துள்ளதாகவும் திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)




பல வருடங்களாக சமுர்த்தி நிவாரணம் நிராகரிக்கப்பட்ட மூதூர் கிழக்கு-மேற்கு மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மூதூர் பிரதேசத்தில் சம்பூர் கிழக்கு-மேற்கு, கட்டைபறிச்சான் தெற்கு- வடக்கு, அம்மன்நகர், கணேசபுரம், சாலையூர், சந்தோசபுரம், கடற்கரைச்சேனை, சேனையூர், நவரட்னபுரம், பாட்டாளிபுரம், நல்லூர் ஆகிய கிராமப் பிரிவுப் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரத்து 900 பேர் தமக்கான சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறு கோரி சம்பூர், நாவலடிச்சந்தியில் இருந்து பேரணியாக மூதூர் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர். அங்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை மூதூர் பிரதேச செயலரிடம் கையளித்தனர். (ஐ)

## அலவாங்கால் தாக்கிக் கொலை: சந்தேக நபருக்கு மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, தர்மபுரத்தில் ஒருவரை அலவாங்கால் தாக்கிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரின் விளக்கமறியலை எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வரை நீடித்தது கிளிநொச்சி நீதிமன்று.

தகராறு ஒன்றில் அலவாங்கால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த இளம் குடும்பத் தலைவர் 8 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி கடந்த 8 ஆம் திகதி உயிரிழந்தார். அந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு கிளிநொச்சிநீதிவான்மன்றில்விசாரணைக்காக நேற்றுமுன்தினம்எடுக்கப்பட்டது.நீதிவான் சந்தேக நபரின் விளக்க மறியலை நீடித்தார்.

*பின்னணி*

கிளிநொச்சி தருமபுரம் கல்லாறுப் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி இருவருக்கிடையே தகராறு ஏற்பட்டது. அது கைகலப்பாக மாறியது. அதில் அலவாங்கால் தாக்கப்பட்ட ஆறுமுகம் கபிலன் (வயது-28) என்ற இளம் குடும்பத் தலைவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டார். 8 நாள்களின் பின்னர் அவர் உயிரிழந்திருந்தார்.

தாக்குதல் நடத்தியவர் என்று சந்தேகிக்கப்படுவர் சம்பவத்தையடுத்து தலைமறைவாகியிருந்தார். பொலிஸாரால் தேடப்பட்டுவந்தநிலையில்மருதங்கேணிப் பகுதியில் அவர் கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். (ற-5-ரி)

# புதுக்குடியிருப்பில் சிக்கியது 15 கிலோ கஞ்சா

## இளைஞர் ஒருவரும் கைது



முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் 15 கிலோ கேரளக் கஞ்சா சிக்கியது. பொதி செய்யப்பட்டுக் கடத்தலுக்குத் தயாராக இருந்த நிலையில் பொலிஸார் அவற்றைக் கைப்பற்றினர்.

வவுனியா சிறப்பு அதிரடிப் படையினருக்கு கஞ்சா தொடர்பான தகவல் கிடைத்தது. அந்தத் தகவல் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குப் பரிமாறப்பட்டது. புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை திடீர் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர்.

26 வயதுடைய இளைஞர் ஒருவரின் வீட்டில் இருந்து 14 கிலோ 250 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. இளைஞன் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுகின்றார்.

புதுக்குடியிருப்பில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி கேரளக் கஞ்சா பெருமளவில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு 4 மாதங்களின் பின்னர், தற்போதே பெருமளவில் கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-5,7)

## வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு



முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தால் நடைமுறைப்படுத்தப் படவுள்ள வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. நேற்றுக் காலை சுதந்திரபுரத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக, கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளில் 850 வீடுகளை ஐரோப்பிய ஒன்றியம் அமைக்கவுள்ளது. திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக சுதந்திரபுரத்தில் இரு வீடுகளுக்கான அடிக்கல்லை ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் நட்டார்.

நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தூதுக்குழுவின் தூதுவர் ஹி டுங்லாய் மர்கியு, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம. பிரதீபன் ஆகியோர் கலந்து கெண்டனர். (ற-7)

## 13,000 குடும்பங்கள் வீடற்ற நிலையில்

### முல்லை. மாவட்ட செயலர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் தேவையாகவுள்ளன. கிடைக்கும் வீட்டுத் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் மக்களுக்கு வழங்குகின்றோம். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, சுதந்திரபுரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே மாவட்ட செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு மாவட்டம் முற்று முழுதாக இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மாவட்டம். அனைவரும் மீள்குடியமர்ந்தவர்களே. தேவைகள் அதிகமாக இருக்கின்றன. அடிப்படைத் தேவைகளில் முக்கியமானது வீடு. மாவட்டத்தில் உள்ள 42 ஆயிரம் குடும்பங்களில் சுமார் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்கியுள்ளோம். தற்போது இந்த வீட்டுத்திட்டத்தில் 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

எங்களுடைய மாவட்டத்தை பொறுத்தமட்டில் இன்னும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. கிராமிய வீதிகளைச் சீரமைக்க வேண்டிய தேவைகள் உள்ளன. அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் போதும் நாங்கள் மக்களுடைய அடிப்படைத் தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது – என்றார். (ற-7)

## கணித பாட தொழிற்கூடம் பளை மத்திய கல்லூரியில்

கிளிநொச்சி பெப். 18

கிளிநொச்சி, பளை மத்திய கல்லூரியில் கணித பாடத்துக்கான உபகரணங்களைப் பேணி வைக்கும் கணித பாட தொழிற்கூடம் நேற்றுத் திறக்கப்பட்டது. கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் க.முருகவேலும், மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினமும் இணைந்து தொழிற்கூடத்தைத் திறந்து வைத்தனர்.

வடமாகாண சபை உறுப்பினர் பசுபதி அரியரத்தினத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்தத் தொழிற்கூடம் அமைக்கப்பட்டது.



நிகழ்வில் இலங்கை தமிழர் ஆசிரிய சங்கச் செயலாளர் திருமதி தரா புவனேஸ்வரன், ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ.வேதநாயகம், பளை கோட்டக்கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர், அயல் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-6)

## உதவி நலத் திட்டங்கள் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களாக இருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி, பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

விபத்தில் உயிரிழந்த ஒருவரின் குடும்பத்துக்கு 15 லட்சம் ரூபாவும், தொழில் காரணமாக நோய்வாய்ப்பட்டு இறந்த ஒருவரின் குடும்பத்துக்குப் 10 லட்சம் ரூபாவும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் சித்தி பெற்ற 100 மாணவர் களுக்கு நலத் திட்டக் கொடுப்பனவு களும் வழங்கப்பட்டன.

முதன்மை விருந்தினராக மாவட்டச்செயலர் சுந்தரம் அருமைநாயகம் நிகழ்வில் கலந்து கொண்டு இவற்றை வழங்கினார். (ற-21)

## பிலக்குடியிருப்பு போராட்டம் இன அழிப்புக்கு எதிரான கூட்டுக் குரலே

### தமிழ் மக்கள் பேரவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

இனத்தின் இருப்பைத் தீர்மானிக்கும் நில அடையாளத்தைச் சிதைப்பதற்கு எதிரான உரிமைக் குரல்களையும், காணாமற் போகச் செய்யப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகளின் நீதிக்கான குரல்களையும், எமது அரசியல் அபிலாசைகளுக்கான குரல்களையும் தனித்தனியான பிரச்சினைகளுக்கான குரல்களாகப் பார்க்கக் கூடாது. எமது இனத்தின் மீதான தொடர்ச்சியான இன அழிப்புக்கு எதிரான ஒரு கூட்டுக் குரலாகவே பன்னாடுகள் இவற்றைக் கருத வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்கள் பேரவை தெரிவித்தது.

முல்லைத்தீவில் நிலமீட்புக்காகப் போராடும் மக்களுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பனியிலும், வெயிலிலும், கடும் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் தமது நிலம் தமக்கே வேண்டும் என்ற ஓர்மத்துடன் போராடும் இந்த மக்கள் போராட்டத்துடன், தமிழ் மக்கள் பேரவையும் கைகோர்க்கின்றது. நீதியிலும் மனித உரிமையிலும் நம்பிக்கை கொண்டுள்ள அனைத்து மக்களையும் இன, மத, பிரதேச வேறுபாடுகளின்றி நீதிக்காகப் போராடும் மக்களின் குரலுக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறது.

ஒரு தனிப்பட்ட பிரதேசத்தின் நிலத்துக்கான பிரச்சினை என்கிற பரிணாமத்தைத் தாண்டி, ஒட்டுமொத்த நில ஆக்கிரமிப்புகளுக்கெதிரான தமிழ் மக்களின் போராட்டத்தின் ஒரு குறியீட்டு வடிவமாக இன்று இது உருக்கொண்டுள்ளது. எவரிலும் தங்கியிராது, தமது நியாயமான இலக்கில் எந்தவித விட்டுக்கொடுப்பின்றி, தமது பிரச்சினைக்கு மக்கள் தாமாகவே அணிதிரண்டு குரலெழுப்ப முன்வந்திருப்பது எமது இனம் கடந்து வந்த பயணத்தில் மிக முக்கியமானதொரு அம்சமாகும்.

வடமாகாணத்தில் மட்டும் ஏறத்தாழ 66 ஆயிரம் ஏக்கர் நிலம் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஊடக வெளிச்சத்துக்குள்ளும், பன்னாட்டின் கவனத்துக்கும் வந்துள்ள குடாநாட்டின் சில நிலப் பகுதிகள் மட்டும் தெட்டம் தெட்டமாக விடுவிக்கப்பட்டன. அவற்றைத் தமது பெரும் அடைவாகக் காட்ட நினைக்கும் அரசின் போலியான நடவடிக்கைகளைப் பன்னாட்டுச் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தம் இன்றி எமது மக்களுக்கான நீதியான தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகின்றது. எமது மக்கள் தமது சொந்த நிலத்துக்கு திரும்புவதற்கான அழுத்தங்களையும், வழிமுறைகளையும் பன்னாட்டுச் சமூகமும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையும் துரிதப்படுத்த வேண்டும்.

எம்மீதான ஆக்கிரமிப்புக்கெதிரான ஒரு குறியீடாகவும் சுய முனைப்பில் மக்களால் முன்னெடுக்கப்படும் முக்கியமானதொரு போராட்டமாகவும் பரிணமித்துள்ள புதுக்குடியிருப்பு மற்றும் பிலவுக்குடியிருப்பு மக்கள் போராட்டத்திற்கு எமது மக்கள் அனைவரும் தாயகப் பகுதியெங்கும் ஒன்று திரண்டு ஒருசேர ஆதரவளித்து மக்களின் குரலுக்கு உரம் சேர்க்க வேண்டும் – என்றுள்ளது. (ற-5)

## போதனாசிரியர் வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.18
தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் காய்ச்சி ஒட்டுபவர் (வெல்டர்), வெதுப்பக உற்பத்தியாளர், சமையலாளர், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி , கட்டட நிர்மாண உதவியாளர், மின் மோட்டர் மீள் முறுக்குநர், நீர்க் குழாய் பொருத்துநர் ஆகிய கற்கைநெறிகளைக் கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிவரக் கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி எனும் முகவரிக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார்.
(ற-5)

# பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக கிளிநொச்சியில் கவனவீர்ப்பு



கிளிநொச்சி, பெப்.18
முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரி பிலக்குடியிருப்பு மக்கள் கடந்த 18 நாள்களாகத் தொடர்ப் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக நாட்டின் பல பாகங்களிலும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன.
கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்களும், பொது அமைப்புகளும், மக்களும் இணைந்து நேற்று பிலக்குடியிருப்புப் போராட்டத்துக்கு ஆதரவாகக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
மு.ப. 9 மணிக்கு ஆரம்பமான கவனவீர்ப்புப் போராட்டம் பி.ப. 12.30 மணிவரை நடைபெற்றது.
''பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் நியாயமானது: அவர்களின் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்."- என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
(ற-6)



# வவு. பம்பைமடுவில் குப்பைகள் கொட்டுவதற்கு மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
வவுனியா, பம்பைமடுவில் நகர சபை, கழிவுகளைக் கொட்டுவதற்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய அதிகாரிகள் குப்பைகளைக் கொட்டுவதற்கு மாற்று இடம் கண்டறியப்படும் என்று தெரிவித்தனர்.
வவுனியா நகரப் பகுதியிலிருந்து அகற்றப்படும் குப்பைகள், மலக் கழிவுகள் நகர சபையால் வாகனங்களில் ஏற்றப்பட்டு பம்மைமடுப் பகுதியில் கொட்டப்பட்டு எரியூட்டப்படுகின்றன. இது பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது.
கழிவுகள் கொட்டப்படும் இடத்துக்கு அருகே யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாகம் மற்றும் பம்மைமடு வீட்டுத் திட்டம் என்பவை உள்ளன. பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், நகர சபையின் குப்பை கொட்டும் செயற்பாட்டுக்கு நேற்று எதிர்ப்பு வெளியிட்டனர். அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு சென்றனர்.
வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா நகரசபைச் செயலாளர், வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகள் பிரதேச மக்களைச் சந்தித்தனர்.
நகர சபையினர் இங்கே குப்பை கொட்டுவதால் சூழல் மாசடைகின்றது. சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம் . இந்தப் பகுதியில் குப்பைகளைக் கொட்ட வேண்டாம்.- என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
வேறு இடத்தை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அதிகாரிகள் உறுதியளித்தனர்.
(ற-5,402)

# பிலக்குடியிருப்பு போராட்டத்துக்கு யாழ். ப.தெ.அ.கூ. சங்கம் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப்.18
இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று பிலக்குடியிருப்பு மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசம் ஆதரவு தெரிவித்துள்ளது.
இன்று சனிக்கிழமை போராட்டக் களத்துக்கு நேரடியாகச் சென்று அவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.
“கேப்பாப்பிலவு மக்கள் தமது சொந்த நிலங்களை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தித் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள் இன்று போராட்டக் களத்துக்குச் செல்லவுள்ளனர்.
யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண் டும்."- என்று சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.
(ற-17)

# வன்னிப் பல்கலைக் கழகமாக வவுனியா வளாகத்தை மாற்றுக

## வலியுறுத்தி 28ஆம் திகதி ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப்.18
யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டும் என்று கோரி எதிர்வரும் 28ஆம் திகதி ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.



வவுனியா வளாக ஆசிரியர் சங்கம், வவுனியா வளாக ஊழியர் சங்கம், மாணவர் சங்கங்கள், வவுனியா பொது அமைப்புக்கள் என்பன இணைந்து இதை ஏற்பாடு செய்துள்ளன.
ஊர்வலம் வளாகத்தின் குருமன்காடு பிரயோக விஞ்ஞான பீடத்தில் மு.ப. 10 மணிக்கு ஆரம்பித்து நகர் வழியாகச் சென்று மாவட்டச் செயலரிடம் ஜனாதிபதிக்கான மனு கையளிக்கப்படவுள்ளது.
இது தொடர்பான தெளிவூட்டும் கலந்துரையாடலும் கருத்தறியும் நிகழ்வும் நேற்று வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா வளாகத்தின் நிர்வாகக் கிளை கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.
வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், சங்கங்களது பிரதி நிதிகள் பொது அமைப்புக்கள், மத தலைவர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.
(ற-5)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
15.06.1946

மண்ணின் மடியில்
02.03.2016

திதி:- அபரபஷ்ஷ அட்டமி


திருமதி ரஞ்சிதபூஷணி பாலசுப்பிரமணியம்

எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
நீங்கள் எம்மைவிட்டுச் சென்று ஆண்டு ஒன்று உருண்டோடி விட்டதே!
நம்ப முடியவில்லை.
உங்கள் இனிய அன்பான கதைகள் எம் காதுகளில் ஒலிக்கின்றது
உங்கள் சிரித்த முகம் அன்பான பார்வை
கொண்ட தோற்றம் எம் கண்களில் தெரிகின்றது
எம்முடன் கூடவே இருக்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்

448, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## பாகிஸ்தான் வழிபாட்டுத் தலத்தில்

# தற்கொலைத் தாக்குதல் 100 பேர் பரிதாபச் சாவு

இஸ்லாமாபாத், பெப். 18
பாகிஸ்தான் செவான் நகரில் உள்ள இஸ்லாமிய வழிபாட்டுத் தலத்தின் மீது நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 100 பேர் உயிரிழந்தனர் என பாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட்டன.
அசம்பாவிதம் நிகழ்ந்த வழிபாட்டுத் தலம் மிகவும் பெரியது. நூற்றுக் கணக்கான மக்கள் தொழுகைக்காக அங்கு கூடுவார்கள். அவ்வாறு நேற்றுமுன்தினம் மாலை வேளைத் தொழுகைக்காக ஒன்றுகூடிய போது தற்கொலைதாரியொருவர் நடத்திய தாக்குதலிலேயே 100 பேரும் சாவடைந்தனர். அவர்களில் குழந்தைகள், சிறுவர்கள் என ஒட்டுமொத்தமாக 20 பேர் அடங்குகின்றனர்.
உயிரிழந்த 100 பேரைத் தவிர கிட்டத்தட்ட 350 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
தாக்குதல்நடத்தப்பட்ட அடுத்தசிலமணி நேரம் வரை எந்த அமைப்பும் அதற்குப் பொறுப்பேற்கவில்லை. எனினும், நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. பாகிஸ்தானின், அண்மைக்கால நடவடிக்கைகள் தமக்கும், தம்முடன் சார்ந்திருக்கும் அமைப்புக்களுக்கும், தமது கொள்கைகளுக்கும் முரணாக உள்ளன என்பதாலே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஐ.எஸ். ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்புத் தெரிவித்தது.
பாகிஸ்தான் அதிபர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் தாக்குதலுக்குத்தமது கடுங்கண்டனத்தைத் தெரிவித்தனர். (ம)

## சாம்சுங் நிறுவன துணைத்தலைவர் ஜே லீ கைது


சியோல், பெப். 18
தென்கொரியாவின் முன்னாள் அதிபல் பார்க் கியூன் ஹைக்கு லஞ்சம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில், சாம்சுங் நிறுவன துணைத் தலைவர் கைது செய்யப்பட்டார்.
தென்கொரிய அதிபர் பார்க் கியூன் ஹை, தனது நண்பி சோய் சூன் சில் என்பவருடன் இணைந்து ஊழல் மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு



பார்க் கியூன் ஹையின் பதவி பறிக்கப்பட்டு அதிபர் பொறுப்பில் இருந்து அவர் இடைநிறுத்தப் பட்டுள்ளார். விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அவருக்குக் கிட்டத்தட்ட 50 கோடி ருபா லஞ்சம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் சாம்சுங் நிறுவனத் துணைத்தலைவர் கைது செய்யப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## தன்னை நி... இன்று கூட...

சென்னை, பெப். 18
புதிய அமைச்சரவை தொடர்பில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள நம்பிக்கை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்த தமிழக சட்டசபை இன்று கூடுகிறது.
முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தனது பதவியில் இருந்து விலகியதை அடுத்து, அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் தமது தலைவராக (முதல்வராக) எடப்பாடி பழனிச்சாமியைத் (இபி.எஸ்)தெரிவுசெய்தனர்.
சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்தை ஆளுநரிடன் ஒப்படைத்து ஆட்சியமைக்க உரிமை கோரினார் எடப்பாடி. இதன் அடிப்படையில் எடப்பாடியை முதல்வராகப்பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுத்தார் ஆளுநர் வித்யாசாகர் ராவ். நேற்றுமுன்தினம் மாலை முதல்வராகப் பொறுப்பேற்றார் எடப்பாடி பழனிச்சாமி. தனது அமைச்சரவையையும் அவர்



நியூசிலாந்தின் கிறைஸ்ட் ... யில் குடியிருப்புக்கள் உள்ள... எடுத்துள்ளது. கிட்டத்தட...

## மெரீனாவில் பொலிஸ்...

சென்னை, பெப். 18
சென்னை - மெரீனா கடற்கரையில் நேற்று முழுவதும் கடும் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது.
தமிழகத்தின் முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி நேற்றுமுன்தினம் மாலை பொறுப்பேற்றார். அவர் தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று நடைபெறுகிறது. எடப்பாடி பழனிச்சாமி முதல்வராகத் தொடர்வாரா என்பது தொடர்பில் இன்றே இறுதி முடிவு வெளியாகும். இந்த நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவருக்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென்று வலியுறுத்தி இளைஞர்கள் மெரீனாவில்



## சாவு வீட்டில் சாவு

சனா, பெப். 18
ஏமனில் சவூதி கூட்டுப்படை நடத்திய இலக்குத் தவறிய தாக்குதல் ஒன்றில் 9 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
சனா நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சாவு வீடொன்றில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் மீது சவூதிக் கூட்டுப்படை நடத்திய தாக்குதலில் 8 பெண்கள் ஒரு குழந்தை என 9 பேர் சாவடைந்தனர். மேலும் 10 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
ஏமனில் ஆதிக்கம் செலுத்தும் ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராக சவூதி போரிட்டு வருகிறது. இது ஓர் இலக்குத் தவறிய தாக்குதலாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

## செவ்வாய்க் கிரகத்தில் நகரமொன்றை அமைக்கவுள்ளது அரபு இராச்சியம்

செவ்வாய்க் கிரகத்தில் நகரமொன்றை அடுத்த 100 ஆண்டுகளில் அமைக்கவுள்ளதாக ஐக்கிய அரபு இராச்சியம் அறிவித்தது.
இது தொடர்பில், ஐக்கிய அரபு இராச்சியத்தின் துணை அதிபர் ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம், அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் ஆகியோர் கூட்டாக வெளியிட்டு உள்ள அறிக்கையில், உலகில் முதல்முறையாக செவ்வாய்க்கிரகத்தில் அரபு இராச்சியத்தின் நகரம் அமைக்கும் திட்டம் அறிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் அடுத்த 100 ஆண்டுகளில் நிறைவடைந்து செயற்பாட்டுக்கு வரும். இங்கு வசிக்கும் மக்களை இதே வசதிகளுடன் செவ்வாய்க் கிரகத்தில் தங்க வைத்து, அங்கும் ஓர் உயிரின வாழிடம் ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## ஒபாமாவுக்கு முதலிடம்; ட்ரம்புக்குக் கடை...

வொஷிங்டன், பெப். 18
அமெரிக்காவில் தற்போது பதவி வகிக்கும் அதிபர் ட்ரம்ப், முன்னாள் அதிபர்கள் ஆகியோரின் செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பொன்றில் ட்ரம்புக்குக் கடைசி இடம் கிடைத்தது. முன்னாள் அதிபர் ஒபாமாவுக்கு முதலிடம் கிடைத்தது.
சி.என்.என். மற்றும் ஓ.ஆர்.சி. இணைந்து இந்த வாக்கெடுப்பை நடத்தின. 76 சதவீத ஆதரவுடன் ஒபாமா முதலிடம் பிடித்தார். அவருக்கு அடுத்தபடியாக ஜோன் எப் கெனடிக்கு 72 சதவீதம் பேர் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.
ஈராக், சிரிய உள்ளிட்ட 7 இஸ்லாமிய நாடுகளின் மக்களுக்கு நுழைவிசைவுத் தடை. ஈராக், சிரிய அகதிகளுக்குத்தடை. அமெரிக்கா-மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்புதல். குடியுரிமை



# நிரூபிப்பாரா இ.பி.எஸ். …டவுள்ளது சட்டசபை



அறிவித்தார்.
இந்த அமைச்சரவை தொடர்பான நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று நடைபெறுகிறது. தமிழக சட்டசபையில் மொத்தம் 235 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 118 உறுப்பினர்களின் ஆதரவை முதல்வர் பழனிச்சாமி பெற வேண்டும். அவ்வாறு ஆதரவு பெற்றால் மட்டுமே அவரால் முதல்வராகத் தொடர முடியும். இவ்வாறான பரபரப்பான நிலையில் இன்றை தினத்தை எதிர்கொள்கிறது தமிழகம்.
இன்று நடைபெறவுள்ள வாக்கெடுப்பை இரகசிய வாக்கெடுப்பாக நடத்த வேண்டுமென்று நேற்று மாலை ஆளுநரைச் சந்தித்து கோரிக்கை முன்வைத்தது ஓ.பன்னீர்செல்வம் அணி என்று இந்திய ஊடகங்கள் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. (ம)

# ஆப்கானில் கடத்தல்; தலிபான் அட்டகாசம்

காபூல், பெப். 18
ஆப்கானிஸ்தான் தர்சாப் மாவட்டத்தில் 50 பொதுமக்களைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர் தலிபான் ஆயுததாரிகள். நேற்றுமுன்தினம் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. இதற்கு முன்னரும் தலிபான் அமைப்பு பல பொதுமக்களைக் கடத்திச் சென்று கொலை செய்துள்ளது என்பதால், அவ்வாறான ஒரு நோக்கிலேயே இந்தக் கடத்தலும் அமைந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. கடத்தப்பட்டவர்களின் நிலை தொடர்பில் தலிபான் அமைப்பு எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. (ம)

# பாகிஸ்தான் ஆபத்தான நாடு என்றார் அமெரிக்க அதிகாரி

வொஷிங்டன், பெப். 18
உலகிலேயே மிகவும் ஆயுதகலாசாரம் உடைய ஆபத்தான நாடென்றால் அது பாகிஸ்தான் தான். இவ்வாறு குறிப்பிட்டார் அமெரிக்க உளவுப்படையின் முன்னாள் அதிகாரி ஹெவின் ஹெல்பேல்ட்.
அமெரிக்க இணையம் ஒன்றிலேயே இவ்வாறான கருத்தை அவர் பதிவிட்டார்.
உலகத்துக்கே பாகிஸ்தான் மிகவும் ஆபத்தான நாடாக இருக்கக்கூடும். ஆயுதக் குழுவுக்கு எதிரான போரில் பாகிஸ்தான் அரசின் தோல்வி, உலகத்துக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். பாகிஸ்தானில் தலைதூக்கும் ஆயுதக் குழுவுக்கு எதிராக அந்த நாடு மிகப்பெரும் நடவடிக்கைகளை எடுக்கத்தவறினால் பேரழிவை அது சந்திக்கும் என்று ஹெவின் குறிப்பிட்டார். (ம)



…ஸ்ட் சேர்ச் நகரில் மிகப்பெரும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. தீ ஏற்பட்டுள்ள இடத்துக்கு அருகாமை …உள்ளதால் தீயை மிகத் துரிதமாகக் கட்டுக்குக் கொண்டுவர நியூசிலாந்து அரசு துரித நடவடிக்கைகளை …த்தட்ட 50 உலங்குவானூர்திகள், 150 தீயணைப்புக் குழுவினர் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ம)

# முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சா… என்னைப் பார்த்துச் சிரிக்கக் கூடா…

## இது ஸ்டாலினின் உள்குத்து

சென்னை, பெப். 18
தமிழகத்தின் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி என்னைப் பார்த்துச் சிரிக்கக்கூடாது. அவ்வாறு சிரித்தால் அவரது பதவி பறிபோகலாம் என்று தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு. கழகத்தின் செயல் தலைவருமான ஸ்டாலின் தெரிவித்தார்.
சென்னை மத்திய ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தான் சார்ந்த அ.தி.மு. கழகத்தின் தலைமைமீது, அதாவது சசிகலா மீது கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு பல விமர்சனங்களை முன்வைத்தார். இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். ஓ.பி.எஸ்ஸின் கருத்துத் தொடர்பில் சசிகலாவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ஓ.பி.எஸ்ஸின் பின்னால் தி.மு.க. உள்ளது. சட்டசபையில் முதல்வர் பன்னீர்செல்வமும் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலினும் ஒருவரை மற்றொருவர் பார்த்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தனர் என்று தெரிவித்தார்.
சசிகலாவின் இந்தக் கருத்து சிறு பிள்ளைத்தனமானது என்ற விதத்தில் பல அரசியல் தலைவர்களும் கருத்துத் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே ஸ்டாலினும் இவ்வாறு பதிலடி கொடுத்தார்.
செய்தியாளர் சந்திப்பில், தற்போது அமைந்திருப்பது மக்கள் விரோத ஆட்சி என்றும் அவர் தெரிவித்தார் என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# …ஸ் குவிப்பு

பெரும் போராட்டம் ஒன்றை நடத்தலாம் என்று எச்சரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மெரினாவில் நேற்றுப் பெரும் பாதுகாப்புப் போடப்பட்டது. மெரீனா, உள்ளிட்ட சில இடங்களில் 144 தடையுத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என்று கருதப்பட்ட போதிலும், அவ்வாறான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. (ம)



# சசிகலாவை நீக்கினார் மதுசூதனன்

அ.தி.மு. கழகத்தில் இருந்து சசிகலா, தினகரன், வெங்கடேஸ் உள்ளிட்ட பலரை நீக்கி உத்தரவிட்டார் அ.தி.மு. கழகத்தின் முன்னாள் அவைத்தலைவர் மதுசூதனன்.
சசிகலா அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் அல்ல என்று ஓ.பி.எஸ். தரப்பு வாதாடி வருகிறது. அவரை தேர்ந்தெடுத்தமை கழகத்தின் சட்டத்துக்கு உட்பட்டதாக அமையவில்லை என்பது ஓ.பி. எஸ். தரப்பின் வாதமாக உள்ளது.
இந்த நிலையில், சசிகலா, தினகரன், வெங்கடேஸ் உள்ளிட்டவர்களை நீக்கி உத்தரவிட்டார் ஓ.பி.எஸ். அணியில் உள்ள முன்னாள் அவைத்தலைவர் மதுசூதனன்.
கழகத்தின் கொள்கை – குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், புரட்சித் தலைவி அம்மாவிடம் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து செயற்பட்டதாலும், பல்வேறு குற்றங்களில் சம்பந்தப்பட்டிருப்பதாலும், சிறை சென்றிருப்பதாலும் இன்று முதல் (நேற்று) சசிகலா கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் நீக்கப்படுகிறார் என்று மதுசூதனன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டார். (ம)

# …டைசி இடம்



மற்றும் அயலுறவுக் கொள்கைகளில் எடுத்த முடிவுகள் மற்றும் மேற்கொள்ளப் போகும் திட்டங்கள் ஆகியனவே ட்ரம்ப் மீது கடும் எதிர்ப்பு ஏற்படக் காரணம் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்; 52 பேர் சாவு:

பாக்தாத், பெப். 18
ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே நடத்தப்பட்ட இரட்டைக் கார்க் குண்டுத் தாக்குதலில் 52 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
சியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வாழும் இடத்தை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. உயிரிழந்த 52 பேரைத் தவிர 50 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. தாக்குதல் நடத்தப்பட்ட சில மணிநேர இடைவெளியில் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட் அமைப்பு தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது.
கடந்த சில வாரங்களாக பக்தாத்தை இலக்குவைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மேற்கொள்ளத் திட்டமிட்ட பல தாக்குதல்கள் முறியடிக்கப்பட்ட நிலையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# பொருளாதார மற்றும் விளையாட்டுத்துறைசார் அபிவிருத்திக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்து

ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையேயான பொருளாதார மற்றும் விளையாட்டுத்துறைசார் அபிவிருத்திக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு நான்கு நாள் பயணத்தினை மேற்கொண்டு அந்த நாட்டுக்கு சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் ஆகியோருக்கிடையேயான சந்திப்பின் பின்பாகவே இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.


இரு தரப்புப் பேச்சுவார்த்தையின் பின்னர் கைச்சாத்திடப்பட்டுள்ளதான இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிரெய்ஸ் ஹசெஸன் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எம்.எஸ். சமரதுங்க ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர் விளையாட்டுத் துறைசார் அபிவிருத்தி உடன்படிக்கையில் ஆஸ்திரேலியாவின் விளையாட்டு மற்றும் சுகாதார அமைச்சர் கிரேக் ஹூன், அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தவிர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆஸ்திரேலியாவின் அமைச்சர் பிலிப் டெல டக்கீஸக்கும் இடையிலான சந்திப்பு நிகழ்ந்துள்ளது. அத்துடன் விக்டோரியா பிராந்தியத்தின் வர்த்தகர்களுடனான கலந்துரையாடலும் மதிய போசன விருந்துபசாரமும் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்துரைத்துள்ள அமைச்சர் பிலிப் டெல டக்கீஸ்,


"நாட்டை ஒன்றிணைக்க ஜனாதிபதியும் பிரதமரும் முன்னெடுத்துள்ள செயற்பாடுகளின் காரணமாக பொருளாதாரச் சவால்களை இலகுவாக வெற்றிக்கொள்ள முடியும்.வர்த்தக நடவடிக்கைகளுக்கு கொழும்புத் துறைமுகம் முக்கிய பங்காற்றுவதுடன் அதீத பங்களிப்பை வழங்குகிறது" - என்றார்.

மேலும், ஆஸ்திரேலியாவின் விக்டோரியா பிராந்தியம் மற்றும் இலங்கைக்கு இடையில் நெருங்கிய உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் விக்டோரியா பிராந்தியத்தின் பிரதமர் டெனியல் அன்ரூப் ஆகியோர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.



*"இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். இந்து சமுத்திரத்தின் முத்தாகக் காணப்படும் இலங்கையை ஆசியாவின் பொருளாதாரக் கேந்திர நிலையமாக மாற்றுவதே எமது நோக்கம்".*

-பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



## உலகின் மிகப்பெரிய விமானமாக ஏ.ஜி – 600

### நீரிலும், வானிலும் பறப்பை மேற்கொள்கிறது

நீரிலும் வானிலும் பயணிக்கக்கூடியதான உலகின் மிகப் பெரிய விமானத்தைச் சீனா தயாரித்து வருவதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வானில் பறந்துகொண்டிருக்கும்போதே நிலத்திலும், நீரின் மேற்பரப்பிலும் இறங்கும் வகையில் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

ஏ.ஜி – 600 எனப் பெயரிடப்பட்டுள்ளதான இந்த விமானம், 37 மீற்றர் நீளமுடையதாகவும் 38.8 மீற்றர் நீளமுள்ள இறக்கையையும் கொண்டமைந்துள்ளது.

53.5 தொன் நிறையுடையதான சுமைகளைக் காவிச் செல்லக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விமானம், 20 தொன் நீரையும் கொண்டு செல்லும் வகையில் சிறப்பான வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. ஓய்வின்றி 4500 கிலோ மீற்றர் தூரம் பறக்கும் சிறப்புத் தன்மையையும் கொண்டமைந்துள்ளது.

நடுக்கடலில் ஏதேனும் கப்பல் விபத்துச் சம்பவங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்திலே விரைந்து சென்று மீட்புப் பணிகளைச் செய்யும் வகையிலும், நிலப் பரப்பில் காட்டுத் தீ ஏற்படும்போது உடனடித் தன்மையோடு பறப்பை மேற்கொண்டு தீயை அணைக்கும் வகையிலும் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக சீன இராணுவப் பொறியாளர்களால் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த அதிநவீன விமானமானது, இந்த ஆண்டு சோதனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு விரைவில் இராணுவத்தில் இணைக்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தவிர, தென்சீனக் கடல் பகுதியில் தனது இராணுவப் பலத்தை மேம்படுத்தும் வகையிலேயே சீன அரசானது மேற்படி நிலத்திலும், வானிலும் பயணத்தை மேற்கொள்ளக்கூடியதான அதிநவீன விமானத்தை உருவாக்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிவாரண நிதியுதவி

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை

காலநிலை மாற்றங்களின் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ளதான வறட்சி நிலைமைகளைக் கருத்தில்கொண்டு வறட்சியின் அதிகமான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள விவசாயக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிவாரண நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரைவிடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வறட்சி காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ளதான பாதிப்புக்கள் குறித்த கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்படி பணிப்புரையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனைகளாக வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் பிரதேச ரீதியாக பிரதேச செயலர்,கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய செயற்குழுக்களை அமைத்து வறட்சி சார்ந்து ஏற்பட்டுள்ளதான உண்மைத் தகவல்களை சேகரித்து அதனடிப்படையிலே நிவாரண உதவித் தொகையை வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



தவிர, எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் சிறுபோக பயிரிடல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் காலம் முடிவுறுத்தப்படும் வரை இந்த நிவாரண நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளமை நோக்கத்தக்கது.

## மக்கள் வங்கியின் 'சுயமாகவே சேவையாற்றக் கூடிய வங்கிச் சேவை அலகு' இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம் மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி கிளையின் சுயமாகவே சேவையாற்றக் கூடியதான வங்கிச் சேவை அலகு இன்று காலை 8 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த சேவை ஆரம்பிக்கப்படுவதன் ஊடாக, வாடிக்கையாளர்கள் தங்களது வங்கி சார் அன்றாடச் செயற்பாடுகளை குறிப்பாக பண வைப்பிடல்,பணம் மீளப்பெறல் மற்றும் மின்பட்டியல் செலுத்துகை செயற்பாடுகளை நேர மீதங்களோடு இலகுவாக மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்மின் உற்பத்தி தொழிற்துறை சார்ந்து இலங்கையில் ஜப்பான் முதலீடு

இலங்கையில் நீர்மின் உற்பத்தி நிலைய தொழிற்துறை சார்ந்து நிதி முதலீடுகளை மேற்கொள்ள ஜப்பானிய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இந்த நிறுவனம், ஏறத்தாழ 1 மில்லியன் டொலர்கள் முதலீடு செய்யவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பிலான வேலைத் திட்டம் எதிர் வரும் ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையிலே இரத்தினபுரியில் அமைக்கப்படவுள்ளதான இந்தச் சிறிய மின்னுற்பத்தி நிலையத்தின் ஊடாக 700 கிலோவோல்ட் மின்சாரம் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நீங்கள் பாடசாலை செல்பவரா...?

பளையூர்
பா.பாலாஜினி



நீங்கள் பாடசாலை செல்லும் வயதில் உள்ளவரா? அப்படியாயின் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது. பொதுவாகப் பார்க்கும்போது எல்லா வயதினரையும் விட பாடசாலை செல்லும் மாணவர்களும்,வேலைக்கு அன்றாடம் செல்கின்ற நடுத்தர வயது உள்ளவர்களுமே பெரும் ஆரோக்கியக் குறைபாட்டுக்கு உட்படுகின்றார்கள். ஆனாலும் வயது வந்தவர்கள் தமக்கு ஏற்படுகின்ற ஆரோக்கியக் குறைவை ஏதாவது ஒரு வகையில் ஈடு செய்து கொள்வார்கள். ஏனெனின் அனுபவ ரீதியான அறிவை அவர்கள் பெற்றிருப்பார்கள். ஆனால் மாணவர்களோ பாட ரீதியான செயற்பாடுகளில் மூழ்குவதால்ஆரோக்கியவாழ்வின் அவசியத்தைப் பற்றி அறிந்திருந்தாலும் அதனை அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கமாட்டார்கள். எனவே பாடசாலை செல்பவர்கள் உணவு மற்றும் ஏனைய பழக்கங்களில் ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபட முடியும். இவர்கள் மூன்று வேளை உணவையும் சத்துமிக்கதாகவும், போசணை மிக்கதாகவும் உட்கொள்ள வேண்டும். அதிகமாக கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் காலை உணவுதான். காலை உணவு தவறாமல் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் எமது உடலில் நடைபெறுகின்ற பல்வேறு அன்றாட தொழிற்பாடுகள் மற்றும் உள ரீதியான செயற்பாடுகள் என்பவற்றை இந்தக் காலை உணவுதான் எமக்கு ஒழுங்கமைத்துத் தருகின்றது. காலை உணவை சரிவர உள்ளெடுக்காவிடில் அன்றைய பொழுது முழுவதுமே ஒரு நோயுள்ள நாள் ஆக மாறிவிடும் என்பது விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மறுக்கப்படும் காலை உணவு**

இன்று எத்தனையோ மாணவர்கள் பாடசாலை செல்லும்போது காலை உணவைத் தவறவிட்டுவிடுகின்றார்கள்.சிலர் வறுமை காரணமாக காலை உணவை உண்பதில்லை, சிலருக்கு காலைஉணவை உண்பதற்கு நேரம் போதாமையாக உள்ளது. இன்னும்சிலருக்கு காலைஉணவை உண்பதற்கு தோன்றுவதே இல்லை. இப்படியாக எத்தனையோ காரணங்களினால் இன்றைய காலை உணவை மாணவர்கள் தவிர்த்து வருகின்றார்கள். இவ்வாறான சிறுவர் களை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்விலே அதிகளவான மனநோய் பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்குகின்றார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் தலைவலி, வயிற்று நோய், வாந்தி உணர்வு போன்றன இதனால் ஏற்படும் என்பதும் இவை பிற்காலத்தில் பெரும் விளைவுகளைத் தந்துவிடும் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. எனவே எத்தனையோ இலட்சியக் கனவுகளை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் மாணவப்பருவத்தினர் இதில் கவனமெடுக்க வேண்டியது.

இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டுத்தான் இன்று பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் காலை உணவை உண்ணாமல் வருகின்ற சிறுவர்கள் மதிய உணவையும் தவறவிடக் கூடாது என்பதற்காகவே இந்த ஏற்பாடு. ஆனாலும் இந்தத் திட்டமானது சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதா? என்பது சிறிது கேள்விக்கு உரிய விடயம் தான். இப்படியெல்லாம் காலை உணவைக் கட்டாயப்படுத்துகின்றோம் என்பதற்காக அளவுக்கு அதிகமாகவும் அதனை உள்ளெடுக்கக் கூடாது. அதனால் மந்த நிலை தோன்றி சோர்வு, தூக்கம் என்பனவும் ஏற்பட வழி உண்டாகி விடும்.

அடுத்ததாகக் கவனிக்க வேண்டியது மதிய உணவுதான். பாடசாலை முடிந்ததும் வேகமாக வீட்டுக்குச் செல்லும் மாணவர்கள் அந்த வேகத்துடனேயே தனியார் வகுப்புக்களுக்கு ஓடி விடுவார்கள்.நேரம் போய் விடுமே என்பதைக் காரணம் காட்டி மதிய உணவை விஉள்ளெடுப்பதில்லை. மதிய உணவும் காலை உணவைப்போல முக்கியமானதுதான். எனவே அதை ஒரு போதும் தவற விடக்கூடாது. என்னதான் நேரம் இல்லை என்றாலும் உணவுக்காக சிறிது நேரத்தை ஒதுக்குங்கள். கல்வி முக்கியமானது தான். ஆனால் அது சிறப்பு பெற உணவு முக்கியம் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே மதிய உணவாக சிறியளவு நெல்லரிசிச் சோறை உள்ளெடுத்துக் கொள்ளுங்கள். சோற்றுடன் நல்ல பச்சை இலை வகைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். மதிய உணவான சோற்றுக்குப் பதிலாக சோடா, குளிர்களி, கேக், சான்விச் முதலியவற்றை நீங்கள் உள்ளெடுப்பவர்களாக இருந்தால் முதலில் அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மதிய உணவாக சிறிதளவேனும் சோறு எடுத்துக் கொள்ள வேண்டும். என்பது கட்டாயமான ஆரோக்கிய பழக்கவழக்கமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சோற்றுடன் மதிய உணவில் மாமிசத்தையும் எடுத்துக் கொள்ளலாம். ஆனாலும் இவை எல்லாம் அளவுக்கு மிஞ்சாது பார்த்துக் கொள்ளுங்கள். மேலைத் தேசத்தவர்களைப் பாருங்கள். மிக சிறிய அளவான சோற்றுடன் நிறையக் காய்கறிகளைச் சேர்த்துக்கொள்வார்கள். ஆனால் நாமோ அவ் வாறு இல்லாது அதிகளவான சோற்றுக் குவியலுடன் சத்துக்களே சிறிதும் இல்லாத கறிவகைளைச் சேர்த்துக் கொள்கின்றோம். எனவே எமது ஆரோக்கியம் அற்ற இந்தப் பழக்க வழக்கத்தில் இருந்து மேலைத் தேசத்தவர்களின் ஆரோக்கியமான முறைக்கு மாறுவது சிறந்தது.



**கவனிக்க வேண்டிய இரவு உணவு**

அடுத்து கவனிக்க வேண்டியது இரவு உணவுதான். பள்ளி செல்லும் மாணவர்கள் இரவு இரவாக கண்விழித்துப் படிப்பார்கள். ஆதலால் நேரத்துக்கே இரவு உணவை உட்கொண்டோமேயானால் நீண்ட நேரம் படிக்க முடியாதே தூக்கம் வந்துவிடுமே என்பதற்காக் இரவு உணவை நீண்ட நேரம் கழித்து ஒன்பது, பத்து மணிபோல எடுத்துக் கொள்வார்கள். இது முற்றிலும் தவறு. ஆரோக்கியத்தை முற்றிலும் பாதித்து தூக்கத்தையும் இல்லாமற் செய்துவிடும். எனவே இப்படியான எண்ணம் உடையவர்கள், அதாவது நீண்ட நேரம் படிக்க வேண்டும் என்று விருப்பம் உடையவர்கள், இரவு உணவாக இடியப்பம், பால், கடலை போன்ற மெல்லிய உணவை எடுத்துக் கொள்ளலாம். தோசை, அப்பம், பிட்டு போன்ற கடினமான உணவைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மேலும் உங்களின் உடல் மற்றும் வயிற்றுக்கு தொந்தரவைத் தரக் கூடிய உணவை முற்றிலும் தவிர்த்துவிடுங்கள். ஏனெனில் அவை உங்கள் கல்வி நடவடிக்கைகளை அதிகமாகப் பாதித்துவிடக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

**உடற் பருமனான மாணவர்கள்**

சில பாடசாலை செல்லும் வயது அதிகமுள்ள மாணவர்கள் அதிக உடற்பருமனைக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இதற்குக் காரணம் அவர்களின் பொருத்தமற்ற உணவுப் பழக்கவழக்கமே ஆகும். சரி இவ்வாறான உணவுப் பழக்க வழக்கத்தை மட்டும் கைக்கொண்டால் ஆரோக்கியம் கிடைத்துவிடுமா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஆம்! உணவைக் கவனித்தால் மட்டும் போதாது. நல்ல போதுமான உடற் பயிற்சியும் வேண்டும். பாடசாலைகளில் காலை வேளைகளில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவது வழமைதான். ஆனாலும், இதில் சகல மாணவர்களும் முழு ஈடுபாட்டுடன் கலந்துகொள்வதில்லை. எனவே அனைத்துப் பாடசாலைகளிலும் இதை கட்டாயப் படுத்துவதற்கான சட்ட திட்டங்கள் கொண்டு வரப்படவேண்டும்.

இவை எல்லாவற்றையும்விட பாடசாலை செல்லும் மாணவர்கள் தங்கள் உள் ஆடைகளையும், வெளிஆடைகளையும் மிகத் தூய்மையாக வைத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். நீண்டநேரம் பாடசாலை மற்றும் வெளியிடங்களில் கழிவதனால் அதிக அளவு வியர்வை ஏற்பட்டு, உடலில் நுண்ணங்கித் தொற்றுக்கள் ஏற்பட அதிக வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. அத்துடன் மாணவர்கள் பாடசாலை செல்லும்போது குளித்துதூய்மையாக இருக்க வேண்டும் என்பதும் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் தூய்மையான இடத்தில்தான் கல்வித் தெய்வமும் உறைவதற்கு பிரியப் படுவாள்.

இவை எல்லாவற்றையும்விட நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் உங்களுடைய பண்பாடுகளும், பழக்கவழக்கங்களும் மற்றவர்களைப் புண்படுத்தாமல் இருக்கும் படி பார்த்துக் கொள்வதுதான். ஏனெனில் ஆரோக்கியம் என்பது வெறும் உடல் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல .

அது மனதோடும் சமூகத்தோடும் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டு அமைந்துள்ளது. எனவே உங்கள் வெளிச் செயற்பாடுகளும். உங்கள் ஆரோக்கியத்தைக் கணிப்பிடும் என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் சமூகத்தில் வெளிப்படுத்துகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் சமூகத்தினால் உங்களுக்கு புள்ளி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆகவே, மாணவர்களே உணவுப்பழக்க வழக்கத்தைச் சிறப்பாக மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல் ஏனைய உளவியல் மற்றும் சமூகம் தொடர்பான உங்கள் செயற்பாடுகளையும் கவனத்தில் கொள்ளுங்கள். உங்களின் வாழ்க்கை உங்கள் கைகளில்தான் உள்ளது. அதை எவரும் திசைதிருப்பமுடியாது. அவ்வாறு நடக்கவும் விட்டுவிடாதீர்கள். ஆனாலும் உங்களிடம் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு நம்பிக்கை உள்ளவர்களிடம் இருந்து தீர்வைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

எந்த ஒரு வேலையில் ஈடுபடும்போதும் பலதடவை யோசித்து செயல் ஆற்றுங்கள். வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெறுவதற்கு இந்த ஆரோக்கியமான வாழ்வு மற்றும் அதன் செயல்முறைகள் உங்களுக்குக் கை கொடுக்கும் என நான் நம்புகின்றேன். உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கேட்பது நியாயம்தான் ஆனாலும் நியாயமில்லை!

தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னிணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுப்பியுள்ள நியாயமான கேள்வி, தமிழ் மக்கள் பேரவைக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் மக்கள் பேரவை என்பது ஓர் மக்கள் இயக்கமாக உருவாக்கப்பட்டதல்ல, அது சிலரது அரசியல் தேவைக்காக தோற்றம் பெற்றது என்ற வாதத்தையே பேரவையின் தோற்றம் முதல் 'உதயன்' பத்திரிகை வலியுறுத்தி வந்திருக்கிறது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கருத்து அதனை எண்பிக்கும் வகையில் திடமாக வெளிவந்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறான பாதையில் செல்கிறது என்றால், தனது கொள்கையில் இருந்து பிறழ்கிறது என்றால், தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியில் இருந்து விலகிச் செல்கிறது என்றால், அரசியல் தீர்வு விடயத்தில் சுவட்டாட்சியை (சமஷ்டி) விட்டுக்கொடுத்துவிட்டது என்றால் அதன் பின்னரும் ஏன் அந்தப் பக்கத்திலேயே இருக்கிறீர்கள் என்று புளொட் மற்றும் ஈபீஆர்எல்எவ் கட்சிகளைப் பார்த்துக் கேட்கிறார் கஜேந்திரகுமார். அவர் பெயர் குறிப்பிடாவிட்டாலும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் பார்த்து எழுப்பப்படும் கேள்வி தான் அது.

நீங்கள் எல்லோரும், தமிழ் மக்கள் பேரவையில் இருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் குற்றஞ்சாட்டிக்கொண்டே அதில் தொடர்ந்தும் அங்கத்துவம் வகிப்பதால், கூட்டமைப்புச் செய்வது ஒன்றும் பாரதூரமான குற்றம் அல்ல என்றுதான் மக்கள் நம்புகிறார்கள், வெறுமனே விமர்சித்துவிட்டு மன்னித்துவிடக்கூடிய குற்றத்தைத் செய்கிறது கூட்டமைப்பு என்று மக்கள் எண்ணத் தலைப்படுகிறார்கள். எனவே மோசடியான அந்தக் கூட்டமைப்புத் தலைமையை இந்த இரு கட்சிகளும், முதலமைச்சரும் தூக்கி எறிந்துவிடவேண்டும் என்பதே அவரது ஆணித்தரமான கருத்து.

கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரையில் அவரது நிலைப்பாடு நியாயமானது. கூட்டமைப்பின் தலைமையின் போக்குடன் தன்னால் ஒத்துப்போக முடியாது என்றுகூறித்தான் அவர் கூட்டமைப்பில் இருந்து வெளியே வந்தார். அதேபோன்ற குற்றச்சாட்டை முன் வைத்துக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய – விடுதலைப் புலிகளால் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்ட கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டுதான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்கிற கட்சியையும் உருவாக்கினார். அதனால், தனது வழியிலேயே, நேர்மையாகச் செயற்பட்ட மற்றைய இரு கட்சிகளின் தலைவர்களும், முதலமைச்சரும் செயற் படவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதில் குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை.

இருந்தாலும், இந்தக் கருத்தை தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்படும்போதே அவர் தெரிவித்திருந்தால் அவரை ஒரு நியாயமான அரசியல்வாதியாக மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பர்.

ஒரு மிகப்பெரிய தேர்தல் தோல்வியின் பின்னர் – அதுவும், இம்முறை எப்படியும் இரண்டு மூன்று ஆசனங்களாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தாலும், ஒரேயொரு ஆசனத்தைக்கூடப் பெறமுடியாமல்போன நிலையில் – தமது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்காகத் தமிழ் மக்கள் பேரவையில் கஜேந்திரகுமாரும், சுரேஷ்பிரேமச்சந்திரனும் இணைந்தபோது இந்தக் கருத்தை அவர் முன் வைத்திருந்தார் என்றால், இன்று அவரை நோக்கி "நீயுந்தான் புரூட்டஸ்" என்று விரல் நீட்டவேண்டி வந்திருக்காது.

இருந்தாலும், ஒரு தேவை என்று வந்தபோது எதைப் பற்றியும் கவலைப்படாமல் இணைந்துகொண்டபோதும், இப்போதாவது கொள்கைப் பிடிப்புக் குறித்து அவர் பேச முற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே. தமிழ் மக்கள் பேரவை என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களைக் குழப்பியடித்து சுயநல அரசியல் செய்வதிலிருந்து அதைச் செய்யும் தரப்புகள் விலகித் தமது தூய்மையை நிரூபிக்க வேண்டும் என்று கோரியிருப்பதை எவரும் தவறெனச் சொல்ல முடியாது.

ஆனால், அவ்வளவு நேர்மையானவர்களாக, கொள்கைவாதிகளாக அவர்கள் இருந்திருந்தால், என்றைக்கோ அரசியலைவிட்டு ஓடியிருப்பார்கள் அவர்கள். காலத்திற்குக் காலம், கள நிலைக்கு ஏற்பத் தம்மை மாற்றிக்கொள்பவர்களிடம் போய் முட்டிக்கொள்வது முட்டாள்தனமன்றி வேறில்லை என்ற அரசியல் பக்குவம் கஜேந்திரகுமாருக்கு வரவேண்டியிருக்கிறது.

# மக்களின் நம்பிக்கையை இழக்கின்றதா நல்லாட்சி அரசு?

■சேரலாதன்

குளிர் விட்டுப்போன நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நல்லாட்சி அரசின் நடவடிக்கைகளைத் தீவிரமாக விமர்சனம் செய்து வருகின்றார். இந்த அரசு, மக்கள் மீது பொருளாதாரச் சுமைகளைச் சுமத்தி வருவதாக அவர் அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார். அவர் சொல்வதில் உண்மையிருப்பதால், மக்கள் அவரது கருத்தை ஆதரிக்கவே செய்வார்கள். அரிசி உட்பட உணவுப்பொருள் களின் விலைகள் உச்சத்தைத் தொட்டு நிற்பதால், நடுத்தர, வசதி குறைந்த மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அரச ஊழியர்களின் வேதனத்தை இரண்டு தவணைகளில் பிரித்து வழங்குவதற்கான திட்டமும் அரசிடம் இருப்பதாகத் தெரிகின்றது. இதை அரச ஊழியர்கள் ஒரு போதுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அரச ஊழியர்களில் பலர் வங்கி உட்பட வெவ்வேறு நிறுவனங்களில் கடன்களைப் பெற்றவர்களாக உள்ளனர். இவர்களது வேதனம் இரண்டு தவணைகளில் வழங்கப்படுமாயின் கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியதொரு நிலை ஏற்பட்டுவிடும்.

மக்கள் உயிர்வாழ்வதற்கும் ஆரோக்கியமாக இருப்பதற்கும் சிறந்த உணவுகள் தேவை. ஆனால் சாதாரண உணவைப் பெறுவதில்கூட நாட்டு மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர். ஆனால் அரசு இந்தச் சிரமத்தைப் போக்குவதற்கான திட்டம் எதையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மாறாகத் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னைய ஆட்சியாளர்களே பொறுப்புக்கூற வேண்டுமென இன்றைய அரசு கூறி வருகின்றது.

### அரசைக் கவிழ்க்க ஆலாய்ப் பறக்கும் எதிரணியினர்

முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக அரசு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. மாறாகக் காலத்தைக் கடத்துவதிலேயே அரசு குறியாகச் செயற்படுகின்றது. அரசின் பலவீனத்தை உணர்ந்து கொண்டதால், மகிந்த தரப்பினர் அரசுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அரசைக் கவிழ்த்து விடுமோவெனச் சூளுரைத்து வருகின்றனர். ஆனால் இவற்றைத் தடுப்பதற்கான திராணி அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அரசுக்குள் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அதிகாரப் போட்டியே இதற்கான பிரதான காரணமாகும். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் இருப்பதைச் சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் அறவே வெறுக்கின்றனர். அவரை எவ்விதத்திலாவது அந்தப் பதவியிலிருந்து அகற்றி விடுவதே அவர்களது நோக்கமாகவும் உள்ளது. இதனால்தான் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் இருக்கும் வரை ஜனாதிபதியிடம் உள்ள நிறைவேற்று அதிகாரங்கள் களையப்படக் கூடாதென இவர்கள் தெரிவித்து வருகின்றனர். ஜனாதிபதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக உள்ளமை இங்கு கவனிக் கத்தக்கது.

### அரசுக்குள்ளேயே கருத்தொற்றுமை கிடையாது

மேலும் நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து நல்லாட்சியொன்றை அமைத்துள்ளதாகக் கூறப்பட்டாலும், பொதுவான விடயங்களில் இரு தரப்பினராலும் ஒத்த கருத்தை எட்ட முடியவில்லை. சமீப காலமாகவே ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் நிலவுவதாகத் தெரிய வருகின்றது. பிரதமர், ஜனாதிபதியையும் மீறிச் சில விடயங்களில் தன்னிச்சையாகச் செயற்படுவதாகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் குற்றஞ் சுமத்துகின்றனர். மத்திய வங்கியின் பிரச்சினைக்குரிய பிணைமுறி விவகாரம், பொருத்து வீடுகள் அமைத்தல், ஜனாதிபதிக்குத் தெரியாமல் அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் உட்படப் பல விடயங்களை இவர்கள் இதற்கு உதாரணங்களாக எடுத்துக் காட்டுகின்றனர். இவை உண்மையானவைகளாக இருக்குமானால், இலங்கையில் நல்லாட்சி நிலவுவதாகக் கூறுவதில் அர்த்தமேயில்லை. இலங்கை வெப்ப வலயத்தில் அமைந்துள்ள ஒரு நாடாகும். வருடத்தின் அநேகமான நாள்களில் வெப்பமான கால நிலையே நாட்டில் நிலவுகிறது. இதன் காரணமாகவே வீடுகளின் கூரைகளில் ஓடுகளைப் பொருத்துமாறு பரிந்துரை செய்யப்படுகின்றது. அஸ்பெஸ்டஸ் தகடுகளைக் கூரைகளுக்குப் பயன்படுத்துவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் போரின்போது வீடுகளை இழந்த மக்களுக்கு இரும்புக் கழிவுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட பொருத்து வீடுகளை வலுக்கட்டாயமாக வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முனைந்து வருகின்றது. இது ஏற்கனவே நொந்த நிலையில் காணப்படுகின்ற மக்களை, வெப்பத்தில் வெந்துபோகச் செய்கின்ற காரியமாகும். கழிவு இரும்புகளைக் கொட்டுவதற்கு இடமில்லாமல் அலைந்து திரிகின்ற நிறுவனங்களுக்கு அவற்றைப் பொருத்துவீடுகள் என்ற பெயரில் காசாக்குவதற்கு நல்லாட்சி அரசு உதவுகின்ற செயலை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்களின் காணிகளைப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. ஆனால் அந்தக்காணிகளை உரியவர்களிடம் முழுமையாகத் திரும்ப ஒப்படைப்பதில் ஏற்படுகின்ற தாமதம், மனச்சாட்சிக்கு விரோதமான செயலாகும். இதே நிலைதான் குடாநாட்டின் வலிகாமம் பிரதேசத்திலும் காணப்படுகின்றது. இந்த விடயங்களில்அரசின்கவனம்எப்போதும் பக்கம் திரும்பும் என்ற ஆவலுடன் பாதிக்கப்பட்ட மக்கள் காத்திருப்பதைக் காண முடிகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னரே தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுமென ஜனாதிபதி உட்பட அரசின் முக்கியஸ்தர்கள் கூறி வருகின்றனர். ஆனால் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வேலைத் திட்டம் பேச்சளவிலேயே முடங்கிப் போய்விட்டது. அது தொடர்பான நகர்வுகளை இப்போது காணமுடியவில்லை. அவ்வாறாயின்தமிழர்பிரச்சினைகளுக்குத் தீர்வுதான் என்ன?

அரசின் செயற்பாடுகளில் மக்கள் மெல்லமெல்ல நம்பிக்கை இழந்து வருவதைக் கண்கூடாகவே பார்க்க முடிகின்றது. செயற்றிறனற்ற ஓர் அரசாகவே இதை மக்கள் பார்க்கின்றனர். எத்தகைய சவால்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து நாட்டு மக்களை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பதே நல்லாட்சிக்கு அழகு சேர்ப்பதாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அதை எமது நாட்டில் காணமுடியவில்லை.

ரஜகுக்



# நுளம்பு இல்லாத தேசம்; டெங்கு இல்லாத தேசம்

நோய் ஒண்டும் இல்லாமல், அந்தப் பயமே இல்லாமல், நிம்மதியா வாழ்ந்தாக் காணும்; வேற ஒண்டுமே வேண்டாம் எண்டு நோயால அந்தரப்பட்ட ஒவ்வொரு மனிசரும், அதுகளின்ற குடும்பங்களும் நினைப்பினம். அந்த நிலைமையில இப்ப டெங்கு எண்டு, ஒவ்வொரு நுளம்பைக் கண்டாலும் நடுங்க வேண்டி இருக்கு. அந்தக் காலத்தில பொம்பரைத் தேடிப்பாக்கிறது போல, இப்ப நுளம்பைக் கண்டா, அது எங்கை போகுது எண்டு துரத்தித் துரத்தியெல்லே தேட வேண்டியிருக்கு? நுளம்பு பறக்கேக்க நுளம்பில வாற கோபத்தை விட, சுகாதாரப் பிரிவுக்காரரில தான் சரியான கோபம். அந்தக் காலத்தில வீடு வீடா வந்து அன்ரி மலேரியாக்காரங்கள் மருந்தடிக்கிறவங்கள். இப்ப அவங்களும் வாறதில்லை. நுளம்புக் கடியெண்டால் தாங்கமுடியல்லை எண்டு வயது போனதுகள் மனதாரத் திட்டித் திட்டி முணுமுணுக்குங்கள். அப்ப மலே ரீயா நுளம்புக்கு மட்டும்தான் அந்தமருந்தடிக்கிறது. அதுகளுக்கு எப்படித் தெரியும் இப்ப நிப்பாட்டியாச்சு எண்டது. எனக்கே யாரோடையோ பிரச்சினைப்பட்டேக்கை அவங்கள் சொல்லித்தான் தெரியும்.

ஒரு விழிப்புணர்வுக் கூட்டத்திலை இருந்து தேவையில்லாம இந்தக் கதையை எல்லாம் கதைச்சு, நல்லா வாங்கிக் கட்டிப் போட்டு, வீட்ட வந்து யோசிச்சா பல விசயம் புரிஞ்சுது.

டெங்குக் கட்டுப்பாட்டிலை, முக்கியமாக



எந்த நோய் அறிகுறிகள் தெரிஞ்சாலும் வைத்தியசாலைக்கு போகவேணும். நோயாளியை நுளம்பு கடிக்க விடக்கூடாது. வீட்டிலையோ, போற இடங்களிலையோ நுளம்புகள் கடிக்காமல் எங்களைப் பாதுகாக்க வேணும். நுளம்பு உருவாக வாய்ப்பளிக்கிற இடங்களை இல்லாமல் செய்ய வேணும். தாங்கள் எத்தனையோ வருசமா வீடு வீடாக வந்து வீட்டுச் சுற்றாடலிலை சிரட்டை, பேணி, கோம்பையெல்லாம் கிடக்க விடாதீங்கோ எண்டு சொல்லியும் கேக்கிறேல்ல எண்டு சொல்லிக் கொண்டு இருக்கும்போது கேட்டன், தென்னை நிண்டா கோம்பை கிடக்கும் தானே? திருவிற தேங்காய்ச் சிரட்டையை என்ன செய்யிறது? சிரட்டையை அடுப்பிலை எரிக்கக் கூடாது எண்டு பெரியாக்கள் சொல்லூறவை. பேணியை எங்கை போடுறது எண்டு கேட்ட கேள்விக்கு சிரிச்சுப் போட்டுச் சொன்னார்.

"நுளம்புப் பிரச்சினை எண்டும் சொல்லூறியள். பிறகு சிரட்டை, பேணி, கோம்பையை இல்லாமல் செய்யுங்கோ எண்டால், அதுக்கும் விருப்பமில்லை. அப்ப என்னெண்டு நுளம்பு போறது? என்னெண்டு டெங்கு போறது? இண்டைக்கு உங்கடை வீட்டில இருக்கிற கோம்பையைச் சாடையாக சரிச்சுப் பாருங்கோ, ரயரை தட்டிப்பாருங்கோ? எவ்வளவு நுளம்பு பறக்குது எண்டு தெரியும். கனநாள் கழுவாத தண்ணித் தொட்டிகளை, வளவில் கிடக்கிற பழைய தண்ணிப் பாத்திரங்களை எட்டிப் பாருங்கோ, எவ்வளவு ஆயிரம் குடம்பி கிடக்குது எண்டு தெரியும். ரொயிலட்ரின்ரை பிற் வெடிப்புக்களைப் பாருங்கோ அதால நுளம்புகள் வரும். இதுகளைப் பற்றி எங்களுக்கு என்ன கவலை எண்டிருந்து போட்டு, எல்லாரையும் டெங்கு வந்து சாகவிடுவமோ?" கேட்டுவிட்டுச் சொன்னார் அந்த அதிகாரி.

தண்ணி ராங்குகள், தொட்டிகளை மூண்டு நாளுக்கு ஒரு தடவை நல்லாய் உரஞ்சிக் கழுவுங்கோ. வாய்க்கால்களை தண்ணி தேங்காமல் நல்லாய்க் கழுவலாம். இந்தச் சிரட்டை, கோம்பை எல்லாம் நல்ல விறகு எல்லோ? அதை விட சில கைவேலை வடிவா செய்யிறாக்கள், இந்த கழிவுகளைப் பாவிச்சு எவ்வளவு வடிவான பொருள்கள் எல்லாம் செய்யினம்? நீங்கள் என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் எண்டு இருந்து ஆறுதலாய் யோசியுங்கோ. ஐடியா எல்லாம் தானாய் வரும், சிரட்டைகளை, போத்தல்களைச் சேர்த்து வைத்து வித்தால் காசும் வரும், வடிவான பொருள் கிடைக்கும், சுற்றாடலும் அழகாக ஆகிவிடும். இதெல்லாம் உங்களுக்கு இலவச இணைப்புகள் பாருங்கோ. ஆனா என்னெண்டாலும், தாமதிக்காதையுங்கோ. உடனடியாக நுளம்பு உருவாக வாய்ப்பளிக்கும் இடங்களை இல்லாமல் ஆக்குங்கோ.

"எங்களுக்காகத் துப்புரவு செய்யாதைங்கோ, உங்களுக்காகத் துப்புரவு செய்யுங்கோ. கம்பசில இருந்து மாணவர்கள் வெளிவாறது மாதிரி, ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில் நுளம்புகள் வந்து கொண்டிருக்கு. அதைவிட ஆபத்து, பொலிஸ், சுகாதார அதிகாரிகள் மற்றும் எங்கடை கிராம அலுவலருடன் இணைந்த குழு எண்டு சேர்ந்து வாற அணியினர் சில சந்தர்ப்பத்தில உடனேயே வழக்குப் போட்டு விடுவினம். அநியாயக் காசு; வீண் அலைச்சல்".


யோசிச்சுப் பார்த்துப் போட்டு, வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கிடந்த ரயர்களைத் தட்டிப் பார்த்தேன். கோம்பையளைச் சரித்துப் பார்த்தேன். தண்ணித் தொட்டியைப் பார்த்தேன். ரொயிலட் பிற் வெடிப்பைப் பார்த்தேன். எல்லா இடத்திலயும் நுளம்பு அல்லது குடம்பி கிடந்ததுகள். நுளம்பு ஆரால வருது எண்டு நல்லாவே விளங்கிச்சுது.

அதோட, பக்கத்து வளவு சோமசுந்தரத்தாரும், மனிசியும் பேரப்பிள்ளையளோட கொஞ்சக் காலம் இருந்து பார்த்திட்டு வரவெண்டு சுவிசுக்குப் போனதில இருந்து அவங்கட வீட்டுப் பக்கம் கவனிக்காமல் புதர் மண்டிக் கிடந்துது. நுளம்புகள் வந்து தங்கிறது, ஓய்வெடுக்கிறது எல்லாமே உந்தப் பத்தைகளிலை தானாமே. பழைய கோபத்திலை வரட்டும் சுகாதார பகுதி ஆக்கள், ஒருக்கா அண்டி வைக்க வேணும் எண்டு இருந்தனான். இனிக் கோபமெல்லாம் பார்க்க ஏலாது. அவையளால அங்கை நிண்டு ஒண்டும் செய்யவும் ஏலாது. அவரிட்ட ஒரு போனைப் போட்டுசாட்டோட கொஞ்சம் காசை வேண்டி ஆக்களைப் பிடிச்சு நாங்களே துப்புரவாக்கி விடுவம். போறவன் வாற வன் எல்லாம் பியர்ப் பேணிகளையும், குப்பைகளையும் போட்டுட்டுப் போறாங்கள். அதுகளுக்கிள்ளை இருந்தும் நுளம்பு வரும்தானே? காணிக்காரர் எங்கை யெண்டு தேடவே போகுது, எங்களைத்தானே கடிக்கப்போகுது.



இப்ப என்ரை வளவைப் பாப்பம். வளவுக்குள்ளை எனக்குக் கடும் வேலை செய்ய உடம்பும் ஏலாமல் இருந்துது. நேரமும் இல்லை. யோசிச்சன். மோட்டச் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டன். ரொயிலட் பிட் வெடிப்பைப் பூச, சிமெந்து இரண்டு கிலோவும்; மண் ஒரு கடகமும் வாங்கினன். தெரிஞ்ச துப்புரவுத் தொழிலாளியிட்ட போய் றேட்டைப் பேசி இண்டைக்கே செய்ய வேணும் எண்டும், என்னத்தைப் புதைக்க வேணும், என்னத்தை எரிக்க வேணும், என்னத்தை வாற ரைக்டர் காரனிட்டக் கொடுக்க கட்டி வைக்க வேணும் எண்டு, அறிவுறுத்தலைக் கொடுத்தன். பீலி துப்புரவு செய்ய ஏறுவதற்கு ஏணியையும் எடுத்து வைச்சிட்டுப் போய் பின்னேரம் வந்து பார்த்தால், என்ரை கண்ணே பட்டிடும் போல இருந்துது, அவ்வளவு அழகாய் இருந்துது. சுகாதாரப் பகுதி ஆள்கள் வந்து பாக்கட்டும். நுளம்பு இல்லை எண்டு ஸ்ரிக்கர் ஒட்டுவினம் எண்டு சொல்லிக் கொண்டே வீட்டுக்குள்ளை போனன்.

ஏற்கனவே துப்புரவு செய்த வீட்டைச் சுற்றிப்பார்த்துப் போட்டு நின்ற ஸ்கொலர்சிப் பாஸ் பண்ணின மகன், அவர்கள் ஏன் வரவேணும்? எங்கட வீட்டுக்கு முன்னாலே நாங்களே போட் போடுவம் நுளம்பு உருவாகும் இடங்கள் இல்லாத வீடு எண்டு. ஒட்டிறது மட்டுமில்லை எங்கட சுற்றாடலை நாங்களே அடிக்கடி துப்புரவுபடுத்தி எப்பவும் இப்ப இருக்கிற மாதிரியே வைத்திருப்பம் எண்டதைத் கேட்டு முகமெல்லாம் பூரிப்போடை வரவேற்றாள் மனைவி. கேட்ட மகன், இனி டெங்கு இஞ்சை வருமா எண்டு ஆரும் கேட்டால்வரும்;ஆனாவராதுஎண்பதுதான் பதில். மகனின்ரை கதையையும், மனிசியின்ரை முகத்திலை சந்தோசத்தையும் ரசித்தபடி எங்கடை கடமையை நாங்கள் செய்திட்டம். அதோட நாங்கள் மட்டுமில்லை எல்லாரும் இப்படி இருந்தால், நிச்சயமாய் நாடே சொல்லும், நுளம்பு இல்லாததேசம்; டெங்கு இல்லாத தேசம் இது எண்டு.



## வாசகர் திருமுகம்

### பொதுமக்களுக்குச் சிரமம் ஏற்படுத்துவதைத் தவிர்த்தாலென்ன?

யாழ்.நகரில் வியாபார நிறுவனங்களை நடத்திவரும் வியாபாரிகளில் சிலர், காலை வேளைகளில் தமது வியாபார நிலையங்களைத் திறப்பதற்கு முன்னர் வெளிப்பக்கத்தில் தண்ணீர் ஊற்றி கழுவிய பின்னரே தமது விற்பனைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கிறார்கள். இவர்கள் தமது கடைகளுக்கு முன்னாலும், அதற்கு முன்னால் உள்ள நடைபாதைகள், வீதிகளிலும் அளவுக்கதிமான நீரை ஊற்றுவதால் இந்த வீதிகளினூடாக நடந்து செல்பவர்களும் சிறிய வாகனங்களில் செல்பவர்களும் வழுக்கி விழும் நிலையேற்படுகிறது. இவர்கள் அளவுக்கதிகமான தண்ணீரை ஊற்றுவதால் அந்தத் தண்ணீர் வழிந்தோடி வீதிகளின் ஓரங்களிலும் தேங்கிக் காணப்படுகின்றது. இவர்கள் தண்ணீரை அளவாக பயன்படுத்தினால் இந்த நிலை ஏற்படாது.

வியாபார நிலையங்களது உரிமையாளர்கள் இந்த விடயத்தில் பாதையால் பயணிப்போருக்கு அசௌகரியம் ஏற்படாது தமது செயற்பாடுகளை மேற்கொள்ள முன்வருவார்களா?

*திலிப், குருநகர்*

### தீர்வுக்கான காத்திருப்பு

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சாந்தைக் கிராமமானது, 500க்கு மேற்பட்ட குடும்பங்களையும், 1500 க்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட பெரியதொரு கிராமமாகும். இங்கு பன்னிரெண்டுக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. இதில் விநாயகர் சன சமூக நிலையமே முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. வருடா வருடம் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படுகின்ற நியதியிலிருந்து விலகி, இரண்டாண்டுகளாக ஒரே நிர்வாகம் தொடர்ந்து செயற்பட்டு வந்தது. இது குறித்து உரியவர்களிடம் பொதுமக்கள் முறையிட்டும் தீர்வு கிடைக்கவில்லை. மூன்றாம் ஆண்டான 2017இல், புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறுமென இரண்டு நாள்களுக்கு முன்னரே விசேடமாக ஒலிபெருக்கி மூலம் எமது கிராம மக் களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆயினும் 2016 இல் அங்கத்தவராகச் சேர்ந்தவர்கள்கூட புதிய நிர்வாகத் தெரிவுக்குப் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. ஓரிரு மணித்தியாலங்களுக்குள் தமக்கு இசைவானோரைப் பதிவுசெய்து அவர்களையே நிர்வாகத்துக்குத் தெரிவுசெய்து பொறுப்பேற்க வைத்தனர். பழைய நிர்வாகத்தினர். பொறுப்பானவர்கள் இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வார்களா?

*காந்தையூர் ராஜ்*



**மேடம்:** நிதானத்துடன் பேசினால் சிரமம் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**இடபம்:** இனிய அணுகுமுறையால் நன்மை காண்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தின் மூலம் வருமானம் உயரும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் சீரான லாபம் கிடைக் கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி வந்து சேரும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**கடகம்:** பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் குறுக் கிடும் சிரமங்களை சரிசெய்வீர்கள். லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அனைவரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதி கரிக்கும். காணாமல் போன பொருள் கைக்கு வந்து சேரும்.

**கன்னி:** முன்யோசனையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கூடுதல் பணிபுரிவீர்கள். வருமா னம் சீராக இருக்கும். அரசாங்க வகையில் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** அவமதித்துப் பேசியவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் பொறுமை தேவை. தொழில், வியாபார ரகசியங்களை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். பணவரவு சுமா ராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**தனுசு:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். ஆதாயம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** உதவும் மனப்பான்மையுடன் செயற் படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய பணிமாற்றம் கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் அனுகூலத்தீர்வு கிடைக்கும்.

**கும்பம்:** குழப்பம் நீங்கி மனத்தெளிவு காண்பீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.


**மீனம்:** நண்பரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமார். பணி யாளர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். பெண்கள், உறவினர் வகையில் செலவு செய்வர்.

# ஜெயம் ரவியின் ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்

ஜெயம் ரவி நடிப்பில் அண்மையில் வெளியான 'போகன்' திரைப்படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. அதனைத்தொடர்ந்து ஜெயம் ரவி இயக்குநர் விஜய் இயக்கத்தில் 'வனமகன்' படத்திலும், சக்தி சவுந்தர்ராஜன் இயக்கத்தில் 'டிக் டிக் டிக்' படத்திலும் நடித்து வருகிறார். முழுக்க முழுக்கக் காடுகளில் பட மாக்கப்பட்டுள்ள 'வனமகன்' படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்து விட்டது.

அதன் தொடர்ச்சியாக ஜெயம் ரவி 'டிக் டிக் டிக்' படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பில் பங்குபற்றி யுள்ளார். இந்தப் படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக 'ஒருநாள் கூத்து' பட நாயகி நிவேதா பெத்துராஜ் நடித்து வருகிறார். ஜெயம் ரவியின் மூத்த மகன் ஆரவ்வும் இந்தப் படத்தில் நடிக்க விருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் விண்வெளியை மையமாக வைத்து எடுக்கப்படும் முதற் படமான 'டிக் டிக் டிக்' படத்தை நேமிசந்த் ஜபக் புரொட கஷன்ஸ் நிறுவனம் பிரம்மாண்டமாகத் தயாரிக்கிறது.



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | | 7 |
| | | | | | | | 9 | 3 |
| 9 | 5 | | | 1 | | | | 6 |
| | | 1 | 8 | | | | | |
| | 8 | | 7 | 2 | 6 | | 3 | |
| | | | | | 5 | 8 | | |
| 2 | | | | 6 | | | 4 | 9 |
| 3 | 4 | | | | | | | |
| 7 | | | 2 | | | | | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 |
| 4 | 8 | 1 | 5 | 3 | 2 | 9 | 7 | 6 |
| 5 | 2 | 6 | 1 | 7 | 9 | 8 | 4 | 3 |
| 8 | 1 | 3 | 2 | 9 | 5 | 4 | 6 | 7 |
| 7 | 5 | 4 | 3 | 6 | 8 | 1 | 9 | 2 |
| 9 | 6 | 2 | 7 | 4 | 1 | 5 | 3 | 8 |
| 6 | 4 | 5 | 8 | 1 | 3 | 7 | 2 | 9 |
| 1 | 9 | 8 | 6 | 2 | 7 | 3 | 5 | 4 |
| 2 | 3 | 7 | 9 | 5 | 4 | 6 | 8 | 1 |

சுடோக்கு

ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்): இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.









## வரலாற்றில் இன்றைய தினம்

1873 - ஒட்டமன் அதிகாரிகளால் பல்கேரிய புரட்சித் தலைவர் வாஸில் லெவ்ஸ்கிக்கு சோபியாவில் சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1930 - ஜனவரியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஆராய்ந்தபோது கிளைட்டொம் போவால், புளூட்டோ கண்டு பிடிக்கப்பட்டது.

1943 - இரண்டாம் உலகமகா போர்; நாஸிகளால் வெள்ளை ரோகா இயக்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

1957 - பிரிட்டன் காலனித்துவ ஆட்சியாளர்களால் கென்னிய புரட்சித் தலைவர் டெபின் கிமாகு சாவுத் தண்டனைக்கு உள்ளாகினார்.

1977 - போயிங் 747 விமானத்தின் மீது, தனது கன்னிப் பயணத்தை விண்மீன் ஓடம் பரீட்சார்த்த பயணமாக மேற்கொண்டது.

1991 - லண்டன் படிங்ரன் மற்றும் விக்டோரிய ரயில் நிலையங்களில் அதிகாலை ஐ.ஆர்.ஏ.இயக் கத்தால் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன.

1993 - மட்டக்களப்பு நவுண்டியாமடுவில் தமிழரின் நெற் சூடுகள் படையினரால் எரிப்பு.

1993 - பூநகரி முகாமை அகற்றிய பின்பே பாதை திறப்பது பற்றிய பேச்சு என புலிகள் தெரிவிப்பு

2003 - தென்கொரிய சுரங்க வீதி டீகுவில் தீயினால் 200 பேர் வரை உயிரிழந்தனர்.

2004 - சல்பர், பெற்றோல் மற்றும் உரம் ஆகிய வற்றை ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் தீப்பிடித்து வெடித்ததில் 200 வரையான மீட்புப் பணியாளர் உட்பட 295 பேர் உயிரிழந்தனர்.

2007 - ஹரியானா பனிபட்டில் சம்யுக்தா எக்ஸ்பிர ஸில் பயங்கரவாதிகளால் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதில் 68 பேர் உயிரிழந்தனர்.

2014 - முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கு 3 குற்றவாளிகளது சாவுத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக்குறைத்து இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2014 - பலாலி, திருமலையிலிருந்து இந்தியாவுக்கு விமான சேவை ஆரம்பிக் வடக்கு மாகாணசபையில் தீர்மானம்.

2014 - இலங்கையரசின் கணக்கெடுப்பை நிராகரித்து ஜெனிவாவுக்கு முன் கூட்டமைப்பின் கணக்கெடுப்பு எப்போது? என சிவில் அமைப்புக்கள் கேள்வி.

2014 கொழும்பில் காணாமற் போனோர் விசாரணை தேவையில்லையென ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு.

2014 - காணாமற் போனோர் குறித்த ஆவணங்கள் கரைச்சி பிரதேச செயலகத்தால் திரட்டல்.

2014 - இராணுவ வசமுள்ள 165 ஏக்கரை மீட்டுத் தருமாறு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மக்கள் கோரிக்கை.

2014 - 87 மணித்தியாலம் தூங்காமல் தொலைக்காட்சி பார்த்து 3 பேர் அமெரிக்காவில் கின்னஸ் சாதனை.

2016 - வவுனியாவில் மாணவி வன்புணர்வின் பின்னரே படுகொலை; உடற் கூற்றுப் பரிசோதனையில் உறுதி

2016 - முழங்காவிலில் நள்ளிரவில் ஆசிரியர் விடுதியின் கதவுகளைத் தட்டும் இராணுவம்

2016 -ஈகோவுடனான முடிவையே சம்பந்தன் எடுப்பதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்.

2016 -பன்னாட்டு விமான நிலையத்துக்கு பலாலி மட்டுமே உகந்த இடமல்ல. பூநகரிக்கும் முழங்காவிலுக் குமிடையே அமைக்கலாம் என்கிறார் சுரேஷ்.

## நாளை

மாசி-07

ஞாயிற்றுக்கிழமை -19.02.2017

திதி: அட்டமி பி.ப. 02.39

நட்சத்திரம்: அனுசம் மு.இ.10.22

சுபநேரம்:09.32-11.02 வரை

ராகுகாலம்:05.02-06.32 வரை

## நிலத்தின் அடியில் விளையும் காய்கறிகளின் நன்மைகள்




பூமிக்கு அடியில் விளையும் காய்கறிகளைச் சிலர் தவிர்ப்பார்கள். ஆனால் அந்தக் காய் கறிகளில் நிறைய மருத்துவ நன்மை கள் அடங்கியிருக்கின்றன.



**இஞ்சி :**

அன்றாடம் சமையலில் சேர்க்கப் படும் இஞ்சி, இரைப்பைக்குப் பலம் சேர்க்கும். பசியைத் தூண்டும். அஜீரணத் தைப் போக்கும். கபத்தைக் குணப்படுத்தும். அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப் போக்கைச் சரிசெய்யும்.



**கரட் :**

கரட்டில் விற்றமின் ஏ, கே, பி1, பி2, பி6, பையோடின், நார்ச்சத்து, பொட்டாசியம் மற்றும் தைய மின் போன்ற சத்துகள் நிறைந்துள்ளன. புற்றுநோய் எதிர்ப்புச் சக்தியும் உள்ளது. எனவே தினமும் ஒரு கரட் சாப்பிடுவதால் மார்பகம், கல்லீரல், குடல் புற்றுநோய் மற்றும் மாலைக் கண்நோய் வருவதைத் தடுக்கலாம்.




அலங்காரப் பென்சில்கள் அறிமுகமாகி யுள்ளன. சில ஆழியை அழுத்தினால் காற்றாடி போன்றும் சுழலக் கூடியவையாகும். விதம் விதமான வடிவமைப்பில் சிறுவர்கள் விரும்பும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு பென்சில் 80 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

## 2017 பெப்ரவரி மாத பலன்



### கும்பம்

எந்தக் காரியத்தையும் தீர ஆலோசித்து அதில் ஈடுபடும் குணமுடைய கும்ப ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் அதி காரம் பெற்ற தன லாபாதிபதி குரு ராசியைப் பார்க்கிறார். எல்லாக் காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். ராசிக்கு இரண்டில் சுக்கிரன் சஞ்சாரம் செய்வது புதிய தொடர்புகளை ஏற்படுத்தும். திறமை வெளிப்படும். பல வகையிலும் முன்னேற்றம் உண்டாகும். செவ்வாயின் சஞ் சாரத்தால் சொத்துத் தொடர்பான விடயங்களில் இழுபறியான நிலை காணப் படும். இடமாற்றம் உண்டாகும். சுப செலவுகள் ஏற்படும். தொழில் ஸ்தானா திபதி செவ்வாய் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். தொழில், வியாபாரம் தொடர் பான காரியங்களில் தாமதப்போக்குக் காணப்படும். செலவும் அதிகரிக்கும். தேவையான பணவசதி கிடைக்கும். விரிவாக்கம் தொடர்பான முயற்சிகள் இழுபறியான நிலையில் இருந்து பின்னர் முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டியிருக்கும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் தாமதப்படலாம். எந்தவொரு விடயத்திலும் ஈடுபட முன்னர் தயக்கம் ஏற்பட்டு பின்னர் தெளிவு உண்டாகும். குடும்ப ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்யும் செவ்வாய் சுக்கிரனால் குடும்பத்தில் திடீர்க் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவிக்கிடையே எதையும் பேசித் தெளிவுபடுத்திக் கொள்வது நன்மையைத் தரும். குழந்தை களுக்கான பொருள்களை வாங்குவீர்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். புதிய தொடர்புகளால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். இடமாற்றம் ஏற்படலாம்.

கலைத்துறையினருக்குப் பொறுப்புகள் அதிகரிக்கும். உற்சாகமாக எதையும் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டு வீர்கள். விருந்து கேளிக்கைகளில் பங்கு கொள்வீர்கள். கடன் பிரச்சினை குறையும். வீண் அலைச்சல் வீண் பயம் குறையும். அடுத்தவர் செய்யும் இடையூறு களையும் உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சாமர்த்தி யத்தைப் பெறுவீர்கள். அரசியல்துறையினர் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். வீண் செலவு உண்டாகும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின் னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண் டாகும். ஆன்மிக தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விக்கான செலவு உண்டாகும். திறமை வெளிப்படும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதன் மூலம் நன்மை ஏற்படும்.

**பரிகாரம்:**

சனிக்கிழமையில் ஆஞ்சநேயரை வழிபட்டு வருவதால் மனதில் துணிச்சல் உண்டாகும். எதிலும் வெற்றி கிடைக்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

ஞாயிறு, செவ்வாய், வியாழன்.

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 17.02.2017 | 2097 | சிவப்பு |

வெற்றி இலக்கங்கள்
07 45 54 56
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 9, 663, 681/=

2017.02.19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச சபையின் நூலக சேவகரான
திருமதி ப.பங்கஜமலர் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி பாக்கியம் ஐயாத்துரை**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**ஊழியர் நலன்புரிசங்கம், நல்லூர் பிரதேசசபை.**

ஓம் விராட் வஸ்வ பரம்மனே நமஹ
## 73 ஆவது பிறந்ததின நினைவலைகள்



**அமரர் கலாபூஷணம்**
**லெ. கெங்காதரன்**
**ஆச்சாரியார்**

தோற்றம் 18.02.1944
மறைவு 05.07.2016

314, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

## பனைசார் பயிற்சி நெறிகளுக்குரிய வளவாளர் வேண்டுகை
(Walk in Interview)

01) பனை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்படும் பின்வரும் பனைசார் பயிற்சிக்குரிய வளவாளர்கள் திட்டக் காலத்துக்கு அமைய இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
1. பனைநார் பயிற்சி வளவாளர்
2. பனை மரத்தினால் அழகுருப் பொருள்கள், தளபாடங்கள் உருவாக்கும் பயிற்சி வளவாளர்கள்.
3. பனையிலிருந்து பதநீர் இறக்கும் பயிற்சி வளவாளர்

02) தொழில்சார்ந்த தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

03) வளவாளர்கள் செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஊடாகத் தெரிவு செய்யப்படுவர்.

04) விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரத்துடன் 27.02.2017 ஆம் திகதி அன்று கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு செயலகம்,
முதலாம் மாடி,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(AJA/783)(11,17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 08.07.1953
மறைவு 19.01.2017

எமது குடும்பத்தின்
குலவிளக்கு
**அமரர் செல்வராணி நவரத்தினராசா**

நிழல் போல் என்னைத் தொடர்ந்தாய் இன்று
நினைவாக மாறிவிட்டாய் என்றும் உன் நினைவுகளுடன் நான்.
அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு தினத்தில் அவரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
19.02.2017 ஞாயிற்றுக்கிழமை மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சிவன்கோவிலடி, புத்தூர்.
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
நவரத்தினராசா (கணவர்)



Cardiff Metropolitan University
SRI LANKA'S MOST ACCEPTED BRITISH
# MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
in Jaffna
March, 2017 Intake
(Third Batch in Jaffna)

» Duration: 18 Months

» Entry Qualification
- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- 12 months of classroom study and 6 months of Dissertation works
- Part Time (Sundays only) class
- Pay Rs.150,000 on or before 20th of February and claim Rs.50,000 off from the Total Payment
- Join as a group of 3 or more and claim Rs.25,000 off from theTotal Payment.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/ Library Computer Laboratory/ Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector



## தண்டம் அறவீடு

இரண்டுமாதத்துக்கு முன்னர் அல்வாய் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் 47 வயதுடைய நபர் ஒருவருக்கு எதிராக நெல்லியடி பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றில் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அவரை 15 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
(வ-26)

## விற்பனைக்கு
எமது பாவனையிலுள்ள பின்வரும் வாகனங்கள் பரந்தனில் விற்பனைக்கு உண்டு.
* Pakko kabalgo 70D
* Concrete mixture (Moving by tractor)
* Tractor tailer box
**தொடர்பு: 076 8245460**

## கண்ணீர்க் காணிக்கை
எமது பாடசாலையின் சக ஆசிரியை
திருமதி **விக்னேஸ்வரி விக்னேஸ்வரன்** அவர்களின்
அன்புச் சகோதரன்
**நல்லையா லோகேஸ்வரன்**
அவர்கள் 20.01.2017 இறைபதமடைந்துவிட்டார். அவரது
மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பாடசாலைச் சமூகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.**

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 01.08.1926
உதிர்வு 21.02.2014

**அமரர் வேலுப்பிள்ளை அரியதுரை**
ஆண்டுகள் மூன்று சென்றாலும் முடியாத சரித்திரம் நீங்கள்!
எமை வாழ்வாங்கு வாழ வைத்த வற்றாத ஊற்று நீங்கள்!
காலங்கள் கடந்தாலும் எம் காயங்கள் ஆறாது - உங்கள்
ஞாபகங்களை பசுமையாய் என்றும் சுமந்து நிற்கிறோம் நெஞ்சினிலே!
ஓம் சாந்தி!

வேலப்பர் லேன்,
அரியாலை.

நீங்கா நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் 5ஆம் குறுக்குத்தெருவில், யாழ். அடைக்கல மாதா ஆலயத்திற்கு அருகில் நிலப்பரப்பு ஒன்று விஸ்தீரணங் கொண்ட காணி ஒன்று விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு - 077 048 4266, 077 883 0569

## விற்பனைக்கு
புறோயிலர் சுத்தம் செய்தது 1 kg -400/=
அத்துடன் ஊர்ச்சேவல், கல்பேட் பேரன்ஸ், முட்டை என்பன விற்பனைக்குண்டு.
**தாசன் பாம்** 158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை
திருநெல்வேலியிலுள்ள பிரபல்யமான கடையொன்றிற்கு கணக்காளர், காசாளர், சிட்டை எழுதுனர், பொதிகட்டுபவர், லொறி உதவியாளர் ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
**077 623 1295**

## விற்பனைக்கு
அலுமினிய சுற்றுப்படி, பழைய யன்னல்கள், நிலை விற்பனைக்குண்டு.
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
077 312 7498

## தேவை
1) மில் வேலைக்கு ஆள் தேவை.
(அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது)
02) தோட்ட வேலைக்கு கூலி ஆள் தேவை.
தொடர்பு - 021 205 2200
077 978 9223

## வீசா Ticket குறைந்த விலையில்
SB
சகல நாடுகளுக்குமான பயணச் சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவுக்கான Ticket களை 29 500/= க்கும் வீசா விண்ணப்பப்படிவம் 100/= பூர்த்திசெய்து தரப்படும். அத்துடன் பிரயாண காப்புறுதி, திகதி மாற்றமும் செய்துதரப்படும். தொடர்புகளுக்கு அழையுங்கள்.
SB Travels and Tours Pvt Ltd.
021 222 9555, 021 222 8555,
076 691 1080, 076 691 1083

## விக்கியின்...

தெரிவித்ததாவது: ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்குக் கால நீடிப்பு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது அல்ல. அது தனித்து தமிழரசுக் கட்சியின் நிலைப் பாடாகத் தான் இருக்க முடியும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடமும், பத்திரிகைகள் ஊடாக மக்க ளிடமும், இலங்கை அரசுக்கு மேலும் கால நீடிப்பு வழங்க முடியாது என்ற எமது தெளிவான நிலைப்பாட்டை அறிவித்து விட்டோம் - என்றார்.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடுமை யான மேற்பார்வையின் கீழ் குறுகிய கால அவகாசம் வழங்க முடியும் என்று தெரி வித்துள்ளாரே என்று கேட்டபோது, அவரது இந்த முடிவையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இலங்கைக்கு மேலும் கால அவகாசத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபை வழங்கக் கூடாது. இலங்கை விவகாரத்தை ஐ.நா. பொதுச் சபைக்குப் பாரப்படுத்த வேண்டும். அதனூடாக ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கோ அல்லது பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன் றுக்கோ கொண்டு செல்ல வேண்டும் - என்றார் சுரேஷ் பிரேமச் சந்திரன்.

(வ-5-101)

### மரண அறிவித்தல்கள்

## பொனிப்பாஸ் மெற்றில்டா (லில்லி)



பிறப்பு 05.06.1957 இறப்பு 14.02.2017


அன்னாரின் இறுதிக் கிரியை கள் இன்று (18.02.2017) சனிக் கிழமை பி.ப. 2 மணியளவில் நடை பெற்று பூதவுடல் புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா சண்முகம்

**( ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர், நொறகல எஸ்ரேற் நிவிற்றிகல)**



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண் முகம் நேற்று (17.02.2017) வெள்ளிக்கிழமை தனது 97 ஆவது அகவையில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதி யரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான சண்முகம் - பார்வதி தம்பதியரின் அன்பு மரு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் வாலாம்பிகை, இராஜேஸ்வரி, கமலேஸ் வரி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஶ்ரீதரன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர் தேசிய நீர்வழங்கல் வடி காலமைப்புச்சபை), சர்வேஸ்வரன் (ஓய்வு பெற்ற அதிபர்), இரவிச்சந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாழினி சத்தியமூர்த்தி, நளாயினி விஜயராயா, ராஜினி சேந்தன், நிரோஜினி சபேசன் (ஆஸ்திரேலியா), துஸ்யந்தி தரேந்திரா (ஆஸ்திரேலியா), பிரியந்தி ராயூசன் (ஆஸ்திரேலியா), வினோத்சங்கர் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப்பேரனும் ஜனந்தினி, தயூரன், தரணியா, டிலக்சனா, காருண்யா, கார்த்திக், ஆதிரை, ஆவகன், பிரிந்தன், தமிரா, சித்தாத், சாயா, ஆழியா, அர்ச்சுன், ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர் களான பீகாம்பரம், செல்லையா, மயில்வாகனம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஈஸ்வரி வாசா,**
**கற்பகப்பிள்ளையார் கோயிலடி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

**சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின்**

### கண்ணீர் அஞ்சலி



எமது கழக மூத்த உறுப்பினராகவிருந்து கழகத்தின் பல்வேறு பதவிகள் மூலம் கழக வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவரும், தென்மராட்சி பிரதேச உதவி அரசாங்க அதிபராக இருந்தவேளையில் பிரதேச வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டவரும், கிளிநொச்சி மாவட்டச் செயலகமேலதிக அரச அதிபராக கடமையாற்றிய வேளையில் மாவட்ட வளர்ச்சியில் அக்கறையுடன் கடமையாற்றி ஓய்வு பெற்ற

## லயன் கனகசபை துரைராஜா


அவர்கள் 17.02.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**லயன்ஸ் கழகம் - சாவகச்சேரி.**

### மரண அறிவித்தல்கள்

## லயன் கனகசபை துரைராஜா

**( ஓய்வு நிலை மேலதிக அரச அதிபர் - கிளிநொச்சி மாவட்டச் செயலகம், உதவி அரச அதிபர் தென்மராட்சி பிரதேசம் சாவகச்சேரி - சத்தியமொழிபெயர்ப்பாளர்)**



மதவடி ஒழுங்கை, ஈஞ்சடி சுதுமலை வடக்கு, மானிப் பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபை துரைராஜா நேற்று (17.02.2017) வெள்ளிக் கிழமை இறைவடிசேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மதவடி ஒழுங்கை,**
**ஈஞ்சடி, சுதுமலை வடக்கு**
**மானிப்பாய்.**

தகவல்:
குடும்பத்தினர்.
077 662 2120

## இராசையா கோபாலகிருஸ்ணன்

**(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்)**



தோற்றம் 25.12.1938 மறைவு 16.02.2017

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கொக்கு வில் மேற்கு, கொக்குவில் நாகலிங்கம் வீதியை வசிப்பிடமாகவும்கொண்ட இராசையா கோபால கிருஸ்ணன் 16.02.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இராசை யா - சௌபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர் களானகணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதி களின் அன்புமரு மகனும், பகவதி யின் பாசமிகு கணவரும், பிரபாகரன் (கனடா), சுதாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினி, கமலாதேவி, குணமணிதேவி, சிதம்பரநாதன், கார்த்திகேசு, காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்புசகோதரனும், ஜெவானி (கனடா), சுதர்சினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், அக்ஷயா (கனடா), அக்ஷயன் (கனடா), ஜெனன் (கனடா), சஞ்சி (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் (கொக்குவில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாகலிங்கம் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

தகவல்:
குடும்பத்தினர்.

(AJA/485)(11,17) 021 320 2447

### கண்ணீர் அஞ்சலி

**தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக (1979 - 1985) தென்மராட்சி மக்களுக்கு பெரும் சேவையாற்றிய**

## கனகசபை துரைராஜா

அவர்களின் திடீர் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிசங்கம், பிரதேச செயலகம் தென்மராட்சி.**

### மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகவதி சண்முகநாதன்



நுணாவில் மேற்கைப் பிறப்பிட மாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி யோகவதி சண்முகநாதன் (மணி) நேற்று (17.02.2017) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ் சென்ற வர்களான சண்முகம் - நாகம்மா தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ் சென்ற சண்முகநாதனின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சந்திரன் மற்றும் மனோஜாதேவி (பாசம் - கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் முரளீதரன் (கனடா) இன் மாமியும் ஆருஜன், ஆரணி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் மங்கையற்கரசி, புஸ்பமலர் (ஓய்வு நிலை குடும்ப நல உத்தியோகத்தர்), மனோன்மணி, இன்பராணி (இந்தியா), தெய்வேந்திரம் (தம்பிமாமா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனோஜாதேவி முரளிதரன்**
**(மகள் - கனடா)**
S.Sentimertal Way, Brampton,
Ontario L 7A23 Canada.
0016476863793

**மட்டுவில், நுணாவில்**
**ஊரெல்லை வீதி,**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**
077 047 5668



## இராமலிங்கம் தயாபரன்

சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராம லிங்கம் தயாபரன் நேற்று (17.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களா்ன இராமலிங்கம்- இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலசிங்கம்-இந்திராதேவி தம்பதியரின் மருமகனும் ஜமுனாவின் அன்புக் கணவரும் பிரசாந், பிரசன்னா, பிரசாந்தி, பிரியா(10 ஆம் ஆண்டு, யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மபுத்திரி, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் மல்லிகாதேவி, கணேசலிங்கம், ஜெயபாலன், கருணாநிதி, இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனபாலசிங்கம், இந்திராணி, லோகேஸ்வரன், கௌசல்யா, கலா, மீரா, விஜிராஜராஜன், பிறேமிளா(பபா), கெங்காதரன், கேதீஸ் வரன், தர்சினி, மயூரா, ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வம், ஶ்ரீதரன், தேவகுமார், சுமதி, நிரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(19.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தி ஓடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தம்புவத்தை,**
**ஏழாலை மேற்கு,**
**ஏழாலை.**

தகவல்:
குடும்பத்தினர்.
077 211 7760, 077 189 3925

## வடக்கு முழுவதும்...

அன்றைய தினம் காலை 7.30 மணியிலிருந்து 8.30 மணி வரையிலான ஒரு மணி நேரம் பாடசாலை முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் தமது சொந்தக் காணிகளை பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து மீட்பதற்காகப் போராடி வருகின்றனர். பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் 18 நாள்களாகவும், புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் 15 நாள்களாகவும் தொடர்கின்றன. பிலக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் 54 சிறுவர்களும் பாடசாலைக்குச் செல்லவில்லை. பெற்றோருடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலமீட்புக்காகப் போராடும் மக்களுக்கு ஆதரவாக வடக்கு மாகாணம் முழுவதிலும் தொடர் போராட்டங்கள் நடத்த ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக நாளை மறுதினம் திங்கட்கிழமையிலிருந்து திட்டமிட்டவாறு தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

அனைத்துப் பாடசாலை மாணவர்களும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரையிலான ஒரு மணி நேரம் தமது பாடசாலை முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-7)

## வறட்சியால்...

நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மைத்திரிபால சிறிசேன மேற்படி அறிவுறுத்தலை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்போட்டு காணி நிரப்புதல் தொடர்பில் பெருமளவு முறைப்பாடுகள் மக்களிடமிருந்து கிடைத்து வருகின்றது. உரிய அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற முடியாத அலுவலர்கள் பதவியை விட்டு விலக வேண்டும்.

பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்களை உள்ளடக்கிய குழுவை அமைத்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு அடுத்த மாதத்திலிருந்து சிறுபோகம் ஆரம்பமாகும் வரை 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக அரிசி வழங்கப்படவுள்ளது. அதற்கான புள்ளி விவரங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தி முறையாக பகிர்ந்தளிக்க வேண்டும்.

நீர்த்தட்டுப்பாடுள்ள பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவைகளுக்காக வழங்கப்படும் நீர் பயன்படுத்த உகந்ததாக இருக்க வேண்டியது கட்டாயம். மக்கள் குளிப்பதற்காக தூரத்திலிருக்கும் பொதுக் கிணறுகளுக்கு மக்களைக் கொண்டுசெல்ல வேண்டுமாயின், பேருந்துகளைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தவும் - என்றார். (வ-5)

## காணிப்பிரச்சினை...

மக்களுக்கு எடுத்துச் சொல்வேன். இவ்வாறு பிலக்குடியிருப்புக்கு நேற்றுவருகை தந்த, தென்மாகாண சபை உறுப்பினரும் பிக்குவுமான பத்தேகம சுமந்திர தேரர் தெரிவித்தார்.

பிலக்குடியிருப்பு மக்கள் நேற்று 18ஆவது நாளாகவும் தங்கள் தொடர் அறவழிப் போராட்டத்தை நடத்தினர். மன்னார் மாவட்ட குடிமக்கள் குழுவினர், அருட்தந்தையர்கள், கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று நேரில் வருகை தந்து தமது ஆதரவைத் தெரிவித்தனர். புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி, வற்றாப்பளை மாதர் சங்கத்தினர் ஆகியோரும் நேற்று நேரில் சென்று ஆதரவு வழங்கினர்.

தென்மாகாண சபையின் உறுப்பினர் பத்தேகம சுமந்திர தேரர், வேறு இரு தேரர்களுடன் பிலக்குடியிருப்புக்கு வந்தார். அவர்களை ரெலோ அமைபபின் கொள்கை பரப்புச் செயலர் கணேஸ்வரன் அழைத்து வந்தார். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் அவர்கள் கலந்துரையாடல் நடத்தினர்.

'போரில் யாருமே வெற்றி பெறவில்லை. தோல்வியைத் தவிர யாரும் வெற்றி பெறவில்லை. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தென்னிலங்கையிலும் உள்ளனர். வடபுலத்திலும் உள்ளனர். வடக்கு மக்களுடைய பிரச்சினையை தென்னிலங்கை மக்களுடன்பகிர்ந்து அவர்களைத்தெளிவுபடுத்தவுள்ளோம். காணிகளைப் பெற்றுத் தருவோம் என்று உறுதிபடக் கூற முடியாது' என்று பத்தேகம தேரர் தெரிவித்தார். (வ-5-7)

## வடக்கையும்...

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறுவதற்கான பேச்சுக்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் எமது கட்சி ஈடுபடுகின்றது. நாடாளுமன்றப் பெரும்பான்மையின்றி வடக்கு - கிழக்கை ஒருபோதும் இணைக்க முடியாது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் வடக்கு - கிழக்கு ஒன்றிணைக்கப்பட்டதாலேயே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி உதயமானது.

இரண்டு மாகாணங்களையும் இணைப்பதற்கு முஸ்லிம் மக்கள் இன்றும் எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றனர். அவ்வாறு இரு மாகாணங்களையும் இணைக்க வேண்டுமென்றால் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற வேண்டும். அந்தப் பெரும்பான்மையைக் கூடப் பெறமுடியாத அளவில்தான் நாடாளுமன்றத்திலும் நிலைப்பாடு இருக்கின்றது.

வடக்கு - கிழக்கை இணைக்காமல் பிரச்சினைகளுக்கு மாற்றுத் தீர்வைப் பெற முயற்சிக்க வேண்டும் - என்றார். (வ-5)

## புதிய...

இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்தாலும், அவை தொடர்பான நாடாளுமன்ற விவாதம் இன்னமும் நடைபெறாத சூழலிலேயே இந்த அறிவிப்பை மகிந்த அணி வெளியிட்டுள்ளது. பத்தரமுல்லையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புக் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட 6 உப குழுக்களில், நிதி பற்றிய உபகுழுவின் தலைவராக நான் உள்ளேன். நிதி குறித்து, நிதிக் குழுவால் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எமது கருத்துக்கு எதிர்மாறான தீர்மானமொன்றை, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தலைமையிலான கொழும்பு அரசு மற்றும் மாகாண சபைகளுக்கிடையிலான அதிகாரக் குழு முன்வைத்துள்ளது. நாம் நாட்டுக்கு ஏற்றவகையில் நிதியை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்த அறிக்கையொன்றைத் தயாரித்தோம். ஆனால், கொழும்பு அரசுக்கும் மாகாணங்களுக்கும் ஒதுக்கப்படும் நிதி குறித்து, எமது அறிக்கைக்கு எதிர்மாறான அறிக்கையையே, சித்தார்த்தன் தலைமையிலான குழுவினர் தயாரித்துள்ளனர்.

இந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, முற்று முழுதாக கூட்டாட்சி முறையான ஆட்சியைக் கொண்டுவரும் வகையிலேயே அமைந்துள்ளது. மகிந்த அணி இவ்வாறான அரசமைப்புக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை. நாம் அனைவரும் அரசமைப்பு உப குழுவில் இருந்து விலகப்போகிறோம் -என்றார். (வ-5)

## வான் படை...

சொந்தமான காணி. உட்செல்லத் தடை. தேவையில்லாமல் சென்றால் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகுவீர்கள்' என்று அந்த அறிவித்தல் பலகையில் காணப்படுகின்றது. தமிழ் மொழிப் பிழையுடன் அது உள்ளது. பிலக்குடியிருப்பு மக்கள் போராடும் இடத்துக்கு எதிரே உள்ள முகாமின் மறுபுறத்திலேயே இந்தப் பலகை வைக்கப்பட்டுள்ளது. முதன்மை வீதியுடன் உள்ள முகாமின் முன்பக்கத்தில் வைக்கப்படவில்லை. மாறாக முகாமின் பின்பகுதியில் நேற்றைய தினம் இந்த அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (வ-5-7-37)

## போராடும்...

அரசு எந்தக் கவனமும் இன்றி இருப்பது கண்டிக்கத்தக்கது. அவர்களின் பிரச்சினை தொடர்பில் அடுத்த வாரம் இடம்பெறும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் பேசப்பட்டு முடிவுக்கு வலியுறுத்தப்படும். இவ்வாறு யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆயரினால் அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு, கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு அறவழிப் போராட்டம் 18ஆவது நாளாக எந்த முடிவுமின்றி தொடர்வது மனவருத்தம் தருகிறது.

பிலக்குடியிருப்பில் வான் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 84 குடும்பங்களுக்குச் சொந்தமான காணி விடுவிக்கப்பட வேண்டுமென 18 நாட்களாக மக்கள் அறவழிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அத்துடன், புதுக்குடியிருப்பின் மையப்பகுதியில் பிரதேச செயலகத்தின் முன்னால் உள்ள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள 19 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண்டுமென 14 நாள்களாக மக்கள் அறவழிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தமது சொந்த நிலங்களில் கால் பதிக்கும் வரை நகரப்போவதில்லை என அந்த மக்கள் மிக உறுதியாக இருப்பது எல்லாவகையிலும் நீதியானதும் நியாயமானதுமாகும். 30 ஆண்டு கால கொடிய போர் முடிவடைந்து 7 ஆண்டுகளுக்கு மேலாகியும் நல்லெண்ண அரசு தாமாகவே செய்திருக்க வேண்டிய ஒரு பணியை மக்கள் அறவழிப் போராட்டம் நடத்தி 17 நாள்களாகியும் அரசு எந்தக் கவனமும் இன்றி இருப்பது கண்டிக்கத்தக்கது.

இதற்கான தீர்வைக் காண்பது தலைபோகிற காரியமல்ல. நல்லெண்ண அரசு உடனடியாகவே இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண விரைந்து செயற்பட வேண்டும் என்று அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் பேரால் அரசுக்கு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இலங்கையின் அனைத்து மறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்களும் கூடவுள்ள இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அமர்வு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இடம்பெறுகிறது. இந்த அமர்வில் மக்களின் அறவழிப் போராட்டம் பற்றி விரிவாகப் பேசி தீர்வு ஒன்றை அடைய நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்கும்படி நாம் ஏற்கனவே வேண்டி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மறைமாவட்டத்தில் நடந்தேறிய மேய்ப்புப் பணி மாநாட்டிலும் போரினால் காணாமற்போனோர் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாம் கூறியதை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம். நல்ல தீர்வை விரைவில் அடைய இறையாசீர் வழிநடத்துவதாக - என்றுள்ளது. (வ)

## உணவு ஒறுப்பு...

இந்த அறவழிப்போராட்டம் நேற்று 15ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. பிலக்குடியிருப்பு மக்களுடைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் அதேவேளை தமது காணிகளையும் விட்டு இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று தெரிவித்த புதுக்குடியிருப்பு மக்கள் கடந்த 3ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். மக்களுடைய போராட்டத்துக்கு வடக்கில் மட்டுமல்லாது கிழக்கு, தெற்கிலும் பேராதரவு கிடைத்தது. எனினும் மக்களுடைய போராட்டத்துக்கு எதுவித தீர்வையும் கொழும்பு அரசு வழங்காததால் போராட்டத்தில் கடந்த 12ஆம் நாளான கடந்த செவ்வாய்க்கிழமை முதல் 48 மணி நேர சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை மக்கள் ஆரம்பித்திருந்தனர். இந்தப் போராட்டத்தின் மூன்றாவது கட்டம் இன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. புதுக்குடியிருப்பு காணிகளுக்கு உரித்துடைய சிலர் இன்று தமது 48 மணி நேர உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

காலங் காலமாக தாங்கள் வாழ்ந்து வந்த காணிகளை தங்களிடம் ஒப்படைக்கும் வரைக்கும் தங்களுடைய போராட்டம் முன்னெடுக்கப்படும் என பொதுமக்கள் உறுதிபடத் தெரிவித்தனர். கடந்த சில நாள்களாக நாம் முன்னெடுத்து வரும் இந்த அறவழிப் போராட்டத்தை சிலர் கண்டு கொள்ளாது இருப்பது வருத்தம் அளிக்கின்றது. இருந்த போதும் எங்கள் காணிகளுக்குள் செல்லாது போராட்டத்தை நாங்கள் கைவிடப்போவதில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (வ-21,7)

## காய்ச்சல்...

கிளிநொச்சி இந்து கல்லூரியில் கல்வி பயிலும் கிளிநொச்சி ஜெயந்தி நகரைச் சேர்ந்த செல்வராசா துளசி (வயது - 17) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த மாணவியின் குருதி மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்பு மருத்துவ ஆய்வு நிலையத்துக்கு அனுப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சல் காரணமாக குறித்த மாணவி கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். கிசிச்சையின் பின்னர் வைத்தியசாலையில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். கை, கால்கள் குத்தி உளைவதாக தெரிவித்த மாணவி மீண்டும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் அது பயனளிக்காது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மாணவி உயிரிழந்தார்.

மாணவிக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டமைக்கான அறிகுறிகளே அதிகளவாகக் காணப்படுகின்றன. மாணவி டெங்கு அல்லது எலிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்திருக்கலாம். எனினும் மாணவியுடைய குருதி மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை கொழும்பிலிருந்து வந்த பின்னர்தான் நோய்த் தொற்றுத் தொடர்பில் கூற முடியும் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

டெங்குக் காய்ச்சல் ஒரு நோயாளிக்கு மூன்று நிலைகளில் தாக்குகின்றது.அதில் ஒன்று காய்ச்சல் ஏற்பட்டு பின்னர் அது சுகமடைந்த நிலையில் உடலில் டெங்குத் தொற்று தீவிரமடைவது. எனவே காய்ச்சல் ஏற்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் உடல் வழமைக்கு மாறாகவும், கை, கால்களில் குத்து வலி போன்ற அறிகுறிகள் தொடர்ந்தும் காணப்படும். இவ்வாறு காணப்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடி உரிய பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய்த் தொற்று வேகமாகப் பரவி வருவதனால் மக்கள் நுளம்புப் பெருக்கம் ஏற்படாத வகையில் சுற்றுச் சூழலை வைத்திருக்க வேண்டும் என்று கிளிநொச்சி வைத்திய சாலை மருத்துவர்கள் மக்களிடம் கேட்டுள்ளனர். (வ-21,6,35)

## முதல்வராக...

பினர் களுக்கு உள்ள நம்பிக்கை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்த தமிழக சட்ட சபை இன்று கூடுகிறது. முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கும், அவரது அமைச்சரவைக்கும் எதிராக வாக்களிக்க தி.மு.கழகமும் காங்கிரஸும் தீர்மானித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழக சட்டசபையில் மொத்தம் 235 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 118 உறுப்பினர்களின் ஆதரவை முதல்வர் பழனிச்சாமி பெறவேண்டும். அவ்வாறு ஆதரவு பெற்றால் மட்டுமே அவரால் முதல்வராகத் தொடர முடியும். இவ்வாறான பரபரப்பான நிலையில் தி.மு. கழகமும் காங்கிரஸும் எதிராக வாக்களிக்க முடிவெடுத்துள்ளமை மேலும் பரபரப்பை அதிகரித்தது. (வ-ம)

# தந்தையும் புதல்வர்களும்

ஒரு தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் எப் போதும் தங்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டிருப்பர். இதனால் மனம் வருந்திய தந்தை அவர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த எவ்வளவோ அறிவுரைகளைக் கூறிப் பார்த்தார். பயன் எதுவும் கிடைக்கவில்லை. மீண்டும் மீண்டும் யோசனை செய்தார். ஒரு நாள் தன் பிள்ளைகளை அழைத்து ஒவ்வொருவரிடமும் ஒரு கட்டு சுள்ளி விறகுகளைக் கொடுத்து, அக்கட்டை அப்படியே முறிக்குமாறு கூறினார். நால்வரும் தனித்தனியே தங்கள் முழுப் பலத்தையும் உபயோகித்து சுள்ளிக் கட்டை உடைக்க முயன்றனர். ஆனால் எவராலும் அதை உடைக்க முடியவில்லை. பின்னர் தந்தை சுள்ளிகள் சேர்ந்த அக்கட்டை அவிழ்த்து தனித் தனியே போட்டு அவற்றை முறிக்கும் படிகூறினார். அவர்கள் நால்வரும் மிகச் சுலபமாக சுள்ளிகளை முறித்து விட் டனர். இப்போது தன்பிள்ளைகளைப் பார்த்து தந்தை "சுள்ளிகள் கட்டாக இருந்த போது எவராலும் அவற்றை முறிக்க முடியாது போயிற்று. அவற்றைத் தனித் தனியே பிரித்து போட்ட போது எல்லாவற்றையும் சுலபமாக முறிக்க முடிந்தது. பார்த்தீர் களா? இது போலவே தான் வாழ்க்கையிலும் நீங்கள் சகோதரர்கள். தனித் தனியே சண்டையிட்டு பிரிந்திருந்தால் உங்களுக்கு கெடுதிகள் பல ஏற்பட வாய்ப்புள்ளது. நால்வரும் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தால் எவரும் உங்களை அசைக்க முடியாதென்றார். இதனைக் கேட்ட புதல்வர்கள் நால்வரும் பின்வந்த நாள்களில் திருந்தி மிக ஒற்றுமையாக சிறப்புடன் வாழ்ந்தார்கள்.



**ஒற்றுமையே பலம்-**
**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு**
**ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு**



# திருக்குறள்

திருக்குறள் நூல் திருவள்ளுவரால் எழுதப்பட்டது. இந்த நூலில் 133 அதிகாரங்களும் 1330 குறள்களும் உள்ளன. திருவள்ளுவர் 40ஆவது அதிகாரத்தில் கல்வி பற்றிக் கூறுகிறார்.

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக
   ஒருவன் கற்க வேண்டிய நூல்களைத் தெரிந்து அவற்றை சந்தேக மற தெளிவாகக் கற்க வேண்டும். கற்றபின் கற்றவை கூறும் நல்வழியில் வாழவேண்டும்.
2. எண்ணென்ப ஏனை யெழுத் தென்ப இவ் விரண்டுங்
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு
   உலகில் வாழ்பவருக் கெல்லாம் கணிதமும் (கணித அறிவு) இலக்கணமும் (இலக் கணத்தோடுசேர்ந்தமொழி அறிவு) இரண்டு கண்களைப் போன்று முக்கியமானவையாகும்.
3. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
   புண்ணுடையவர் கல்லா தவர்
   கற்றவர்களையே கண்ணுடையவரென்று சொல்லாம் கல்லாதவர்கள் முகத்தில் இரண்டு கண்கள் இருந்தும் அவைகள் புண்கள் போன்றவையே.
4. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத் தூறும் அறிவு
   மண்ணைத் தோண்டத் தோண்டத்தான் கிணற்றில் நீர் ஊறி வரும். அதே போலவேதான் மனிதரிடத்தில் கற்கக் கற்கவே அறிவு பெருகும்.
5. கேடில் விழுச் செல்வங் கல்வியொருவற்கு
   மாடல்ல மற்ற யவை
   ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் கல்வியேயாகும். மற்றைய செல்வங்களெல்லாம் நிலையற்றவையும் அழியக் கூடியவையுமாகும்.


# தீ

ஒரு பொருள் எரிவதால் உண்டாகும் வெப்பமும் ஒளியுமே தீ யாகும். பண்டைக் காலத்திலிருந்தே மனிதனுக்கு தீ பயன்பட்டு வந்துள்ளது. ஆதிகால குகை மனிதர்கள் குளிர் காலத்தில் தீ மூட்டிக் குளிர் காய்ந்தனர். கொடிய விலங்குகளை விரட்டவும் தீயைப் பயன்படுத்தினர். அணைந்து விடாது தீயைப் பாது காத்தும் வந்துள்ளனர்.

இயற்கை நிகழ்ச்சிகள் சிலவற்றினால் உண்டான தீயை முதன் முதலில் மனிதன் பயன்படுத்தினான். எரிமலை வெடித்து கக்கிய குழம்பால் காடுகள் எரிந்திருக்கும். மின்னல் தாக்கி மரங்கள் எரிந்திருக்கும் இவற்றைக் கண்ட மனிதன் நாளடைவில் தீயைத் தோற்றுவிக்க முயன்றிருப்பான். நன்கு காய்ந்த இரு மூங்கில் தடிகளை ஒன்றோடொன்று உராய்ந்தால் தீப்பொறி தோன்றும் எனக் கண்டான். அதனால் ஒரு குச்சியைச் செங்குத்தாக ஒரு பலகை மீது வைத்துக் கடைந்து தீப்பொறியை உண்டாக்கினான். நாளடைவில் இரும்புத்தாது கொண்ட சிக்கி முக்கிக் கற்களை ஒன்றோடொன்று தேய்த்து தீப்பொறியை உண்டாக்கினான். இன்று நாம் வெகு இலகுவாக தீக்குச்சியைத் தீப் பெட்டியில் உரசுவதனால் தீயை உண்டாக்கி விடுகின்றோம். சமையல் வேலைகளுக்கு மட்டுமல்ல, விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் தீயை இன்று பல்வேறு தொழில்களிலும் பயன்படுத்துகின்றோம்.



# வர்ணம் தீட்டுவோம் வாருங்கள்



# வெள்ளி



கண்ணைச் சிமிட்டல் போலே
கன்னம் கரிய இருளில்
விண்ணில் ஒளிரும் வெள்ளி
விந்தை நிகழ்வு தம்பி

நீலச் சேலை மீது
நிறைந்த பூக்கள் போல
கோலம் காட்டும் வெள்ளி
கொள்ளை இன்பம் தம்பி

பந்தல் உள்ளே தொங்கும்
பளிங்கு விளக்குப்போல
இந்த வெள்ளிக் கூட்டம்
இனிமை ஊட்டும் தம்பி

வைர மணிகள் அள்ளி
வானில் இறைத்ததாரோ?
உயரத் தோன்றும் வெள்ளி
உனது கைக்கு வருமோ?

# தடைகள் தாண்டுவோம்

உற்சாகமாக விரைந்து செல்லும் எறும்புகளைக் கவனியுங்கள். அவ்வாறு செல்லும் ஒரு எறும்பின் பாதையில் விரலை வைத்து தடுத்துப் பாருங்கள். அது வந்த வழியே திரும்பிச் செல்லாது. உடனேயே அந்த விரலைச் சுற்றி வந்துமுன்னே செல்வதற்கு வழி ஏதும் இருக்கிறதா என நாலா பக்கமும் தேடும். எத்தனை முறை அப்படித் தடைகள் போட்ட போதிலும், அது எப்படியாயினும் தன் பயணத்தைத் தொடரும், எறும்புகள் செத்து மடியும் வரை தம் உற்சாகத்தை இழப்பதும் இல்லை, நம்பிக்கையை விடுவதும் இல்லை.

## பேசிப் பழகுவோம்

சிறு புல்லைப் பறித்து அதன் வேர்களைப் பாருங்கள். என்னவொரு உற்சாகத்துடன் பூமியின் உள்ளே அவை கிளை விட்டு பலமாக ஊன்றி நிற்கின்றன. மரமொன்றின் கிளைகளை வெட்டுகிறோம். வெட்டிய பகுதியில் அது மேலும் பல கிளைகளைப் பரப்பி துளிர்களை விடுகின்றது. அடியோடு அந்த மரத்தை வெட்டிய போதும்கூட, வேர்ப் பகுதிகளில் இருந்து மரம் உயிர்ப்பு அடைகிறது. உலகில் வாழும் எல்லா உயிர்ச் சக்திக்கும் சலிப்பு என்பதே கிடையாது. மனிதராகிய எமது மனதில் தான் சலிப்பும் அவநம்பிக்கையும் ஏற்படுகிறது.

மரத்தை வெட்டுவது போன்றதுதான் எமது வாழ்க்கைப் பாதையில் ஏற்படும் தடைகள். மரம் வெட்டிய இடத்திலிருந்து தளைவிடுவது போன்றதே எமக்குள் இருக்கும் உறுதியும் நம்பிக்கையான செயற்பாடும், வாழ்க்கையில் நாம் தோல்விகளைக் கண்டு மனம் தளரக் கூடாது. மேலும் அப்படி எமக்கு ஏற்படுபவை தற்காலிகத் தடைகள் மட்டுமே தோல்விகளல்ல.

தோழர்களே! எறும்புகளைப் போலவும் மரங்களைப் போலவும் இருந்து எமது வாழ்வில் குறுக்கிடும் தடைகளைத் தாண்டி, எமது இலக்கை அடைய நம்பிக்கையுடனும் விடா முயற்சியுடனும் செயற்படுவோம்.

**தடைக் கற்களே** நாம் ஏறிச் செல்லும் **படிக்கற்கள்**

# வெற்றியின் வழிகாட்டி

அன்பு காட்டு; ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு; ஆனால் ஏமாந்து விடாதே
பணிவாய் இரு; ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு; ஆனால் கோபப் படாதே
சிக்கனமாய் இரு; ஆனால் கருமியாய் இராதே
வீரனாய் இரு; ஆனால் போக்கிரியாய் இராதே
சுறு சுறுப்பாய் இரு; ஆனால் பதற்றப் படாதே
தருமஞ் செய்; ஆனால் ஆண்டியாகி விடாதே
பொருளைத் தேடு; ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு; ஆனால் கடவுளை மறவாதே



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 18

**இளைஞரின் கால்பந்தாட்டம்**

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து மன்னார் ஜோசவ்வாஸ் அணி மோதவுள் ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ராரின் துடுப்பாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிறன்ட்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. மதியம் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செவ்வானம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யுனிபைட் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை, கழகங்களுக்கு இடையில் தேசிய ரீதியில் முன்னெடுத்துவரும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று குருநாகல் மலிகதேவகல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கண்டி அணி மோதவுள்ளது.

**விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்தத் தொடர்**

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. பி.ப. ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. (ம-23)


# யாழ். பல்கலையின் தடகளத் தொடர்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 2016 ஆம் ஆண்டு புதுமுக மாணவர்களுக்கான தடகளத் தொடர், நேற்று ஆரம்பமானது. இன்றும் நாளையும் தொடர் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும், நாளைக் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் போட்டிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி ஆர்.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பெண்கள் தடகள அணியின் முன்னாள் தலைவியும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரியுமான வாசுகி சுஜீவன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)





# இமையாணன் அ.த.க. வித்தி. கால்பந்தாட்டத்தில் சம்பியன்

கரணவாய், பெப். 18

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இமையாணன் அ.த.க. வித்தியாலயம் சம்பியனானது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இறுதியாட்டத்தில், இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தை எதிர்த்து கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை அணி மோதியது.

இரு அணிகளும் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் கிடைத்த ஒரு சில வாய்ப்புக்களும் வீணடிக்கப்பட்டன. எந்த அணியினதும் ஏக ஆதிக்கம் இல்லாமல் நகர்ந்தது ஆட்டம். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் இமையாணன் அ.த.க. வித்தியாலய அணி வெற்றி பெற்றது. (ம-108)



# சதுரங்கம், கரம்

யாழ்ப்பாணம், பெப். 18

வலி. கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான சதுரங்கம், கரம் போட்டிகள் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். காலை 8 மணி முதல் போட்டிகள் நடைபெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-1)

# றைக்கொண்டோ இன்று

யாழ்ப்பாணம், பெப். 18

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாவட்ட அணிகளுக்கிடையிலான இருபாலாருக்குமானதைக்கொண்டோ முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இன்று காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளது. (ம-422)

# கரவெட்டி பி.செயலக தடகளம்

யாழ்ப்பாணம், பெப். 18

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இருபாலாருக்குமான 5 ஆயிரம் மீற்றர், இருபாலாருக்குமான 200 மீற்றர், பெண்களுக்கான குண்டு எறிதல், இருபாலாருக்குமான நீளம் பாய்தல், இருபாலாருக்குமான உயரம் பாய்தல், இருபாலாருக்குமான 100 மீற்றர், இருபாலாருக்குமான தட்டெறிதல், இருபாலாருக்குமான 400 மீற்றர், இருபாலாருக்குமான ஆயிரத்து 500 மீற்றர், இருபாலாருக்குமான ஈட்டி எறிதல், இருபாலாருக்குமான முப்பாய்ச்சல், இருபாலாருக்குமான கோலூன்றி பாய்தல் நான்கு நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், நான்கு நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (ம-422-108)



# ஆவரங்கால் இந்து இளைஞரின் இறுதிகள்

யாழ்ப்பாணம், பெப். 18

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் இரு பிரிவுகளாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று இரவு நடைபெறவுள்ளன.

முதலில் இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும், 'ஏ' பிரிவினருக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், அ.பரஞ்சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23-422-108)

# வீரர்கள் போர்; ஸ்கந்தவரோதயா முன்னிலை

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்கள் போர் துடுப்பாட்டத்தில் நேற்றைய முதல்நாள் நிலவரத்தின்படி ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜசிந்தன் 31 ஓட்டங்களையும், சுஜீவன் 15 ஓட்டங்களையும், முரளி 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சோபிசன் 6 இலக்குகளையும், குகலக்சன் 2 இலக்குகளையும், லக்சன், சஜீவன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 177-8 என்றுள்ளது. அதிகபட்சமாக சயந்தன் 56 ஓட்டங்களைக் குவித்தார்.

அஜிந்தன் 51 ஓட்டங்களுடனும், கோகுல லக்சன் 9 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக இன்று களமிறங்கவுள்ளனர்.

பந்துவீச்சில் டினேஸ் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். சாருசன். கனிஸ்ரன், யனுசன், சுஜீவன் நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

நேற்றைய முதல்நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். (ம)





வீரர்களின் அறிமுகத்தின்போது



# ஆப்கானிஸ்தானிடம் சிம்பாப்வே தோல்வி

ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில், நேற்றுமுன்தினம் நடந்த முதலாவது ஆட்டத்தில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 12 ஓட்டங்களால் வென்றது ஆப்கானிஸ்தான்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் சகல இலக்குகளையும் இழந்து 215 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் ஸ்ரானிக்சை 50 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கிரீமர் 3 இலக்குகளை வீழத்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே, 27.2 பந்துப்பரிமாற்றங்களில் 99 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 12 ஓட்டங்களால் வென்றது ஆப்கானிஸ்தான். (ம)


# தென்னாபிரிக்கா அசத்தல் வெற்றி

நியூசிலாந்துக்கு எதிரான முதலும் கடைசியுமான ஒரேயொரு ரி-20 ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி பதற்றமில்லாத வெற்றியைப் பதிவு செய்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் குயின்டன் டி ஹொக். ஓட்ட மெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார் குயின்டன் டி ஹொக். அம்லா, பிளாசிஸ் இணைய சரிவில் இருந்து மீண்டு அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தது தென்னா பிரிக்கா. மேலதிகமாக ஓர் இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட் டது தென்னா பிரிக்க அணி. 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார் பிளாசிஸ். அரைச்சதம் கடந்து 62 ஓட்டங் களுடன் பவிலியன் திரும்பினார் அம்லா. வில்லியர்ஸ், டுமினி இருவரும் மத்திய வரி சையில் இரட்டை இலக்கங்களில் ஓட்டங்களைச் சேர்க்க முடிவில் 185 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்க அணி.

பந்துவீச்சில் போல்ட், கிரான்ட்ஹோம் இருவரும் தலா 2 இலக்குகளையும், வீலர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்ப இணை மிகவும் ஏமாற்றத்தை வழங்கியது. பிலிப்ஸ். முன்றோ இருவரையும் முறையே 5 ஓட்டங்களுடனும் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் வீழ்த்தினார் மொறிஸ். 13 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் அணித் தலைவர் வில்லியம்சன். மத்திய வரிசையில் பேர்ஸ் குவித்த 33 ஓட்டங்களே அதிகபட்சம். கிரான்ட்ஹோம், ஹோஞ்சி இருவரையும் வீழ்த்தினார் தாகிர். முடிவில் 107 ஓட்டங்களுக்கு சகல இலக்கு களையும் இழந்தது நியூ சிலாந்து. 78 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வென் றது.. 5 இலக்குகளை வீழ்த்திய தாகிர் ஆட்ட நாயகனானார். (ம)



## தலைமையால் துடுப்பாட்டம் பாதிக்காது

### என்கிறார் ரூட்

தலைமைத்துவத்தால் தனது துடுப்பாட்டத்தில் வீழ்ச்சி ஏற்படாது என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ரூட் தெரிவித்தார்.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக இருந்த அலிஸ்டர் குக், பதவியில் இருந்துவிலகியதை அடுத்து ரூட் தலைவராக நியமிக்கப்பட்டார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அணியின் தலைமைத்துவத்தை ஏற்றிருப்பதை சிறந்த வாய்ப்பாக கருதுகிறேன். இது நான் இன்னும் சிறப்பாக செயற்பட நிச்சயம் உத்வேகம் அளிக்கும். தலைமைத்துவத்தால் எனது இயல்பான ஆட்டத்தில் வீழ்ச்சி ஏற்படாது. கோக்லி, சிமித், வில்லியம்சன் போல் நானும் சாதிப்பேன் என ரூ ட் மேலும் தெரிவித்தார். (ம)

# முதலாவது ரி-20 ஆட்டத்தில் ஆஸியை வென்றது இலங்கை

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது இலங்கை.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆஸியின் ஆரம்ப வீரர்களாக பின்ஞ் மற்றும் கிலிஞ்சர். ரி-20 ஆட்டங்களுக்கு ஏற்ப அதிரடி அமையவில்லை. முதல் பத்துப் பரிமாற்றங்கள் வரை இலக்குச்சரிவை எதிர்கொள்ளாத போதிலும் 70 ஓட்டங்களை மட்டுமே ஆஸ்திரேலிய அணி பெற்றிருந்தது. அணி 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கிலிஞ்சர். 43 ஓட்டங்களுடன் பின்சை வீழ்த்தினார் குணரத்ன. ஹெட் 31 ஓட்டங்களைக் குவித்தார். ஹென்றிக்ஸ், பல்க்நெர் இரு வரும் மத்திய வரிசையில் கிடைத்த வாய்ப்பை சிறப்பாகவே பயன்படுத்தினர். முடிவில் ஆஸ்திரேலியா 168-6.

பந்துவீச்சில் மலிங்க தனது மீள்வருகையை சிறப்பாகவே நிகழ்த்தினார். அவர் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். பண்டார, சண்டகன், குணரத்ன மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு அணித் தலைவர் தரங்க ஓட்டமெதனையும் பெறாது ஏமாற்றினாலும், இளம் வீரர்களான டிக்வெல்ல 30 ஓட்டங்களையும், மொனவீர 44 ஓட்டங்களையும், குணரத்ன 52 ஓட்டங்களையும் விளாச இறுதிப் பந்தில் இலக்கை அடைந்து வென்றது இலங்கை. (ம)

**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

**SLAS**
**OPEN/LIMITED**

**ஆரம்பம்** : 19.02.2017 ஞாயிறு 9.00 மணி தொடர்ந்து பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்கள்.

Note :
இறுதியாக நடைபெற்ற SLAS/SLEAS போட்டிப்பரீட்சையில் கூடுதலான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டது இந்நிறுவனத்தில் மட்டுமே!

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ் நகர்.
077 469 6695

# யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தால் தேசியத்தில் சாதித்த வீர, வீராங்கனைகள் கௌரவிப்பு




யாழ்ப்பாணம், பெப். 18 கடந்த வருடம் நடைபெற்ற இளைஞர் கழக அணிகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் அணிகள் மற்றும் வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வொன்று யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

திருநெல்வேலி லக்ஸ்மி திருமண மண்டபத்தில், நேற்றுமாலை இந்த நிகழ்வு இடம்பெற்றது. கடந்த வருடம் சம்பியனான பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி, கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் மற்றும் கபடிப் போட்டியில் மூன்றாம் இடத்தையும், கயிறு இழுத்தல் போட்டியில் இரண்டாம் இடத்தையும், பெற்றுக்கொண்ட பெண்கள் அணியினர், ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் சம்பியனான ஆண்கள் அணி, கூடைப்பந்தாட்டத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஆண்கள் அணி ஆகியன கௌரவிக்கப்பட்டன. ஈட்டி எறிதலில் வெள்ளிப்பதக்கம் வென்ற செந்தூரன், ஆண்களுக்கான தட்டு எறிதலில் வெண்கலம் வென்ற பிரகாஸ்ராஜ் மற்றும் தேசிய மட்ட கலாசாரப் போட்டியில் வெற்றி பெற்றோரும் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக த.சித்தாத்தன் மற்றும் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம் கௌரவ விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரட்ணம், சுகிர்தன், பரஞ்சோதி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ம-23)

**பணியாளர்கள் தேவை**

- எழுது வினைஞர் (ஆண்)
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (ஆண்)



வவுனியாவில் உள்ள எமது நிறுவனத்திற்கு எழுது வினைஞர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை.

உங்கள் சுயவிவரக்கோவையுடன்
**20.02.2017** திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்.

உதயன் அலுவலகம்
இல.60,பஸ்தரிப்பு நிலையம், வவுனியா.
(பஸ்தரிப்பு நிலைய மேல்மாடி)

# துடுப்பாட்டத்தின் சிறந்த தூதுவர் டோனி

## கும்ளே புகழாரம்

இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி, துடுப்பாட்டத்தின் சிறந்த தூதுவர் என்று புகழாரம் சூட்டினார் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் கும்ளே.

ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கு இடையில் நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் புனேயில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இரு அணிகளும் தீவிர வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பயிற்சியாளர் கும்ளேயும் கலந்து கொண்டார். டோனி தொடர்பில் விவரிக்கும்படி அவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்குப் பதில் வழங்குகையிலேயே கும்ளே இவ்வாறு தெரிவித்தார்.

டோனி, ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் இருந்து வந்திருக்கிறார். ராஞ்சி போன்ற வறுமையான இடத்தில் இருந்து வந்து இந்திய அணிக்கு தலைவராகத் திகழ்வ தென்பது வார்த்தைகளால் சொல்லக் கூடிய அளவுக்கு இலகுவான விடயம் அல்ல. டோனி 10 ஆண்டுகள் தலைமைத்துவத்தில் இருந்துள்ளார். இது மிகவும் கடினமானது. ஒரு தலைவராக அவர் அணிக்கு அர்ப்பணித்துள்ள பணிக்குத் தலை வணங்குகிறேன். டோனி துடுப்பாட்டத்துக்குப் பொருத்தமான தூதராக விளங்குகிறார். அணி நெருக்கடியான நிலையில் இருக்கும் போது அவர் என்ன சிந்திக்கிறார் என்பதை யூகிக்க முடி யாது. அவரது தலைமையில் 2 உலகக் கிண்ணங்கள், சம்பியன் கிண்ணம் உள்ளிட்டவற்றை வென்றமை அற்புதமான தருணங்கள் என கும்ளே மேலும் தெரிவித்தார்.

(ம)

**வீடு வாடகைக்குண்டு**
கொக்குவில் கிழக்கு, கொக்குவில் கருவேப்பிலை லேன், திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 077 101 6407

**ஆடு, நாய் விற்பனைக்கு**
சணல், ஜெமினாபாரி வகை ஆடுகளும், குட்டிகளும், அல்சேசன், பொம்மேரியன், டோமன் வகை பெரிய நாய்களும், குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு - 077 101 6407

**Qutar Airport Work**
கட்டார் நாட்டில் உள்ள விமான நிலையத்தில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலை வாய்ப்பு.
Qutar Airports Corgo Section Hondler Helpers 50 பேர்
சம்பளம் 10 hour, 110 QR மூன்றுவேளை உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். வயது 20 -35, எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை Station view, Vavuniya Passport Office . அருகில் உள்ள INDRAN'S Hotel இல் நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது. உங்கள் Pass port சகிதம் நேரில் சமுகமளிக்கவும். உடன் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்யவும்.
Reliance International Consultants (Pvt/Ltd)
No - 142, New Moor Street, Colombo - 12.
(LL.NO- 2772)
077 721 5291, 011 524 4146

**SLAS**
**Open/ Ltd**
பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்
ஆரம்பம்
சனி (இன்று)
11.00 - 4.00
ஞாயிறு (நாளை)
1.00- 5.00
076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)



# மார்லன் சாமுவேல்ஸ் பந்துவீச அனுமதி

மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான மார்லன் சாமுவேல்ஸ், தனது பந்துவீச்சில் மாற்றம் கொண்டு வந்ததை அடுத்து அவர் பந்துவீசுவதற்கு அனுமதி கொடுத்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

விதிமுறைகளுக்கு முரணாகப் பந்துவீசுகிறார் என்று தெரிவித்து 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சாமுவேல்ஸ் பந்துவீச பன்னாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்தது. கடந்த மாதம் 29 ஆம் திகதி சாமுவேல்ஸ் தனது பந்துவீச்சு முறைமையில் மாற்றம் கொண்டு வந்தார். இது பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிகளுக்கு உட்பட்டு இருந்ததை அடுத்து அவர் மீதான தடை நீக்கப்பட்டது.

(ம)

**வேலையாள்கள் தேவை**

எலக்ரோனிக்ஸ் பொருள்கள் விற்பனை மற்றும் **REPAIR (Installation)** - செய்யும் எமது நிறுவனத்திற்கு கொழும்பில் வேலைக்கு கீழ் காணும் வெற்றிடம் உள்ளது.

- **டிஸ் ஆண்டெனா பிற்றிங் வேலை தெரிந்த டெக்னீசியன்** (சம்பளம் 30000/= கமிஷன், உணவு, தங்குமிடம் இலவசம்)
- **எலக்ரோனிக்ஸ் டெக்னீசியன்** (சம்பளம் 40000/= உணவு, தங்குமிடம் இலவசம்)
- **உதவி விற்பனையாளர் - ஆண்/ பெண்** (Counter Sales) (சம்பளம் 20 000/=)

**(ஆண்களாயின் உணவு, தங்குமிடம் இலவசம்)**

தொடர்பு கொள்ளவும்
குமார் - 077 771 0785

**பாதுகாப்பு சேவை (Security Service) பெற்றுக் கொள்ளல்**

பனை அபிவிருத்திச் சபை பாதுகாப்பு சேவை பெற்றுக் கொள்வதற்காக சேவையை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகளை கோரியுள்ளது. எதிர்வரும் 27.02.2017 ஆம் திகதி திங்கட் கிழமை மு.ப. 10.00 மணிக்கு முன்பு தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை,**
**தேசிய வீடமைப்புச் செயலகம்,**
**முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**அலுவலக பாவனைக்கு இடம் தேவை**

அங்கர் பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளை அலுவலகம் அமைப்பதற்கு இடம் தேவைப்படுகின்றது. நல்லூர் மற்றும் யாழ்ப்பாணக் கச்சேரியை அண்டிய பிரதேசங்கள் மிகவும் பொருத்தமானது. மற்றும் யாழ் நகர பிரதேசங்களும் விரும்பத்தக்கது. கடை அமைப்பாகவோ, வீடாகவோ, மேல் மாடி பகுதியாகவோ இருக்கலாம்.
வழங்குவதற்கு விருப்பம் உள்ளவர்கள் கீழ் உள்ள தொலைபேசிக்கு தொடர்புகொள்ளவும்.

தலைமைக்காரியாலயம், அங்கர் பாதுகாப்பு சேவை
No 255B, புகையிரத வீதி, குருமன் காடு, வவுனியா.
077 239 2850, 024 222 8169
(V.225)
(22.17)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.